விலை : 20.00 website : www.valampurii.lk Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 05 புதன்கிழமை (18.05.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 151

உலகெங்குமுள்ள உறவு களுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம்
ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392
(C-4630)

# முள்ளிவாய்க்கால் அவலம்;
# வலி நிறைந்த நாள் இன்று

## உயிரிழந்த உறவுகளை சுடரேற்றி அஞ்சலிப்போம்



(யாழ்ப்பாணம்)

இற்றைக்கு ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் இடம் பெற்ற இறுதி யுத்தத்தின் போது இதே நாளில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் முள்ளி வாய்க்காலில் படுகொலை செய்யப்பட்டனர். இந்த நாள் தமிழ் மக்கள் நெஞ்சங்களில் மீள முடியா நினைவுகளை தந்த வலி நிறைந்த நாள். எம் உறவுகள் எம் கண்முன்னே கொல்லப்பட்ட நாள். இந்த நாள் ஒட்டுமொத்த தமிழினத்தின் துக்க நாள். இன்றைய தினத்தில் அனைத்து தமிழினமும் தம் உறவுகளை நினைந்து வீடுகளில் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்து மாறு பொது அமைப்புக்கள், கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன. (24ஆம் பக்கம் பார்க்க)

## அடைமழை காரணமாக வடக்கில் 23 ஆயிரத்து 523 பேர் பாதிப்பு

### 456 வீடுகள் சேதமடைவு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் கடந்த 3 நாட்கள் தொடர்சியாக பெய்துவரும் கடும் காற்றுடன் கூடிய அடைமழை காரணமாக வடமாகாணத்தில் 6 ஆயிரத்து 608 குடும்பங்களைச் சேர்ந்த 23 ஆயிரத்து 523 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 456 வீடுகள் சேதமடைந்துள்ளன.

வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் நேற்றைய தினம் பிற்பகல் வரை பெற்றுக் கொள்ளப்பட்ட தரவின்படி அதிகளவான மக்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 24ஆம் பக்கம் பார்க்க....

## தீக்காயமடைந்த பெண் மரணம்

(புத்தூர்)

புத்தூர் பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக தனக்குத் தானே தீ மூட்டி தீக்காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் சிகிச்சை பெற்று வந்த குடும்ப பெண் ஒருவர் 5 நாட்களின் பின்னர் சிகிச்சை பலன் இன்றி நேற்றையதினம் யாழ்போதனா வைத்திய சாலையில் உயிரிழந்துள்ளார்.


புத்தூர் மேற்கு கலைமதி பகுதியினை 23ஆம் பக்கம் பார்க்க....

## சமத்துவத்துடன் கூடிய உரிமை தமிழ் மக்களுக்கு கிடைக்கும்!

### ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கையில் தமிழ் மக்களுக்கு சமத்துவத்துடன் கூடிய உரிமை கிடைக்கும் என வாழும் கலை நிறுவனத்தின் ஸ்தாபகர் ஸ்ரீஸ்ரீ ரவி



சங்கர் குருஜி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கையில் தற்போது அமைதியான சூழ்நிலை நிலவிவரும் நிலையில் இதனூடாக தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

ஈழத் தமிழர்கள் உலகம் முழுவதும் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் கலை கலாசாரத்தை அவர்கள் பாதுகாத்து 24ஆம் பக்கம் பார்க்க....

## விலக்கக் கோருவதால் தளரமாட்டேன் - கூரே

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர் பதவியிலிருந்து என்னை விலக்குமாறு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை தொடர்பாக நான் கவலையடையவில்லை.

அதனால் தளர்ந்து போகவுமில்லை என்று வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்தார். 24ஆம் பக்கம் பார்க்க....

## கடும் காற்று தொடரக் கூடும்

(கொழும்பு)

நாட்டை சுற்றியுள்ள கடற் பிரதேசங்களில் கடுமையான காற்றுடன் கூடிய காலநிலை தொடர்ந்தும் நிலவக்கூடும் என வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

நாட்டின் நிலவிய தாழமுக்க மண்டலம், 24ஆம் பக்கம் பார்க்க....

## 10 கிலோ கேரள கஞ்சா இளவாலைப் பகுதியில் மீட்பு

### ஒருவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் நேற்று காலை செவ்வாய்க்கிழமை வீடொன்றில் இருந்து 10 கிலோ கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாக இளவாலை பொலிஸ் நிலைய பொறுப்பதி 24ஆம் பக்கம் பார்க்க....

### நாடு முழுவதும் பேரிடர்

## கனமழை, நிலச்சரிவினால் 3 தினங்களில் 11 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் பெய்து வரும் கனமழை மற்றும் நிலச்சரிவு காரணமாக கடந்த 3 தினங்களில் இதுவரை 11 பேர் பலியாகி உள்ளனர். மேலும், 5 பேர் காணாமல் போயுள்ளனர். மேலும் கொழும்பு உட்பட பல மாவட்டங்களிலும் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

நேற்று அதிகாலை மத்திய மாகாணம் கண்டி மாவட்டத்தில் உள்ள கடுகண்ணாவ பிரதேசத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி ஒரு பெண், இரு குழந்தைகள் உட்பட 6 பேர் 24ஆம் பக்கம் பார்க்க....

## தரம் - 5




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



## கந்தையா தனபாலசிங்கம்

### (மெக்கானிக் மணியம்)

யாழ்.பளை வேம்பொடுகேணியை பிறப்பிடமாகவும், கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தனபாலசிங்கம் கடந்த 15.05.2016 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், தவமலர் அவர்களின் பாசமிகு கணவரும், நிறஞ்சன் (இத்தாலி), சகிலன் (ஆசிரியர் - கிளி/பிரமந்தனாறு மகா வித்தியாலயம்), வாசுகி (இலண்டன்), சஞ்சீவன் (கிளி/மாவட்ட செயலகம் - விலை நிர்ணய கட்டுப்பாட்டு சபை உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான தவமலர், செல்வகுலசிங்கம் மற்றும் தருமகுலசிங்கம் (முன்னாள் அதிபர் - யாழ்/செங்குந்தா இந்துக் கல்லூரி), தவமணி, செல்வராணி (நெதர்லாந்து), குமாரகுலசிங்கம் (தேங்காய் வியாபாரம்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஸ்ரெல்லா (இத்தாலி), யசிந்தா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம்), சுதாகரன் (இலண்டன்) ஆகியோரின் மாமனாரும், கனகராஜா, செல்வராஜா, பத்மாவதி, யோகராஜா, நடராசா, யோகேஸ்வரி, புனிதவதி, புனிதமலர், காலஞ்சென்றவர்களான சறோஜினிதேவி, பத்மராஜா மற்றும் சிவபாதம், சிவமணி, சிவஞானமணி, சிவப்பிரகாசம், சிவயோகநாதன், உதயகுமாரி ஆகியோரின் அருமை மைத்துனரும், றஜனன், ரேஸ்னவி ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2016) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொடிகாமம் கட்டைபறிச்சான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்.

புகையிரத நிலைய வீதி,
கொடிகாமம்.

தொ.பே ; 077 233 6338,
077 481 5914

(சி-4634)

## பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்

கொக்குவில் இந்துக் கல்லூரியில் கற்ற பழைய மாணவர்களிடமிருந்து 2016 ஆம் ஆண்டிற்கான பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் எண்மரைத் தெரிவு செய்ய வேண்டியுள்ளமையால் 21.05.2016 சனிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் என்னால் கூட்டப்படும் கூட்டத்தில் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

(C-4636)

கொக்குவில் இந்துக் கல்லூரி

வே. ஞானகாந்தன்
அதிபர்

## காணி விற்பனைக்கு

உடுப்பிட்டி கூட்டுறவு அலுவலகத்துக்கும் இலக்கணாவத்தை பிள்ளையார் கோவிலுக்கும் இடையில் கண்ணாமலை என்ற இடத்தில் 18 பரப்புக் காணி, 6 1/2 பரப்புக் காணி இரண்டு விற்பனைக்குண்டு. முழுமையாகவும், பகுதியாகப்பிரித்தும் உங்கள் தேவைக்கு ஏற்ப வாங்கிக் கொள்ள முடியும். (சி-4635)

தொடர்பு :
N. சங்கர்
0779222916

## அதிககொலஸ்ரோல் - உயர் இரத்த அழுத்தத்திற்கு ஆயுர்வேத சிகிச்சை

## Ayurvedic Treatment for High Cholesterol & High Blood Pressure

வாழ்கை முறைப்பாதிப்புக்கள், மற்றும் நீரிழி நோய்நிலைமை, அதிக உடற் பருமன் போன்ற பல காரணங்களால் ஏற்படும் கல்லீரல் பாதிப்பு (Fatty Liver), அதிக இரத்தக்கொழுப்பு (High Cholesterol), உயர் இரத்த அழுத்தம் (High Blood Pressure), இரத்தக்குழாய் இறுக்கம் (Atherosclerosis), கை, கால்களில் விறைப்பு (Numbness of Hands & Legs), இதய இரத்தக்குழாய் அடைப்பு (Coronary Heard Disease), மாரடைப்பு (Heard Attack), இதயவலி (Angina), பாரிசவாதம் (Stroke), மற்றும் நாட்பட்ட நீரிழிவு, சிறுநீரக நோய்கள், இதய இரத்தக்குழாய் அடைப்பு சீரமைப்பு சிகிச்சையின் பின்பும் (Post Coronary Artery Bypass Surgery) கட்டுப்பாட்டில் வராத அதிக இரத்த அழுத்தம், கொலஸ்ரோல் குழப்பங்களுக்கு உயர்தர சித்த ஆயுர்வேத சிகிச்சைகள் பெறலாம்.

ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொண்டபின்னர் நேரில் வரவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251

(சி-4632)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# மரண அறிவித்தல்

## திருமதி நவரத்தினம் ஸ்ரீகுமாரி



கூழாவடி ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினம் ஸ்ரீகுமாரி கடந்த (15.05.2016) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் தங்கக்குட்டி ஆகியோரின் அன்பு மகளும், நவரத்தினத்தின் அன்பு மனைவியும், மைதிலி (DO, பிரதேச செயலகம், சங்கானை), மேனகா (பிரான்ஸ்), மைதீபன் (டோகா), மயூரன் (மலேசியா), மயூரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற ஸ்ரீகுமார் மற்றும் ஸ்ரீமதி (பிரான்ஸ்), ஸ்ரீதேவி ஆகியோரின் சகோதரியும், குகநேசன் (HRDA, பிரதேச செயலகம், உடுவில்), சதீஸ் (பிரான்ஸ்), சோபனா, மயூரி (மலேசியா) ஆகியோரின் மாமியும், மிதுஷன், டேனுஷா, சஸ்மிகா (பிரான்ஸ்), ஜெராஜ், சானுகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.05.2016) அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.30 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக காக்கைதீவு கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கூழாவடி,
ஆனைக்கோட்டை.

தகவல் :
குடும்பத்தினர்.

(4600)

# இறந்தவர்களை நினைவு கூருவதற்கு தமிழ் மக்களுக்கும் உரிமை உண்டு

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தினால், மூவினங்களைச் சேர்ந்த மக்களும் உயிரிழந்துள்ளனர். இராணுவத்தையோ விடுதலைப் புலிகள் அமைப்பையோ சாராதவர்களும் உயிரிழந்துள்ளனர். ஆகையினால், இறந்தவர்களை நினைவுகூர சகலருக்கும் உரிமை உள்ளது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

தமது உறவினர்களை நினைவுகூர, தமிழர்களுக்கும் உரிமை உண்டு. எனினும், விடுதலைப் புலிகள் அமைப்பை நினைவுகூரும் வகையில் யாரேனும் செயற்பாடுகளை முன்னெடுத்தால், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் கடமை, பொலிஸாருக்கு உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் பதிலளிக்கையில்,

"வடக்கில் தற்போது முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள், யுத்தத்தில் இறந்த மக்களை நினைவு கூரவே தவிர, விடுதலைப் புலிகளை நினைவுகூர அல்ல. வடமாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், இந்த வாரத்தை, நினைவு வாரம் எனறு கூறியிருக்கின்றார்.

இறந்தவர்களை நினைபது அவர்களது உரிமை. விடுதலைப் புலிகள் அமைபபு, தடைசெய்யப்பட்ட அமைப்பாகும். எனவே அதற்குச் சார்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பவர்கள், நாட்டின் நீதி முறைக்கமைய தண்டிக்கப்படுவார்கள். அண்மையில் இறந்தவர்களை நினைவுகூருவதாகக் கூறித் தீபமேற்றிய செய்தி, ஊடகங்களில் வெளியானது. இந்தப் புகைப்படங்களில் 4 பேரே காணப்படுகின்றனர். அங்கு பொதுமக்கள் இல்லை" என்றார். (இ-5)

### முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளின்

## ஆத்மசாந்திப் பிரார்த்தனைக்கு சைவ மகாசபை வேண்டுகோள்

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த எமது உறவுகளின் ஆத்ம சாந்திக்காக சைவத் தமிழ் மக்கள் அனைவரையும் ஆத்மார்த்தமாக பிரார்த்தக்குமாறு அகில இலங்கை சைவ மகாசபை வேண்டி நிற்கின்றது. இயன்றளவில் நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்படுகின்ற இடங்களிலோ, ஆலயங்களிலோ அல்லது வீடுகளிலோ தமது பிரார்த்தனையை தீபங்கள் ஏற்றி வழிபாடியற்றி மேற்கொள்ளுமாறும் உயிரிழந்தவர்களின் ஞாபகார்த்தமாக மரங்களை பொது இடங்களிலும் வீடுகளிலும் நாட்டுமாறும் வேண்டுகின்றோம். எமது சைவ மகாசபையால் வழமை போன்று சைவத்தமிழர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் தொன்றுதொட்டு நடைபெற்று வரும் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், மாங்குளம் சிவஞானசித்தர் பீடத்திலும், குழந்தைவேல் சுவாமி சமாதி சிவாலயத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைக்கான ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நெய்தீபம் ஏற்றி இறை சிவனிடம் எம் உறவுகளுக்காக பிரார்த்திக்க விரும்புவோர் இன்று 18 ஆம் திகதி மாலை 5 மணிக்கு இவ்விடங்களில் கலந்து கொள்ளுமாறு வேண்டி நிற்கின்றோம். இதேநேரம் வன்னி, யாழ்., கிழக்கு, மலையகம், நாட்டின் இதர பகுதிகளிலும் வலிகளோடும் வாழ்க்கைச் சுமைகளோடும் வாழ்ந்து கொண்டிருக்கும் உயிரிழந்தவர்களின் உறவுகளுக்கு எம்மாலான வகையில் உதவுதற்கும் இத்தினத்திலே நாம் அனைவரும் திடசங்கற்பம் பூணுவோம் என சைவ மகா சபையின் பொதுச் செயலாளர் ப.நந்தகுமார் அறிவித்துள்ளார். (இ)

## முள்ளிவாய்க்காலில் நினைவுத்தூபி அமைக்க அனுமதியளிக்க வேண்டும்

### பாதுகாப்பு அமைச்சிடம் விஜயகலா கோரிக்கை

(06 ஆம் பக்கம் பார்க்க...)

## 26 பாடசாலைகள் மூடப்பட்டன

மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடிய அபாயம் இருப்பதாக அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் அறிவுறுத்தியமையை அடுத்து, இரண்டு மாவட்டங்களைச் சேர்ந்த 26 பாடசாலைகள் மறுஅறிவித்தல் வரையிலும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

மண்சரிவு அபாயம் காரணமாக, மாத்தளை மாவட்டத்தில் தொடங்தெனிய வித்தியாலயம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இதேவேளை, வெள்ளப்பெருக்கு அபாயம் காரணமாக வடமேல் மாகாணத்தில் உள்ள 25 பாடசாலைகள் மறு அறிவித்தல் வரையிலும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

புத்தளம், நிக்கரவெட்டிய, சிலாபம், கிரிஉல்ல ஆகிய கல்வி வலயங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளே தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. (இ-5)

## ஆஸ்துமா நோயினால் 2015 ல் 2935 பேர் பலி!

(கொழும்பு)

கடந்த வருடம் மாத்திரம் ஆஸ்துமா நோயால் 2953 பேர் பலியாகியுள்ளதாக சுகாதார கல்வி பணியகம் தெரிவித்துள்ளது.

குறித்த ஆஸ்துமா நோயாளர்கள் வைத்தியசாலைகளில் எந்தவொரு சிகிச்சைகளும் பெறாத நிலையில் உயிரிழந்துள்ளதாக சுகாதார பணிப்பாளர் நாயகம் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் "உலக ஆஸ்துமா தினம்" அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் அதில் கலந்து கொண்டபோதே சுகாதார பணிப்பாளர் இந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.

மேலும் முறையான சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் ஆஸ்துமா நோயிலிருந்து சுகமடையலாம் என்றும் பணிப்பாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஆலோசனைக்காக காத்திருக்கும் நிதி மோசடி விசாரணைப் பிரிவு

பாரிய நிதி மோசடிகள் தொடர்பான பல முறைப்பாடுகள் குறித்த அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்காக காத்திருப்பதாக நிதி மோசடி தொடர்பான பொலிஸ விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இநத பிரிவுக்கு 41 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவற்றில் 5 முறைப்பாடுகள் தொடர்பில் மாத்திரமே நீதிமன்றங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. ஏனைய 36 முறைப்பாடுகள் குறித்த விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இன்னும் அவை தொடர்பான அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## யானை தாக்குதலுக்கு அஞ்சி ஆற்றில் குதித்த இருவர் பலி!

யானை தாக்குதலில் இருந்து தப்பிப்பதற்காக ஆற்றில் விழுந்த இரு இளைஞர்களின் சடலங்கள் ஹபரண பகுதியில் மீட்கப்பட்டுள்ளன.

அம்பகஸ்வேவ ஆற்றிற்கு ஆறு இளைஞர்களைக் கொண்ட குழு ஒன்று மீன்பிடிக்க சென்றுள்ளது. இந்த நிலையில் ஒரு காட்டு யானை இவர்களைத் துரத்தியுள்ளது.

இந்த நிலையில் தங்களின் பாதுகாப்பிற்காக இவர்கள ஆற்றில் குதித்துள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் குழுவில் இருந்த இருவர்கள் காணாமற் போயுள்ளதுடன், இவர்களின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எயிரிகோயா பகுதியைச் சேர்ந்த 21 மற்றும் 22 வயதுடைய இரு இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகள் நடத்தி வருகின்றனர். (இ-5)

## ஆழியவளையில் வெள்ளம் ஆக்கிரமிப்பு



கொட்டித் தீர்த்த கன மழையினால் யாழ். வடமராட்சிக் கிழக்கு ஆழியவளைப் பகுதி வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றது. நேற்று முன்தினம் திங்கட்கிழமை மதியம் வரையில் கொட்டித் தீர்த்த கன மழையினால் வீடுகள், வீதிகள் எங்கும் வெள்ளக்காடாகக் காட்சியளித்தன. மேலும் ஆழியவளை ஜே/ 431 கிராம அலுவலர் அலுவலகத்திற்கு செல்லும் பாதையும் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றது. (படங்கள்: கரணவாய் செய்தியாளர்)

# அரசு மீதான வெறுப்பே வெள்ளத்துக்கு காரணம்!

(கொழும்பு)

நல்லாட்சி அரசின் மீதான வெறுப்பே இப்போதைய வெள்ளம் மற்றும் மண்சரிவிற்கான காரணம் என நாரஹேன்பிட்டி விகாராதிபதி முறுத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதைப் போன்றதொரு அனர்த்தங்களுக்கு மக்கள் இதுவரை முகம் கொடுக்கவில்லை. நாட்டில் தற்போது ஒழுக்கம் சீரழிந்துள்ளது.

நாட்டை கொண்டு செல்வதற்கான போதிய அறிவு ஆட்சியாளர்களுக்கு இல்லை. மகிந்தவின் பாதுகாப்பை இல்லாமல் செய்தது மட்டுமே நல்லாட்சி அரசாங்கம் செய்த ஒரேயொரு வேலையாகும்.

நாம் இந்த விடயத்திற்கு எதிர்ப்பை வெளியிடும் முகமாக இந்த மாதம் நிறைவில் ஹம்பாந்தோட்டையிலிருந்து கொழும்பிற்கு பாத யாத்திரை ஒன்றை மேற்கொள்ளவுள்ளேன்.

மகிந்தவின் பாதுகாப்பு விடயத்தில் மகா நாயக்க தேரர்களின் அறிவுரையை ஜனாதிபதி செவிமடுக்காமல் செயற்படுகிறார் என்றும் அவர் தெரிவித்தார். (செ-11)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## பல்கலைக்கழக அலுவலர்களின் பாவனைக்கு வாடகைக்கு வீடு தேவை

கிளிநொச்சி அறிவியல்நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல்பீட, விவசாயபீட மற்றும் தொழில்நுட்பபீடங்களின் விருந்தினர்/அலுவலர் விடுதிக்கான சகல வசதிகளுடனும் கூடிய பெரிய, நடுத்தர வீடுகள் அறிவியல் நகரை அண்மித்த பகுதிகளில் வாடகைக்கு தேவை.

வீட்டை வாடகைக்குத்தர விரும்புவோர் கீழ்வரும் மாதிரிப் படிவத்தில் தயார் செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 01.06.2016 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/நிர்வாகக் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடது மேல் மூலையில் "யாழ். பல்கலைக்கழக அலுவலர்களுக்கான வீடு" என குறிப்பிடப்பட வேண்டும். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

*** தொடர்புகளுக்கான தொலைபேசி இல: 021 222 6517**

**பதிவாளர்.**
**சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/நிர்வாகம்**
**யாழ். பல்கலைக்கழகம்.**

**யாழ்.பல்கலைக்கழகத்தின் பொறியியல்பீட / விவசாயபீட / தொழில்நுட்பபீட அலுவலர்களின் உபயோகத்திற்கான வீடு**

மேற்படி விடயம் தொடர்பாக தங்கள் ............. ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்திற்கு அமைவாக எனது பின்வரும் வீட்டை பல்கலைக்கழகத்திற்கு குத்தகைக்குத்தர விரும்புகின்றேன்.

**வீடு/கட்டடம் பற்றிய விபரங்கள்**

01) வீடு அமைந்திருக்கும் இடம் ..........................................................
..........................................................

02) வீட்டு சொந்தக்காரரின் பெயரும் அவரது நிரந்தர முகவரியும்
..........................................................

03) தொடர்பு கொள்ள வேண்டியவரின் பெயரும் முகவரியும் தொலைபேசி இலக்கமும்
பெயர்: ..........................................................
முகவரி: ..........................................................
தொலைபேசி இல: ..........................................................

04) (a) வீட்டின் பரப்பளவு (சதுர அடி) ..........................................................
(b) வீடு அமைந்துள்ள காணியின் பரப்பளவு ..........................................................

05) அறைகளின் எண்ணிக்கை ..........................................................
குளியல் அறைகளின் எண்ணிக்கை ..........................................................
மலசல கூடங்களின் எண்ணிக்கை ..........................................................

06) மின்சார வசதி உண்டு/இல்லை ..........................................................
விபரம் ..........................................................

07) தண்ணீர் வசதி: கிணறு/குழாய் நீர் ..........................................................
விபரம் ..........................................................

08) எதிர்பார்க்கும் குத்தகை/மாதாந்த வாடகை ..........................................................

09) குத்தகைக்கு தரக்கூடிய கால அளவு ..........................................................

10) வேறு யாதாயினும் கட்டுப்பாடுகள் /நிபந்தனைகள் (இருப்பின்)
..........................................................
..........................................................

திகதி .............. விண்ணப்பதாரரின் கையொப்பம்

(4633)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் உப தலைவரும் ஓய்வுநிலை அதிபரும், சமாதான நீதவானும் கிளிநொச்சி மாவட்ட ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் தலைவரும் கிளிநொச்சி மாவட்ட முதியோர் பேரவைத் தலைவரும் கனகபுரம் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் தலைவருமான திரு. அ. கனகரத்தினம் அவர்கள் அண்மையில் "சாமஸ்ரீ தேசமாணி" என்னும் உயர்பட்டம் பெற்றதையிட்டு மனமார வாழ்த்துவதோடு மேன்மேலும் உயர்ந்த பட்டங்கள் பல பெற்று சகல சௌபாக்கியத்துடன்நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: தி. இராசநாயகம், (தலைவர்) இல்ல நிர்வாகத்தினர், பணியாளர்கள், இல்லக் குழந்தைகள், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம் ஜெயந்திநகர், கிளிநொச்சி.

(C-4638)



## சேவைநலன் பாராட்டும் 60-வது பிறந்தநாள் வாழ்த்தும்



உயர்திரு.

## இராசையா சிவசுப்பிரமணியம்

நிறைவேற்று எந்திரி,
கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சி

மிகவும் நெருக்கடியான காலம் தொட்டு இன்றுவரை மக்களின் சேவையாளனாக தன்னை அர்ப்பணித்த குறிப்பிடத்தக்க அரச உத்தியோகத்தர் உயர்திரு. இ. சிவசுப்பிரமணியம் ஐயா அவர்கள்

அடிப்படை வசதி வேண்டிய கிளிநொச்சி மாவட்டத்திலேயே தனது உன்னதமான சேவையினை வழங்கியதுடன் நின்றுவிடாது எமது இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வரும் குழந்தைகளுக்கும் வேண்டியபோதெல்லாம் தன்னாலான சகல உதவிகளையும் வழங்கிய உன்னத சேவையாளன் சிவசுப்பிரமணியம் ஐயா அவர்கள். தன்னுடைய 60வது பிறந்தநாளில் அரச பணியில் இருந்து ஓய்வுபெறுகின்றமையையிட்டு எமது பிறந்தநாள் வாழ்த்துக்களையும் அவரின் சேவையினையும் பாராட்டி வாழ்த்துவதோடு எதிர்காலத்தில் மிகுந்த ஆரோக்கியத்துடன் நீடூழிகாலம் வாழ்ந்து சமூக சேவையினை தொடர எல்லாம் வல்ல உருத்திரபுரிசுவரனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

குறிப்பு : எதிர்வரும் 29.05.2016 அன்று எமது இல்லத்தில் பிப. 3.00 மணிக்கு உயர்திரு. இராசையா சிவசுப்பிரமணியம் அவர்களுக்கான உன்னத சேவையாளன் பாராட்டும் பிறந்தநாள் விழாவும் ஏற்பாடு செய்துள்ளோம்.

வாழ்த்துவோர்: தி.இராசநாயகம், (தலைவர்) இல்ல நிர்வாகத்தினர், பணியாளர்கள், இல்லக் குழந்தைகள், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம் ஜெயந்திநகர், கிளிநொச்சி.

(C-4638)



## நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் கேள்வி கோரல்



**நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவிற் திருப்பணித் திட்டத்தில் பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.**

1. 515 சதுர அடிப்பரப்பளவு கொண்ட சிறிய வீடுகள் மூன்று நிர்மாணித்தல்.
2. நாகசாந்தி மடப்புனரமைப்பும், நீராடும் சிறுதடாகம் அமைத்தலும் இப்பகுதிக்காக அணைச்சுவர் அமைத்தலும்.

- வீடுகளுக்கான கட்டுமானப் பொருட்கள் யாவும் வழங்கப்படும்
- நாகசாந்திமடப் புனரமைப்புக்கும் - குறித்த ஏனைய நிர்மாண வேலைக்கும் - கட்டுமானப் பொருட்கள் உட்பட கூலியும் ஒப்பந்தகாரரின் பொறுப்பாகும்.

கேள்விப்பத்திரப் படிவங்களை 20.05.2016 தொடக்கம் கோவில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளும் முடிவு நாள் 31.05.2016 பி.ப 5.00மணி கேள்விப்பத்திரங்களை கோவில் அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடலாம் அல்லது 31.05.2016 இன் முன் கிடைக்கும்படி பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைக்கலாம். பதிவஞ்சலில் அனுப்பும்போது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "கேள்வி கோரல்" எனக் குறிப்பிடவேண்டும்

**அன்னையின் பணியில்:**

**பொ. அன்பரசன் (செயலாளர்)**
**ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்**
**அறங்காவலர் சபை, நயினாதீவு.**

(C-4637)

# மோடி, மைத்திரி, சம்பந்தன்







# மும்மூர்த்திகளின் நாடக அரங்கேற்றம்

## விமல் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இலங்கையின் அரசியலமைப்பு ரீதியாக தன்னாட்சியை பெற்றுக் கொள்வதற்கான நாடகம் மோடி, மைத்திரி, சம்பந்தன் ஆகிய மும்மூர்த்திகள் மூலம் இந்தியாவில் அரங்கேற்றப்பட்டு வருகின்றது. இந் நிலையில் அந்த நாடகம், இன்று இலங்கையில் சம்பந்தனூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், எம்.பி.யுமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். 27000 படையினர் உயிர்களை அர்ப்பணிப்பு செய்து மீட்ட நாட்டை காட்டிக் கொடுக்க அரசு முயற்சிக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.**

பிட்டகோட்டேயிலுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் அலுவலகத்தில நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே விமல் வீரவன்ச எம்.பி. இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் பிரிட்டனுக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிங்கள மக்களின் ஆதரவை பெற்றுக் கொண்டு தமிழர் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகைக்கு பேட்டியளித்துள்ளார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் புதிய அரசியலமைப்பு என்ற நாடகத்தை அரங்கேற்றி வருகின்றது.

இதற்கிடையே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதிக்கும், சம்பந்தனுக்கும் ஒரே நேரத்தில் இந்தியாவுக்கு அழைப்பு விடுத்தார். அத்தோடு பேச்சுவார்த்தைகளும் நடத்தப்பட்டுள்ளன. இவ் அனைத்து நிகழ்ச்சி நிரல்களிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் முயற்சிக்கும் வடகிழக்கு ஒற்றை யாட்சியை பெற்றுக் கொள்ளும் விடயமே முன்னெடுக்கப்படுகிறது.

இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தன்னாட்சியை வழங்க இணங்கியுள்ளனர். இது சம்பந்தனுக்கு கிடைத்த வெற்றியாகும். புதிய அரசியலமைப்பில் தன்னாட்சி உள்வாங்கப்படவுள்ளது.

தன்னாட்சியை இலங்கையின் அரசியலமைப்பு ரீதியாக பெற்றுக் கொள்ளும் சம்பந்தன் அதன் பின்னர் ஐ.நாவின் ஆதரவுடன் தனித் தமிழீழத்திற்கான தனது நிகழ்வுகளை முன்னெடுப்பார். அரசியலமைப்பினூடாக தன்னாட்சிவழங்கப்படும்போது ஐ. நா. அதனை பயன்படுத்தி தமிழீழத்துக்கான அங்கீகாரத்தை வழங்கும். அதில் எந்தவொரு சிக்கலும் இருக்காது.

27000 படையினர் தங்களது உயிர்களை அர்ப்பணித்து பயங்கரவாதத்திலிருந்து நாட்டை மீட்டெடுத்து பிரிவினையை தடுத்தனர். ஆனால் இன்று மைத்திரி. ரணில் அரசாங்கம் படையினரை காட்டிக் கொடுத்து புலிப் பயங்கரவாதிகளின் தேவைகளை நிறைவேற்றுகின்றது.

ஆயுதங்களுடன் தனித் தமிழீழத்தை பெற்றுக் கொடுக்கும் முயற்சி தோல்வியடைந்த நிலையில் இன்று அரசியலமைப்பு ரீதியாக ஐ.நாவின் உதவியுடன் அதனை நிறைவேற்றிக் கொள்ளும் முயற்சி சம்பந்தனினால் முன்னெடுக்கப்படுகிறது. இலங்கையில் விக்னேஸ்வரன் அதற்காக அடிப்படை நடவடிக்கைகளையும் படிப்படியாக முன்னெடுக்கின்றார். மோடி மறுபுறம் தனது நாடகத்தை அரங்கேற்றுகிறார். இவ்வாறு நாட்டை காட்டிக் கொடுக்கும் முயற்சி முன்னெடுக்கப்படுகின்றன. இதனை நாம்ஜனவரி 8 ஆம் திகதிக்கு முன்பதாக சொன்னோம். ஆனால்யாரும்கேட்கவில்லை. இன்று நாம்சொன்னது அனைத்தும் உண்மையாகிக் கொண்டிருக்கின்றன என அவர்மேலும் தெரிவித்தார். (இ-5)








ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜியின்
60வது பிறந்த நாளை முன்னிட்டு
சுவாமி சத்யோஜாதாஜியின்
மகா சத்சங்கம்

வாழும் கலையின் இசைக்கலைஞர்
முருகதாஸ்ஜியின் இசைச் சங்கமம்

காலம்: பி.ப. 5.00 மணி
19.05.2015, வியாழக்கிழமை
இடம்: இந்து சமயப் பேரவை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

வாழும் கலைக் குடும்பம்
யாழ்ப்பாணம்

(4596)

அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



கரைச்சி பிரதேச செயலரும்
மகாதேவா சுவாமிகள் சைவச்
சிறுவர் இல்லத்தின்
காப்பாளரும் கிளிநொச்சி மாவட்ட
சாயி சமிர்த்தியின் உப
தலைவருமான உயர்திரு.
**கோபாலபிள்ளை நாகேஸ்வரன்**
அவர்கள் **"சாமசிறி தேசமாணி"**
என்னும் உயர் கௌரவப்பட்டம்
பெற்றதையிட்டு அகமகிழ்ந்து
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
மேலும் பல பட்டங்கள் பெற்று
சகல சௌபாக்கியத்தோடு
நீடூழி காலம் வாழ மனதார
வாழ்த்துகின்றோம்.

கோபாலபிள்ளை நாகேஸ்வரன்

கிளிநொச்சி வர்த்தக சமூக
அபிவிருத்திச் சங்கம், கிளிநொச்சி.

(C-4631)


## இராசி பலன்

**18.05.2016**

(வைகாசி 05, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
துவாதசி முன்னிரவு 9.20 மணிவரை
அத்தம் பிற்பகல் 12.02 மணிவரை
சுபநேரம் 4.23-5.53 மணிவரை
இராகுகாலம் 11.53-1.23 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சுக், புத | சூரி | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூரட்டாதி, உத்தரட்டாதி<br>இரவு 1.30 இற்கு<br>துலா-சந் | | |
| | | | குரு<br>ராகு |
| | சனி<br>செவ் | | சந் |

**மீனம்:** தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கனவு பலிதமுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மேடம்:** உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், தொழில் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்தவர்கள் விலகுவர், உடல் நலன் சீராகும்.

**இடபம்:** குடும்பத்தினரின் பேரன்பை பெறுவீர்கள், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** சந்தோசமான அனுபவங்கள் ஏற்படும் நாள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வாகன சுகமுண்டு, பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்:** நண்பர்கள் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, வரவினை விட் செலவுகள் அதிகமாகும், வழிபாட்டில் கவனம் செலுத்த வேண்டிய நாள்.

**கடகம்:** பெரியோர்களின் ஆசி கிடைக்கும், சகோதர ஒற்றுமை பலப்படும், இல்லத்தில் இனிமை தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு. புதிய முயற்சிகள் கைகூடும்.

**மகரம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், தேக நலனில் தெளிவு பிறக்கும், தொழிலை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** பொருளாதார வளர்ச்சி கூடும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும், புதிய தகவல்கள் வந்து சேரலாம், சுற்றத்தார் மூலம் உதவிகள் கிடைக்கலாம்.

**தனுசு:** செல்வாக்கை காப்பாற்றி உறவினர்களின் பாராட்டுகளைப் பெறுவீர்கள், தனவரவுகள் திருப்திகரமாக அமையும், செய்தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** சொல்லை செயலாக்கிக்காட்டுவீர்கள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், உறவினர் பகை அகலும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**துலாம்:** குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, பயணத்தால் பிரபல மானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சுப விரயங்கள் கூடும் நாள்.

**கன்னி:** சுப விரயங்கள் ஏற்படலாம், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், பெரிய மனிதர்களின் சந்திப்பால் விரும்பிய காரியங்கள் கைகூடலாம்.

# முள்ளிவாய்க்காலில் நினைவுத்தூபி அமைக்க அனுமதியளிக்க வேண்டும்

## பாதுகாப்பு அமைச்சிடம் விஜயகலா கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**இறுதி யுத்தத்தின் போது உயிரிழந்த உறவுகளை நினைவுகூர்ந்து முள்ளிவாய்க்காலில் நினைவுத் தூபியொன்றினை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தனவிடம் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சரும் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது குறித்து கடிதம் ஒன்றினை அவர் அமைச்சர் ருவான் விஜயவர்த்தனவுக்கு நேற்று அனுப்பி வைத்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் இவ்வாறு உயிரிழந்தனர். 3 தசாப்த காலமாக இடம்பெற்ற யுத்தத்திலும் பெருமளவான பொது மக்கள் உயிரிழந்துள்ளனர்.

இவர்களை நினைவு கூர்ந்து இறுதி யுத்தம் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் பகுதியில் நினைவுத் தூபி யொன்றினை அமைக்க வேண்டியுள்ளது. இதற்கான அனுமதியினை பாதுகாப்பு அமைச்சு வழங்க வேண்டும். அத்துடன் நினைவுத் தூபியை அமைப்பதற்கான நடவடிக்கையையும் அரசாங்கம் எடுக்க வேண்டும்.

இறுதி யுத்தத்தில் உயிரிழந்த தமது உறவுகளை பகிரங்கமாக நினைவு கூர முடியாத நிலை காணப்பட்டு வந்தது. ஆனால் புதிய நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் கடந்த வருடம் மே மாதம் முள்ளிவாய்க்கால் பகுதியில் உயிரிழந்த உறவுகளுக்கு தீபமேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னரே இந்த நிலை உருவாகியிருக்கிறது.

முள்ளிவாய்க்கால் பகுதியில் நினைவுத்தூபி அமைக்கப்படுமானால் வருடந்தோறும் உறவுகளை இழந்த மக்கள் அங்கு ஒன்று கூடி தமது அஞ்சலியை செலுத்தக் கூடியதாக இருக்கும். எனவே இங்கு நினைவுத் தூபி அமைப்பதற்கான அனுமதியை வழங்க வேண்டியது அவசியமாகும். இதற்கு அனுமதி வழங்குமாறு நான் கோரி நிற்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)










தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாண காரியாலயமும் பிரதான காரியாலயமும் இணைந்து ஏற்பாடு செய்த யோகா பயிற்சி வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ். இந்திய துணைத்தூதுவர் ஏ.நடராஜன், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாண பணிப்பாளர் உள்ளிட்ட பலர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் 100 பேர் பங்குபற்றி பயன்பெற்றனர். இந்தியாவிலிருந்து வருகை தந்த சிறப்பு யோகாப் பயிற்சியாளர்களால் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# உதவிகளை வழங்கக்கூடியவர்களாக ஒவ்வொருவரும் உயர வேண்டும்

## வடமாகாண சபை உறுப்பினர் கஜதீபன் வேண்டுகோள்

மக்களின் வரிப்பணத்திலிருந்து உதவிகளைப்பெற்றுக்கொள்ளும் பயனாளிகள், அதன்பெறுமதியை உணர்ந்து, தாம் பெற்றுக் கொள்ளும் உதவிகளை உரிய முறையில் பயன்படுத்தி வாழ்வில் உயர்ந்து அதன்மூலம் பிறருக்கு உதவி வழங்கும் அளவுக்கு வளரவேண்டும் என வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்தார். அண்மையில், வடமாகாண விவசாய மற்றும் கால்நடை அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான ஆடுகள் மற்றும் கோழிகள் என்பன வழங்கும் நிகழ்வு சுன்னாகம் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் இடம் பெற்றது. சுன்னாகம் கால்நடை வைத்திய அதிகாரி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

எமது மக்கள் ஒருகாலத்தில் பொருளாதார வளத்தில் உச்சநிலையில் இருந்தார்கள். அதனால் யாரிடமிருந்தும் எதையும் இலவசமாக



பெற்றுக்கொள்வதை விரும்பாதவர்களாக அவர்கள் இருந்து வந்தார்கள். மிகவும் கடின உழைப்பாளிகளாகவும் சுயதொழில் ஆற்றல் மிக்கவர்களாகவும் அவர்களது வாழ்க்கைமுறையும் பொருளாதார அமைப்பும் இருந்து வந்தன. எம்மக்களது இவ்வாறான இயல்பு தான் இன்றைக்கு வரைக்கும் யாரும் அவர்களை எச்சந்தர்ப்பத்திலும் விலைகொடுத்து வாங்கி விட முடியாதளவுக்கு வைத்திருக்கிறது.

பல்வேறான நெருக்கடிகளையும் கடினமான காலகட்டங்களையும் கஷ்டங்களையும் அவர்கள் தாண்டி வந்திருந்தாலும் அவர்களது உணர்வுகள் விலைபேச முடியாதவையாகவே இருந்திருக்கின்றன. அப்படியேதான் இன்றும் இருந்தும் வருகின்றன. இருப்பினும் எமது மூத்தவர்களின் பெருமையைப்பேசிக்கோண்டே நாம் இருந்துவிட முடியாது. முன்னைய காலத்தில் மக்கள் எப்படி வாழ்ந்தார்களோ அதே நிலைமைக்கு அவர்களை மீண்டும் கொண்டுவர வேண்டிய பாரிய பொறுப்பும் கடமையும் எங்கள் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. யாரும் இப்பொறுப்பிலிருந்து நழுவிவிட முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-89)

# கலாமன்றத்தின் நாடகப்பயிலகத்தின் புதிய பிரிவு சனிக்கிழமை ஆரம்பம்

நாடகக் கலையின் மேம்பாடு கருதி செயல்முறை சார்ந்த தேர்ச்சியினை மேம்படுத்தும் நோக்கோடு திருமறைக்கலாமன்றத்தின் நாடகப் பயிலகம் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக நடத்தி வருகின்ற நாடக அரங்கியலுக்கான சான்றிதழ் கற்கைநெறியின் 2016 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவு எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.4 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது மணிமண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது. இப்பயிற்சி நெறியில் நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களும் நாடகமும் அரங்கியலும் பாடத்தினை தரம் 11,12,13 இல் பயிலும் ஆர்வமுள்ள மாணவர்களும் இணைந்து கொள்ள முடியும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

ஆறு மாதங்களைக் கொண்ட இப் பயிற்சி நெறிக்கான வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில் பி.ப. 3.30 மணி தொடக்கம் 5.30 மணி வரை நடைபெறவுள்ளதுடன் போயா தினங்களில் முழுநாள் நாடகப் பட்டறையாகவும் நடைபெறவுள்ளன.

இப் பயிற்சி நெறியில் நாடக எழுத்துருவாக்கம், நடிப்பு, நெறியாள்கை, அரங்கத்துணைக் கலைகள் (வேட உடை, ஒப்பனை, காட்சி விதானிப்பு, இசை, ஒளிவிதானிப்பு) நாடகத் தயாரிப்பு, கூத்துப் பயிற்சிகள் போன்றவை பிரதான அம்சங்களாக அமையும். (இ-5)

# இலங்.மின்சார சபை ஊழியர்கள் இரவு- பகலாக திருத்தப்பணியில்

சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட மழை மற்றும் காற்றுக் காரணமாக மரங்கள் முறிந்ததனால் மின்தடங்கல் ஏற்பட்ட இடங்களில் இரவு - பகலாக மின்சார சபையினர் திருத்தப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்.வடமராட்சியில் பலபகுதிகளில் மின்தடங்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் முறைப்பாடுகள் கிடைக்கும் இடங்களுக்கு மின்சாரசபையின் ஊழியர்கள் சென்று இரவு-பகலாக திருத்தப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சிலபகுதிகளில் மின்விநியோகம் வழமைக்குத் திரும்பியுள்ள போதிலும் சில இடங்களில் திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. (இ-60)



வீணாகான குருபீட முதல்வர் வாசுதேவக் குருக்கள் தலைமையில் அறநெறிக் கருத்தரங்கு கடந்த சனிக்கிழமை வட்டு. வடக்கு சித்தன்கேணி கற்பகச் சோலை அமைப்பின் அலுவலகத்தில் நடைபெற்றது. இப்பகுதியில் இனிவரும் காலங்களில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் யோகாசனம் மற்றும் பண்ணிசை வகுப்புக்கள் என்பன தொடர்ச்சியாக நடைபெறவுள்ளதாகவும் சிறுவர்கள், பெரியவர்கள் அனைவரும் இதில் கலந்து கொள்ள முடியும் என வீணாகான குருபீட முதல்வர் வாசுதேவக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

(படங்கள்:-பொ.சோபிகா)

# மின்சாரம் தாக்கி இருவர் மரணம்

எம்பிலிப்பிட்டிய கவன் திஸ்ஸபுர பகுதியில் வாழைத்தோட்டத்தினுள் பிரவேசித்த இருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளனர்.

மேலும் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றுக் கொண்டமை தொடர்பில் காணியின் உரிமையாளரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கவன்திஸ்ஸபுர பகுதியில் அமையப்பெற்றுள்ள இந்த குறித்த வாழைத்தோட்டத்தில் 5 ஏக்கரில் வாழைப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் இரவு வாழைக்குலை திருட வந்த, மூவரில் இருவரே இவ்வாறு மின்சார தாக்கத்திற்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தோட்டத்திற்கு பிரவேசித்த மூவரையும் மின்சாரம் தாக்கிய நிலையில் அவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.


எம்பிலிப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 25 மற்றும் 16 வயதான இருவரே மின்சாரம் தாக்கத்திற்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர்.

இந்த பகுதியில் சட்டவிரோத மின்சாரம் பெற்றுக் கொண்டமை தொடர்பில் விசாரணைகளை இலங்கை மின்சார சபை அதிகாரிகள் முன்னெடுத்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள காணியின் உரிமையாளரை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-5)

# 12,932 குடும்பங்களுக்கு போஷாக்குக் குறைபாடு!

யாழ்.அரச அதிபர் அதிர்ச்சித் தகவல்



**தேசிய போஷாக்கு செயற்றிட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் இதுவரை 12 ஆயிரத்து 932 போஷாக்கு குறைபாடுகளுடன் உள்ள குடும்பங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

நேற்றைய தினம் யாழ். மாவட்டசெயலகத்தில் இடம்பெற்ற தேசிய போஷாக்கு நிகழ்ச்சித்திட்ட மாவட்டக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும்தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் அடையாளப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு சமுர்த்தி மற்றும் ஏனைய வாழ்வாதார உதவித்திட்டங்களில் முன்னுரிமை வழங்குமாறும் வழங்கப்பட்ட உதவிகளில் அம்மக்கள் முன்னேற்றம் அடைகின்றனரா என்ற தொடர்ச்சியான கண்காணிப்பு வேண்டும்

மேலுழ் இச்செயற்றிட்டத்தின்மூலம் மாவட்ட மக்களின் போஷாக்கு மட்டத்தினை உயர்த்துவதற்கு வினைத்திறனான செயற்றிட்டத்தினூடாக அனைத்து தரப்பினரும் இணைந்து செயற்படவேண்டும்.

இந்த நிகழ்வில் மேலதிக அரச அதிபர் பா.செந்தில் நந்தனன், பிராந்திய சுகாதாரப்பணிப்பாளர் வைத்தியர் கே.நந்தகுமரன், பிரதேச செயலாளர்கள், சுகாதார வைத்தியஅதிகாரிகள் மற்றும் யாழ்.மாவட்ட செயலக உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (இ-9)

# கிளிநொச்சி சிவபூமி பாடசாலை திறப்பு விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனகபுரம் முதலாம் பண்ணை வீதியில் அமையப்பெற்றுள்ள சிவபூமி பாடசாலையின் திறப்புவிழா எதிர்வரும் 26ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-7)

# சான்றுப் பொருட்களை உரிமை கோரவும்

யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் யாழ். பொலிஸாரினால் பாரப்படுத்தப்பட்டுள்ள சான்றுப் பொருட்களில் உரிமை கோரப்படாத நிலையில் பல சான்றுப் பொருட்கள் காணப்படுவதாக யாழ். நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய A/330/15 வழக்கு இலக்கத்தின்படி 49C C ரக மோட்டார் சைக்கிள், MC/690/S/16 வழக்கு இலக்கத்தின்படி பதிவு செய்யப்படாத உழவு இயந்திரத்தின் பெட்டி ,MC/1257/S/16 வழக்கு இலக்கத்தின் படி உழவு இயந்திரம், பதிவு செய்யப்படாத உழவு இயந்திரத்தின் பெட்டி போன்ற வாகனங்கள் இவ்வாறு நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளன.

எனவே மேற்கூறப்பட்ட வாகனங்களை உரித்துடையவர்கள் 6மாத காலத்திற்குள் உரிய ஆவணங்களுடன் யாழ்.நீதவான் நீதிமன்ற அலுவலக நேரத்தில் சமூகமளித்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (இ-5)

# வெள்ளக்காடாக காட்சியளிக்கும் கிளிநொச்சியிலுள்ள பல கிராமங்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடைமழையினால் இம்மாவட்டத்தின் தாழ்நிலப்பகுதியிலுள்ள பல கிராமங்கள் மிகவும் பாதிப்படைந்த நிலையில் காணப்படுகின்றன. குறிப்பாக உருத்திரபுரம் கிழக்கு ,மேற்கு, வடக்கு, சிவநகர், குஞ்சுப்பரந்தன் ஆகிய கிராமங்கள் பாதிப்படைந்த நிலையில் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன. இப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் தமது அன்றாடத் தேவைகளுக்காக கிளிநொச்சி நகரத்திற்கு மற்றும் வைத்தியசாலைகளுக்கு செல்ல இயலாதவாறு இக் கிராமங்களுக்குரிய அனைத்து வீதிகளும் வெள்ளம் மூடிப்பாய்வதால் பொதுமக்கள் மிகவும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர். குஞ்சுப்பரந்தன் பகுதியின் வாய்க்காலில் உள்ள கதவுகள் திறக்கப்படாத நிலையில் உள்ளதால் வெள்ள நீர் பொறிக்கடவை அம்மன் ஆலயப் பகுதியிலிருந்து பூநகரி பிரதான வீதிவரை வீதியைக் குறுக்கறுத்து பாய்ந்து கொண்டிருக்கிறது. அத்துடன் உருத்திரபுரம் கிராமப்பகுதியின் பின் பகுதியிலுள்ள கழிவு வாய்க்கால் மூலம் வருகின்ற வெள்ளம் உருத்திரபுரம் வீதியிலுள்ள முன்றுபகுதிகளில் பெருமளவில் செல்வதால் பயணிக்க முடியாத நிலை காணப்படுகிறது. புதுமுறிப்பு பகுதியாலும் இக் கிராம மக்கள் பயணிக்க இயலாதவாறு வெள்ளம் பாய்வதுடன் வீதிகளும் மிகவும் பழுதடைந்து காணப்படுகின்றன.

தொடர்ந்தும் பெய்துவரும் மழையினால் இப்பகுதிக் கிராம மக்கள் மிகவும் அவலங்களைச் சந்திக்க நேருமென பொது மக்களால் கவலை தெரிவிக்கப்படுகிறது.(இ-254)

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா:17செவ் 1 இல்
தகைமை/தொழில்:O/Lலண்டன் குடியுரிமை
தொ.இ: B/5359

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 99செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:AAT, CIMA சவுதி
தொ.இ: B/5360

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 31 சூரிசெவ் 11 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L/கனடா PR
தொ.இ: B/5361

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 59
உயரம்: 6'2"
தகைமை/தொழில்A/L/கணக்காய்வாளர்
தொ.இ: B/5364

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 17 செவ் 1 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:HNDM
தொ.இ: G/3915


பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 41
உயரம்: 5'4"
தகைமை/தொழில்A/L/பிரான்ஸ் NOT PR
எதிர்பார்ப்பு: சைவபோசனம். அசைவமும் ஏற்கப்படும்
தொ.இ: G/3916

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 48செவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:BSC
எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்
தொ.இ: G/3919

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 37சூரிசெவ் 8 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்
தொ.இ: G/3943

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

# வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய தீர்த்தமெடுத்தல் நிகழ்வு




(பனிக்கன்குளம்)

எதிர்வரும் 23 ஆம் திகதி வற்றாப்பளை அம்மன் வருடாந்த விசாக பொங்கல் உற்சவம் மிகவும் சிறப்பான முறையில் நடைபெறவுள்ளது. அந்த வகையில் நேற்று முன்தினம் பொங்கல் உற்சவத்தின் இரண்டாம் அங்கமான தீர்த்தமெடுத்தல் நிகழ்வு நடைபெற்றது.

சிலாவத்தை தீர்த்தக்கரை கடற்கரையில் நேற்று முன்தினம் மாலை 6.18 மணியளவில் முற்றிலும் புனிதத்துவமான நடைமுறைகள் பின்பற்றப்பட்டு தீர்த்தம் எடுக்கப்பட்டது.

காலநிலை சீரின்மையால் கடல் கொந்தளிப்புடன் காணப்பட்டாலும் தீர்த்தம் எடுக்கும் நேரத்தில் சற்று அமைதியடைந்து தீர்த்தம் எடுப்பதற்கு வழிவிட்டது. (இ-5-281)

# முல்லைத்தீவு மக்களே! உங்களை மறக்கவில்லை

## முதலமைச்சர் சி.வி.தெரிவிப்பு

முல்லைத்தீவு மக்களே! கட்சிகள் ரீதியான காரணங்களினால் உங்களுக்கு ஒருவரை அமைச்சராக்க முடியாதிருந்ததை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் உங்களை நாங்கள் மறக்கவில்லை.

பல விதங்களில் உங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வழிகளை அடையாளங்கண்டு வருகிறோம் என வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு முள்ளியவளையில் பால் பதனிடும் நிலையம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

இன்று ஒரு இனியநாள். எம் அனைவருக்கும் போஷாக்கையும் ஊட்டச்சத்தையும் வழங்குகின்ற துாயபசும்பாலை பதனிட்டு குளிரூட்டி வடபகுதியிலுள்ள ஏனைய பிரதேசங்களுக்கு அனுப்பிவைக்கக் கூடிய ஒரு தொழில்நுட்ப அமைப்பைக் கொண்ட பால் பதனிடும் நிலையம் இன்று அதிகௌரவத்திற்குரிய நியூசிலாந்து நாட்டின் உயர்ஸ்தானிகரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டுதொடக்கம் World Concern நிறுவனம் இலங்கையின் கிழக்குமாகாணத்தில் தமது பணிகளை ஆற்றி வருகின்ற போதிலும் வடபகுதியில் இடம் பெற்ற கடுமையான யுத்தங்களின் விளைவாக இவர்களின் சேவைகள் தடங்கலுற்றிருந்த நிலையில் 2009 ஆம் ஆண்டுயுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டபின்னர் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் முல்லைத்தீவு பகுதியிலுள்ள பாற்பண்ணையாளர்களுக்கு பசுக்களை வழங்குதல் பால் உற்பத்தியை வழங்குதல் போன்ற பலவழிகளில் உதவி ஒத்தாசைகளை புரிந்து வந்த World Concern நிறுவனம் முல்லைத்தீவு முள்ளியவளைப் பகுதியில் அமைக்கப்பட்ட இந்த பால் பதனிடும் நிலையத்தில் பதினைந்தாயிரம் லீற்றர் வரையான பாலை சேகரித்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. ஒவ்வொரு குளிரூட்டிதாங்கிகளிலும் இரண்டாயிரத்து ஐந்நூறு லீற்றர் வீதம் பாலைச் சேமித்துவைக்கவும் குளிரூட்டவும் ஆறுதாங்கிகளை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

2011 ஆம் ஆண்டில் வன்னிப் பகுதியில் மாதாந்த மேலதிகப் பால் சேகரிப்பின் அளவு கிட்டத்தட்ட 4000 லீற்றர் வரைமட்டுமே காணப்பட்டபோதிலும் 2015இல் இதன் அளவானது 170,000 லீற்றர் வரை அதிகரித்துள்ளது. ஆரம்பத்தில் 8 பண்ணையாளர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த பால் உற்பத்திச் செயற்பாடு இன்று எதிர்பார்த்த அளவை விடபலமடங்கு அதிகரித்துள்ளதுடன் இதில் 41 வீத உற்பத்தியில் பெண்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

போரினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களே. பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பல எம்மிடையே வாழ்ந்து வருகின்றன. என்றாலும் எங்கள் பெண்களின் மனத்திண்மை, உழைப்பு, சேமிப்பு போன்றவை எமக்குப் பெருமிதம் அளிப்பதாக அமைந்துள்ளது. பெண்கள் கடன் எடுத்தால் 99 சதவிகிதத்தவர் கடனைஅடைக்கின்றார்கள். ஆண்கள் அப்படியில்லை என்று ஒருவங்கியின் சிரேஷ்ட அலுவலர் எனக்குக் கூறினார். எமது பெண்களின் உழைப்பு மேலும் மேலும் சிறக்கவாழ்த்துகின்றேன்.

பாலுற்பத்தி தொடர்பான மேலதிக ஆலோசனைகளையும் தொழில்நுட்பஅறிவுகளையும் அறிமுகப்படுத்தும் நோக்கில் நியூசிலாந்தின் புகழ் பெற்ற நிறுவனங்களான Patton Refrigeration Ltd மற்றும் Qpod Ltd ஆகிய நிறுவனங்களின் தொழில்நுட்ப அறிவுரைகளை எமது பண்ணையாளர்களுக்கு வழங்கி பால் உற்பத்தியின் அளவை அதிகரித்தல் மற்றும் குளிரூட்டி பின்னர் பால் விநியோகம் செய்தல் போன்ற துறைகளில் பயிற்சிகளை வழங்கி எமது பண்ணையாளர்களை பாலுற்பத்தியில் ஈடுபடுவதற்கு ஊக்கமளித்து வருகின்ற இந் நிறுவனங்களை இத்தருணத்தில் பாராட்டாமல் இருக்கமுடியாது. அவர்களுக்கு எமது நன்றிகளும் பாராட்டுக்களும் உரித்தாகுக!

World Concern நிறுவனத்தின் முதலாம் கட்ட நடவடிக்கையாக பரந்தன் சந்தியிலிருந்து முல்லைத்தீவு வரையான பண்ணையாளர்களின் பாலுற்பத்தியை பெருக்குவதற்கான உதவிகளையும் தொழில்நுட்ப அறிவுரைகளையும் வழங்கியிருந்தார்கள். அதேபோன்று முல்லைத்தீவில் இருந்து மாங்குளம் வரையான இரண்டாவது பிரதான வீதியின் இருமருங்கிலும் உள்ள பண்ணையாளர்களை ஊக்குவித்தலை அடுத்து வழங்கினார்கள். இச்செயற்பாடுகளின் மூலம் முல்லைத்தீவில் இருந்து மாங்குளம் வரை பெறப்படுகின்ற மேலதிக பாலுற்பத்திகளை வவுனியா நகரம் வரை விநியோகிப்பதற்கும் அதே போன்று முல்லைத்தீவிலிருந்து பரந்தன் வரையான உற்பத்திகளை யாழ்ப்பாணம் வரை விநியோகிப்பதற்குமான திட்டங்களை முன்னெடுத்துள்ளார்கள். இதன் மூலம் பாலுற் பத்தியாளர்களின் மாதாந்த வருமானம் இலங்கை ரூபாவில் இரண்டாயிரத்திலிருந்து 12 ஆயிரம் ரூபா வரை அதிகரித்துள்ளது. மாதாந்த வருமானத்தை மேலும் அதிகரிக்க முடியும் என்று கூறியுள்ளார்கள்.

அன்பார்ந்த முல்லைத்தீவு மக்களே! கட்சிகள் ரீதியான காரணங்களினால் உங்களுக்குள் ஒருவரை அமைச்சராக்க முடியாதிருந்ததை ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் உங்களை நாங்கள் மறக்கவில்லை. பல விதங்களில் உங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வழிகளை அடையாளங் கண்டு வருகின்றோம். இன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்தவேலைத் திட்டத்தின் மூலம் நீங்கள் கூடிய பயனைப் பெறுவது மட்டுமன்றி பாலுற்பத்தி அதிகரிப்பின் மூலம் நீங்களும் உங்கள் வருமானங்களை உயர்த்தி நிறைவு காணுகின்ற அதேநேரம் போஷாக்கு உணவுத் தேவையுடைய ஏனைய மக்களுக்கும் உங்கள் மேலதிக பாலுற்பத்திகளை வழங்கி இந்த நாட்டில் தேகாரோக்கியமும் திடபலமும் கொண்ட ஒரு புதிய சமூகத்தை உருவாக்குவதற்கும் நீங்கள் காரணகர்த்தாக்களாக இருந்து வருகின்றீர்கள் என அவர்மேலும் தெரிவித்தார். (இ-7)

# வான் பாயும் குளங்கள்



கடந்த மூன்று நாட்களாக உள்ள சீரற்ற காலநிலை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வவுனிக்குளம் நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள 12 நீர்ப்பாசன குளங்களில் 5 நீர்ப்பாசனக் குளங்கள் வான் பாய்கின்றன என வவுனிக்குளம் நீர்ப்பாசன திணைக்களத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-15)

# சூறாவளியால் பாதிப்பு



நேற்று முன்தினம் அதிகாலை முள்ளியவளை, கணுக்கேணி, குமாரபுரம் பகுதிகளில் வீசிய சூறாவளி காரணமாக சில குடியிருப்புக்கள் சேதமடைந்து காணப்படுவதுடன் பயன்தரு மரங்கள் முறிந்து விழுந்து காணப்படுகின்றன. குடியிருப்பின் கூரை காற்றால் தூக்கி வீசப்பட்டுள்ளது.(இ-292)

# கனகாம்பிகைக்குளம் வான் பாய்கின்றது

கனமழை காரணமாக கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் ஓரடி வான் பாய்வதாக கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் சுதாகரன் தெரிவித்தார்.

மாவட்டத்தின் ஏனைய குளங்கள் நிரம்பி வழிவதற்கான சாத்தியங்கள் தற்போது இல்லையெனவும் ஆனால் குளங்களின் நீர் மட்டம் சுமார் இரண்டரை அடிக்கு மேலாக அதிகரித்து வருவதாகவும் தெரிவித்தார்.

வருடத்திற்கு சுமார் 1200-1400 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகின்ற நிலையில் 373 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகி உள்ளது என்பது சாதாரண விடயமல்ல. இரணைமடு குள புனரமைப்பு பணிக்காக நீர் மட்டத்தினை குறைத்திருந்தோம். அதனால் எந்த பதிப்பும் இல்லை எனவும் இவ்வாறான மழை வீழ்ச்சி குளங்களில் நீர்மட்டம் உயர்வாக உள்ள காலங்களில் பெய்திருந்தால் பாதிப்புக்கள் அதிகமாவதற்கான சாத்தியங்கள் இருப்பதாகவும் தெரிவித்தார். (இ)



# ஆர்.கே.நகரில் மறுதேர்தல் நடத்த தேர்தல் ஆணையத்திடம் கோரிக்கை



தமிழக முதல்வரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளருமான ஜெயலலிதா போட்டியிடும் தொகுதியான ஆர்.கே.நகர் தொகுதியில் 8 வாக்குச்சாவடிகளில் மறுதேர்தல் நடத்த தேர்தல் ஆணையத்திடம் விடுதலை சிறுத்தைகள் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழகத்தில் பெரிதாக எந்தவிதமான அசம்பாவித சமபவமும் இல்லாமல் நேற்று முன்தினம் சுமுகமாக தமிழக தேர்தல் 232 தொகுதிகளில் நடந்து முடிந்தது. 7 மணி வரை 73.76 சதவீத வாக்குகள் பதிவாகியதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் ஆர். கே. நகரில் வாக்காளர்களுக்கு வைக்கப்பட்ட மை அழிவதால், போலிமை பயன்படுத்தப்பட்டதாக தி.மு.கவினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

மேலும் 8 வாக்குச் சாவடிகளில் மறுதேர்தல் நடத்த விடுதலை சிறுத்தை வேட்பாளர் வசந்தி தேவி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-5)

# ஜனநாயக முறையில் தேர்தல் ஆணையம் தேர்தலை நடத்தவில்லை - விஜயகாந்த்

சட்டமன்ற தேர்தலை ஜனநாயக முறையில் தேர்தல் ஆணையம் நடத்தவில்லை என தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் குற்றச் சாட்டியுள்ளார். இது தொடர்பாக தே.மு. தி.க தலைவர் விஜயகாந்த் நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

தமிழகத்தின் அனைத்து தொகுதிகளிலும் பணம் விநியோகம் செய்யப்பட்டது. இது தொடர்பாக அளிக்கப்பட்ட முறைப்பாடுகள் மீது தேர்தல் ஆணையம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

புதிய வாக்காளர்கள், இளம் தலைமுறையினர் போன்றோரிடம் தே.மு.தி.க மக்கள் நலக்கூட்டணி த.மா.கா அணி ஏற்படுத்திய தாக்கத்தை பொறுத்துக்கொள்ள முடியாத அ.தி.மு.க, தி.மு.க கட்சிகள் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டன.

வாக்குச்சாவடிக்கு வந்த வாக்காளர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்படவில்லை. தே.மு.தி.க வேட்பாளர்கள், அவர்களுடைய குடும்பத்தினர், தே.மு.தி.க தேர்தல் அலுவலகம் மீது அ.தி.மு.கவினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

எனவே இவ்வாறான விடயங்களிலிருந்து, தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை ஜனநாயக முறையில் தேர்தல் ஆணையம் நடத்தவில்லை என்பது தெரியவருகின்றது.

தமிழகம் முழுவதுமே பணப்பட்டுவாடா செய்யப்பட்ட நிலையில், அரவக்குறிச்சி மற்றும் தஞ்சை தொகுதிகளில் மட்டும் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டுள்ளது ஏற்கத்தக்கது அல்ல.

சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் நாளை 19 ஆம் திகதி வெளியாக உள்ள நிலையில், அரவக்குறிச்சி, தஞ்சாவூர் ஆகிய தொகுதிகளில் 23ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இது திருமங்கலம், சங்கரன் கோயில், ஸ்ரீரங்கம், ஆர்.கே.நகர் இடைத்தேர்தல் வகையிலேயே மீண்டும் அமையும். எனவே, 19ஆம் திகதிக்கு முன்பே இரு தொகுதிகளிலும் தேர்தலை நடத்த வேண்டும். என்று அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# வாக்குப்பதிவின் போது விபத்து வாக்குச்சாவடியில் தென்னை மரம் விழுந்து 21பேர் படுகாயமடைந்தனர்



திருக்காட்டுப்பள்ளி அருகே வாக்குப்பதிவின் போது தென்னை மரம் விழுந்து 21 பேர் படுகாயம் அடைந்தனர். தேவகோட்டையில் பாடசாலை கட்டடம் இடிந்து விழுந்து 3 பேர் காயமடைந்தனர்.

தஞ்சை மாவட்டம் திருவையாறு தொகுதிக்குட்பட்ட திருக்காட்டுப்பள்ளி அருகே உள்ளது பழமார்நேரி கிராமம்.

இங்குள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் வாக்குச்சாவடி அமைக்கப்பட்டிருந்தது.

இந்த பகுதியல் நேற்று முன்தினம்மழை பெய்த போதிலும், இந்த வாக்குச்சாவடியல் ஏராளமான வாக்காளரகள் ஆர்வத்துடன் வாக்களித்து கொண்டிருந்தனர்.

பிற்பகல் 1.45 மணியளவில் வாக்குச்சாவடியின் முன பகுதியில் நின்ற தென்னை மரம் வேரோடு சாய்ந்து வாக்குச்சாவடி கட்டடத்தின் மீது விழுந்தது.

இதில் மேற்கூரையில் இருந்த ஓடுகள் உடைந்து வாக்களிக்க வரிசையில் நின்றவர்கள் மீது விழுந்தது.

இதில் பழமார்நேரி கிராமத்தை சேர்ந்த 21 பேர் படுகாயம் அடைந்தனர்.

உடனே வாக்குச்சாவடி மையத்தில் பணியில் இருந்த பொலிஸார் காயம் அடைந்தவர்களை மீட்டு திருக்காட்டுப்பள்ளி அரசு வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

அங்கு அவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது.பின்னர் மேல் சிகிச்சைக்காக தஞ்சை மருத்துவ கல்லூரி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (இ-5)

# அதிகாரி உட்பட 5 பேர் மரணம்

தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று முன்தினம் நடைபெற்ற போது தேர்தல் அதிகாரி உட்பட 5 பேர் மரணம் அடைந்ததாக கூடுதல் டி. ஜி.பி. சைலேந்திரபாபு தெரிவித்தார்.

தமிழகத்தில் 232 தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு நேற்று முன்தினம் மாலை 6 மணியுடன் முடிவடைந்தது. வாக்குப்பதிவு இயந்திரங்கள் சீலிடப்பட்டு வாக்கு எண்ணும் மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இந்நிலையில் தேர்தல் பாதுகாப்பு பணிகள் குறித்து கூடுதல் டி.ஜி.பி. சைலேந்திரபாபு தெரிவிக்கையில்,

ஒரு சில இடங்களில் நடைபெற்ற சிறுசிறு சம்பவங்கள் தவிர, அமைதியான முறையில் வாக்குப்பதிவு நடந்துள்ளது. கட்சிகள் இடையே ஏற்பட்ட மோதல் தொடர்பாக 8 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (இ-5)

## பாரதச் செய்தி

# ஆதரவற்ற நிலையில் தவிக்கும் மகாத்மா காந்தியின் பேரன்

## நாசாவில் விஞ்ஞானியாக பணியாற்றியவர்



(டில்லி)

டில்லியில் ஆதரவற்றோர் இல்லத்தில் தங்கியுள்ள மகாத்மா காந்தியின் பேரன் கனுபாய் காந்திக்கு உதவ டில்லி அரசு முன்வந்துள்ளது.

மகாத்மா காந்தியின் பேரனான கனுபாய்க்கு தற்போது 87 வயதாகிறது. அமெரிக்காவின் நாசாவில், விஞ்ஞானியாக பணியாற்றி ஓய்வு பெற்ற இவர், தனது மனைவியுடன் கடந்த 2014ஆம் ஆண்டு இந்தியா வந்துள்ளார்.

தனது இறுதிக் காலத்தை உறவினர்களுடன் கழிக்க அவர் விரும்பியதாகவும், ஆனால், அவர்களின் ஆதரவு இல்லாததால், குஜராத்தில் உள்ள சபர்மதி ஆசிரமத்தில் இருந்து இம்மாதம் 8ஆம் திகதி டில்லியில் உள்ள Guru Vishram Vridh Ashram எனும் ஆதரவற்றோர் இல்லத்திற்கு வந்து அவர்கள் தங்கியுள்ளனர்.

இந்நிலையில், கனுபாய் காந்திக்கு உடல்நிலை சரியில்லாததை அடுத்து அவருக்கு வைத்தியர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர். அவரை நேரில் சந்தித்த டில்லி மாநில அமைச்சர சந்தப் குமார் அவருக்கு தேவைப்படும் உதவியை அளிக்க தங்கள் அரசு தயாராக இருப்பதாக தெரிவித்தார். (இ-5)

# படகு விபத்தில் 19பேர் மரணம்



மேற்கு வங்காள மாநிலம் நாடியா மாவட்டம் சாந்திப்பூரைச் சேர்ந்த 50இற்கும் மேற்பட்டோர் கடந்த சனிக்கிழமை அயல் கிராமத்தில் நடந்த ஒருவிழாவில் கலந்து கொண்டனர். பின்னர், நள்ளிரவு ஒரு இயந்திர படகில் ஊர திரும்பிக்கொண்டு இருநதனர். அப்போது அவர்களது படகு கங்கை நதியில் கவிழ்ந்து மூழ்கியது.

இதில் ஏராளமானோர் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டனர். அவர்களை மீட்கும் பணியில் கடந்த 2 நாட்களாக தேசிய பேரிடர் மீட்பு படையினர் ஈடுபட்டு வந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு12 உடல்கள்மீட்கப்பட்டன. இந்த நிலையில் மேலும் 7 பேரின் உடல்களை தேசிய பேரிடர் மீட்பு படையினர் நேற்று முன்தினம் மீட்டனர்.

இந்த விபத்து பற்றி மாவட்ட ஆட்சியாளர் சவுமித்ரா மோகன் கூறுகையில், 'அளவுக்கு அதிகமானவர்கள் படகில் ஏற்றப்பட்டதால் படகு கவிழ்ந்து உள்ளது. படகு கவிழ்ந்த 1.5 கிலோமீற்றர் சுற்றளவிற்கு காணாமற் போனவர்களை தேடும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது என்றார்.

படகு விபத்தில் பொலிஸார் துரிதமாக செயற்படவில்லை என்று கூறி சாந்திப்பூரைச் சேர்ந்தவர்கள் நேற்று முன்தினம் பொலிஸாரின் படகுகளை எரித்ததும், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் கண்ணீர புகை குண்டுகளை வீசியும், றப்பர் குண்டுகளால் சுட்டும் விரட்டியடித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சட்டமன்ற தேர்தலில் பதிவான வாக்கு முடிவுகள் வெளியீடு

தமிழக சட்டசபை தேர்தல் வாக்களிப்பு நேற்று முன்தினம் முடிவடைந்த நிலையில் அதன் வாக்கு பதிவுக்கான சதவீத முடிவுகள் வெளியாகின.

பல தரப்பட்ட முடிவுகள் வந்த நிலையில் தேர்தல் ஆணையர் ராஜேஸ் லக்கானி உறுதியான தகவல்களை வெளியிட்டார்.

மேலும் ஆட்சியை பிடிக்கும் கட்சி மற்றும் தலைவர் யார். என சில ஊடகங்கள் நடத்திய கருத்துக்கணிப்பு தகவல்கள் வெளியாகியுள்ளன.


தமிழகத்தில் 232 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு முடிந்துள்ள நிலையில், தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்பு முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதில் பெரும்பான்மை முடிவுகளில் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்று கருணாநிதி முதல்வராக வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# போர் விமானங்கள் குண்டு மழை; ஐ.எஸ்.தீவிரவாதிகள் 27 பேர் பலி

(பெய்ரூட்)

**சிரியாவில் அலெப்போ நகரில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் நிலைகள் மீது துருக்கி போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்ததில் ஐ.எஸ். தீவிரவாதிகள் 27 பேர் கொன்று குவிக்கப்பட்டனர்.**



சிரியாவில் கடந்த 5 ஆண்டுகளாக நடந்து வந்த உள்நாட்டு போர் அமெரிக்கா. ரஷ்யா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் முயற்சியால் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு உள்ளது.

அங்கு கடந்த பெப்ரவரி மாத இறுதியில் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்தது.

அல்கொய்தா தீவிரவாத இயக்கத்தின் ஆதரவு பெற்ற அல்நுஸ்ரா தீவிரவாதிகளின் ஆதிக்கம் உள்ள பகுதிகளை தவிர்த்து அனைத்து இடங்களிலும் போர் நிறுத்தம் அமுலில் உள்ளது.

ஆனாலும் சிரியாவின் முக்கிய நகரான அலெப்போ நகரில் போர் நிறுத்தத்தை மீறி அரசுப்படையும் கிளர்ச்சியாளர்கள் படையும் மோதி வருகின்றன.

மற்றொரு பக்கம் ஐ.எஸ். தீவிரவாதிகளின் கை ஓங்கி வருகிறது. அமெரிக்க கூட்டுப்படை அவர்களது இலக்குகளை குறிவைத்து தொடர்ந்து வான்தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்த நிலையில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக துருக்கி இராணுவமும் சிரியாவில் வான் தாக்குதலை நடத்த தொடங்கி உள்ளது.

நேற்று முன்தினம் அலெப்போ நகரில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் நிலைகள் மீது துருக்கி போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்தன. இதில் ஐ.எஸ். தீவிரவாதிகள் 27 பேர் கொன்று குவிக்கப்பட்டனர். (இ-5)

# சிரியாவில் மனிதப்புதைகுழியில் ஆயிரக்கணக்கான சடலங்கள்

## ஐ.எஸ்.தீவிரவாதிகள் வெறியாட்டம்



வடக்கு சிரிய நகரமொன்றில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனிதப் புதைகுழியொன்றில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த நகரம் சுமார் ஒருமாத காலம் வரையில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்ததாகவும், இந்த குறுகிய காலப்பகுதிக்குள்ளேயே இந்த இடத்தில் ஆயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது.

துருக்கியுடனான வட சிரியாவின் எல்லைப் பகுதியில் இருந்து 12 மைல்களுக்கும் குறைவான தூரத்தில் உள்ள Suluk நகரமானது, கடந்த பெப்ரவரி மாதம் ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.

இதனையடுத்து குறித்த நகரத்தில் நிலைகொண்டிருந்த ஐ.எஸ் தீவிரவாதிகள் மீது படை நடவடிக்கைகளை முன்னெடுத்த குர்திஷ் மக்கள் பாதுகாப்பு படையினர், கடந்த மார்ச் மாதத்தில் இந்த நகரத்தை மீளக் கைப்பற்றியிருந்தனர்.

இந்த நகரத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகள் வெடிகுண்டுகளைப் புதைத்து வைத்திருக்கலாம் என்ற அச்சத்தின் பேரில், குர்திஷ் மக்கள் பாதுகாப்பு படையினர் அங்கு தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இந்த பாரிய மனித புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த மனிதப் புதைகுழியில் ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதோடு, இவர்கள்படுகொலை செய்யப்பட்டு இங்கு புதைக்கப்படுவதற்கு முன்னர் சித்திரவதைகளுக்கு உள்ளாகியுள்ளமை சடலங்களில் காணப்படும் காயங்கள் மூலம் தெரியவருவதாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து சிரியாவில் இடம்பெற்று வரும் மோதல், வன்முறை மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளினால் இது வரை 4 இலட்சத்து 70 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளதாக, கடந்த பெப்ரவரி மாதத்தில் வெளியான அறிக்கையொன்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)




# திமிங்கிலங்கள் 24 உயிரிழப்பு



கலிபோர்னியாவின் ஆழமற்ற வளைகுடாவில் கடந்த வார இறுதியில் கரையொதுங்கிய பைலட் திமிங்கிலங்களில் 24 இறந்துள்ளதாகவும், உயிருடன் இருந்த மூன்று பைலட் திமிங்கிலங்கள் ஆழமான கடற்பகுதியில் விடப்பட்டுள்ளதாகவும் மெக்ஸிகோவின் சுற்றுச் சூழல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆழமான கடற்பகுதியில் விடப்பட்ட திமிங்கிலங்களில் இரண்டு பெரியவை என்றும், ஒன்று குட்டி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கலிபோர்னியாவின் ஆழமற்ற வளைகுடாவில் கரையொதுங்கிய குறித்த திமிங்கிலங்களை கடற்பகுதிக்குள் கொண்டுவிடும் நடவடிக்கைகள் அன்றிரவு முழுவதும் அப்பகுதி மக்கள், கடற்படையினர் மற்றும் சுற்றுச்சூழல்ஆர்வலர்கள்ஆகியோரால் முன்னெடுக்கப்பட்ட போதும், அது பலனளிக்காமையினால் 24 பைலட் திமிங்கிலங்கள் இறந்ததாகவும் சுற்றுச் சூழல் நிறுவனம் தெரிவித்துள்ளது. (இ-5)

# பூமியை ஒரு லட்சம் தடவை சுற்றி விண்வெளி ஆய்வகம் சாதனை

(நியூயோர்க்)

சர்வதேச விண்வெளி ஆய்வகம் நேற்று பூமியை ஒரு இலட்சம் தடவை சுற்றி முடித்து சாதனை படைத்துள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் உள்ளிட்ட 13 நாடுகள் இணைந்து பூமிக்கு மேலே சர்வதேச விண்வெளி ஆய்வகம் கட்டி வருகின்றன. 6. மாதத்துக்கு ஒருமுறை 3 வீரர்கள் சென்று தங்கி அங்கு கட்டுமான பணியில் ஈடுபடுகின்றனர்.

இந்த விண்வெளி ஆய்வகம் பூமியில் இருந்து 250 மைல் தூரம் மேலே உள்ளது. கடந்த 1998 ஆம் ஆண்டு முதல் விண்வெளி ஆய்வகம் கட்டுமான பணி தொடங்கி நடந்து வருகிறது. 2000 ஆம் ஆண்டு முதல் விண்வெளி வீரர்கள் சென்று தங்கி பணியாற்றி வருகின்றனர்.

இதுவரை அங்கு 220 இற்கும் மேற்பட்டோர் சென்று தங்கியுள்ளனர். இந்த நிலையில் சர்வதேச விண்வெளி ஆய்வகம் நேற்று பூமியை ஒரு இலட்சம் தடவை சுற்றி முடித்து சாதனை படைத்துள்ளது.

இது 200 கோடியே 60 இலட்சம் மைல் தூரம் பயணம் செய்ததற்கு சமமாகும். மேலும் செவ்வாய்க்கிரகத்துக்கு 10 தடவை சென்று வந்ததற்கு ஒப்பாக கருதப்படுகிறது. நெப்ரியூனுக்கு ஒரு தடவை வந்து சென்றதற்கும் சமமாகும்.

இந்ததகவலை அமெரிக்காவின் நாசா நிறுவனம் அறிவித்துள்ளது. சர்வதேச விண்வெளி ஆய்வகத்தில் அண்மையில் 2 அமெரிக்கர்கள், 3 ரஷ்யர்கள் மற்றும்ஆங்கிலேயர்ஒருவர் என 6 பேர் தங்கியிருந்தனர். ஒரு வருடத்தில் அங்கிருந்து 30 இலட்சம் போட்டோக்களை எடுத்து பூமிக்கு அனுப்பியுள்ளனர். (இ-5)

# சுற்றுலா தலத்தில் மண்சரிவு 15 மாணவர்கள் உயிரிழப்பு



மேற்கு இந்தோனேசியாவில் பிரபல சுற்றுலா தலமொன்றில் இடம்பெற்ற மண்சரிவில் 15 மாணவர்கள் பலியாகியுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தெரிவித்தனர்.

சுமாத்ரா தீவின் வடக்கே சிபோலான்ஜித் எனும் இடத்திலுள்ள பிரபல நீர்வீழ்ச்சிப் பிராந்தியத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த மண்சரிவு இடம்பெற்றுள்ளது.

இதுவரை 15 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும்காணாமற்போயுள்ள மேலும் நால்வர் மண்சரிவின் கீழ் புதையுண்டுள்ளதாக நம்பப்படுவதால் அவர்களை மீட்கும் பணி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பிராந்திய அதிகாரிகள் தெரிவித்தனர். மேற்படி மண்சரிவையடுத்து 57 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். (இ-5)

# கோத்தபாயவின் இராணுவ பாதுகாப்பும் விலக்கப்படும்

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையின் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு அளிக்கப்பட்டுள்ள இராணுவப் பாதுகாப்பும் கட்டம் கட்டமாக விலக்கிக் கொள்ளப்படும் என்று பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர்.

அரசாங்கத்தின் கொள்கை ரீதியான முடிவின் படி. முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு அளிக்கப்பட்டுள்ள இராணுவப் பாதுகாப்பும் கட்டம் கட்டமாக விலக்கிக் கொள்ளப்படும்.

அதற்குப் பதிலாக சிறப்பு அதிரடிப்படை கொமாண்டோக்கள். அவருக்கு எந்த குறைவுமின்றி பாதுகாப்பை அளிப்பார்கள். கோத்தபாய ராஜபக்ஷவுக்கு தற்போது 50 இராணுவ கொமாண்டோக்கள் பாதுகாப்பு அளித்து வருகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கான இராணுவப் பாதுகாப்பையும் விலக்கிக் கொண்டுள்ளோம். அவருக்கும் சிறப்பு அதிரடிப்படை கொமாண்டோக்களே பாதுகாப்பு அளிக்கின்றனர்.

ஒரே தடவையில் அவரது இராணுவப் பாதுகாப்பு விலக்கப்படவில்லை. இரண்டு கட்டங்களாகவே அது நடைமுறைப்படுத்தப்பட்டது.

- 103 பேர் கொண்ட இராணுவப் பாதுகாப்பு அணியில் இருந்த 50 கொமாண்டோக்கள் ஏற்கனவே விலக்கப்பட்டு விட்டனர். எஞ்சியுள்ள 53 இராணுவ கொமாண்டோக்களும் மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு அணியில் இருந்து விலக்கப்படுவர். இந்த நடைமுறைக்கு நேரம் தேவைப்படும்.

இதுபோன்று, கோத்தபாய ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காக உள்ள 50 இராணுவ கொமாண்டோக்களும் ஒரே நேரத்தில் விலக்கிக் கொள்ளப்படமாட்டார்கள். மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காக உள்ள இராணுவக் கொமாண்டோக்கள். விலக்கிக் கொள்ளப்பட்ட பின்னர். கட்டம் கட்டமாகவே கோத்தபாய ராஜபக்ஷவின் இராணுவ பாதுகாப்பு அணி விலக்கிக் கொள்ளப்படும்.

முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் சிறப்பு அதிரடிப் படையை. சட்டம் ஒழுங்கு அமைச்சினால் அமைக்கப்பட்டுள்ள நிபுணர்களை உள்ளடக்கிய குழுவே கையாளும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நாயுருவி/ நாய்க்குருவி

**Botanical Name-** Achyranthus bidentata
**Family-** Amaranthaceae
**Sinh-** Karalsebo

நாயுருவி மழைக்காலங்களில்தான் செழித்து வளரும். பொதுவாக கூட்டமாக வளரும். செடி, கொடிகள் அடர்ந்த புதரில் வளரும். அடியிலிருந்து 2,3 கிளைகளுடன் முளைத்து ஒரே நேராக நீண்டு ஒன்றரை முதல் 2 மீற்றர் நீளம் வரை வளரும். வளர்ந்து வரும்போது ஒவ்வொரு கிளையின் நுனியிலும் சிறிய கதிர்விடும். இந்தக் கதிர் வளர்ந்து சுமார் 10- 14 செ.மீ.நீளமுள்ளதாக இருக்கும். கதிர்விடும்போதே மொட்டு விட்டு புஷ்பித்து விதை விட்டுக் கொண்டேயிருக்கும். விதை முற்றியவுடன் காய்ந்து வெடித்துச் சிதறும். காய்ந்த விதைகளின் பின்புறம் கூர்மையான முள்போன்ற உமிகள் இணைந்துள்ளபடியால் விதைமேல் எதுபட்ட போதிலும் அதில் உருவி தொத்திக்கொண்டு வேறுபல இடங்களுக்குச் சென்று தன் இனத்தை பெருக்கிக் கொள்ளும். நாயுருவியில் இரண்டு இனங்கள் உண்டு. ஒன்று செடிக் காம்பு, இலை, கதிர் யாவும் பசுமையாகி இலை நரம்பின் இடையே சற்று வெளுத்துக் காணும். இதனை வெண் நாயுருவி என்றும் மற்றொன்று காம்பு, இலை ஓரங்கள் யாவும் சற்று சிவந்த நிறமாக இருக்கும். இதனை செந்நாயுருவி என்பர். இரண்டின் குணமும் பொதுவாக ஒன்றுதான் என்றாலும் செந் நாயுருவிக்குத்தான் விசேட மருத்துவக் குணங்கள் உண்டு.

மருத்துவக்குணங்கள்

இதன் இளம் செடியை (கதிர் விடாதபடி) வேருடன் எடுத்து மண், தூசுகளை நீக்கி நீரில் கழுவி ஒன்றிரண்டாக சிதைத்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு ஒரு பங்கு நீர் விட்டு 1/8 பங்காக சுண்டக்காய்ச்சி 30 மில்லி அளவு காலை, மாலை குடிக்க சிறுநீர் நன்கு வெளிப்படும். உடல் வீக்கம் குறையும். இந்தக் குடிநீரால் சூதகத் தடை அதாவது மாதவிடாய்க் காலத்தில் இரத்தப் போக்கை சீராக்கும். தினமும் பசுமையான மூலிகையிலேயே குடிநீர் தயாரித்துக்கொள்ள வேண்டும். தினமும் இது கிடைக்காத சமயம் வேண்டியளவு செடிகள் கிடைக்கும் போது சேகரித்து கழுவி வெட்டி உலர்த்தி தூள் செய்து புட்டியில் அடைத்து வைத்துக்கொள்ளவும். 10 கிராம் பொடியை 150 மில்லி வெந்நீரில் ஊறவிட்டு (15 நிமிடங்கள்) வடித்து காலை மாலை அருந்தவும்.



அரிப்பு, படை, சொரி, சிரங்கு குணமாக நாயுருவி இலைகளை நன்கு கழுவி சுத்தம் செய்து அம்மியில் வைத்து மைபோல அரைத்து அரிப்பு, படையுள்ள இடங்களில் கனமாகப் பூசி (இரவில்) காலையில் வேப்பிலை, மஞ்சள் அவித்த நீரில் நன்றாக கழுவிவிட்டு தேங்காய் எண்ணெய் மட்டும் தடவி வந்தால் மிகுந்த குணம் கிடைக்கும்.

நாயுருவி இலைகளை நன்கு கழுவி அம்மியில் வைத்து அரைத்து 2.5 கிராம் அளவு வாயில் போட்டு வெந்நீர் குடிக்க மூலரோகம் குணமாகும். இவ்விதம் தொடர்ந்து 7 நாட்கள் கொடுக்கலாம்.

பெரும்பாடு அதாவது மாதவிடாய்க் காலத்து அதிகளவு இரத்தப் போக்கு ஏற்பட்டால் நாயுருவி இலைகளை சுத்தம்செய்து சாறு எடுத்து 40 மில்லி சாற்றை 200 மில்லி மோருடன் கலந்து காலையில் 7 நாட்கள் கொடுக்க இரத்தப்போக்கு குணமாகும்.

நாயுருவி வேர்களை உலர்த்தி பொடித்து அரித்து 2 கிராம் காலை, மாலை எடுக்க இருமல், ஆஸ்துமா போன்றன குணமாகும்.

நாயுருவி இலைகளை அரைத்து தேள் கொட்டிய இடத்தில் பூசினால் விஷம் இறங்கும்.

நாயுருவி இலைகள், சாதிக்காய் இரண்டையும் ஒரேயளவு எடுத்து அரைத்து தேமல் உள்ள இடங்களில் தடவிவந்தால் தேமல் மறையும்.

நாயுருவி குச்சியால் தினமும் பல்துலக்கினால் பல்லீறுகளில் இரத்தம் கசிதல் குணமாகும்.

நாயுருவி இலைகளை உலர்த்தி பொடிசெய்து 2 கிராம் அளவு காலை, மாலை வெந்நீரில் சாப்பிட நோய்த்தொற்று, இதயசெயற்றிறன் குறைவு போன்ற பாதிப்புக்கள் குணமாகும்.

மழை பெய்து நாயுருவி இலைகள் செழிப்பாக வளரும் காலத்தில் இலைகளை நிறையச் சேகரித்து இடித்துச் சாறு பிழிந்து கொள்ள வும்.

இந்தச் சாற்றை மெல்லிய பருத்திநூல் துணியில் நனைத்து பிழியாமல் அப்படியே உலர்த்தவும். இப்படி 7 முறை தோய்த்து அதே துணியில் மேற்படி சாறுகளை ஏற்றி உலர்ந்தவுடன் திரியாக சுருட்டி வைத்துக்கொண்டு பசுநெய்யை பழகிய மண் அகலில் விட்டு சுருட்டிவைத்து திரியை அதில்போட்டு விளக்குப் போல ஏற்றி எரியும் புகையை வேறு ஒரு ஓட்டில் விளக்கெண்ணெய் தடவிப் பிடித்து வந்தால் புகை நிறையப் படியும். இப்புகை யாவும் வழித்து ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் எடுத்து ஆமணக்கெண்ணெயை அளவாகச் சேர்த்து மை போல செய்து வைத்துக்கொண்டு தினம் இருவேளை கண் இமையில் மைதீட்டுவது போல தீட்டிவந்தால் பார்வைக்கோளாறுகள் நீங்கி கண்ணுக்கு குளிர்ச்சியைக் கொடுக்கும்.

அடிவேர் முதல் இலைக்காம்பு விதையாவும் சமூலம் எண்பது. இதை வேண்டிய அளவு எடுத்து உலர்த்தி எரித்து சாம்பலாக்கி சேகரித்து வைத்துக்கொண்டு மாதவிடாயின் போது இரத்தப்போக்கு சீராக இல்லாதவர்கட்கு 1-2 கிராம் அளவு தேனில் கொடுத்துவர சூதகத்தடை விலகி இரத்தப்போக்கு சீராகும். இதேயளவு பிரசவித்த பெண்களுக்கு உதிரச் சிக்கல் உண்டாகும் போது கொடுக்க 8 நாட்களில்கர்ப்பாசயம் சுத்தமாகும்.

நாயுருவிஉப்பானதுபித்தஉஷ்ண சம்பந்தப்பட்ட வியாதிகளையும் நுரையீரல், கல்லீரல் சம்பந்தப்பட்ட வியாதிகளையும் நீக்கவல்லது. ஆனால் தனி உப்பாகப் பயன்படுத்தக் கூடாது.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

நாயுருவி சமூலச் சாம்பல், ஆண்பனைமரத்தின் பூமடல்களை உலர்த்தி கொளுத்திய சாம்பல், இரண்டும் சம அளவாக எடுத்து 5 பங்கு நீர்விட்டு நன்றாகக் கரைத்து (மட்பாண்டத்தில்) 15 நிமிடங்கள் அசையாமல் வைக்க வண்டல் அடியிலும் நீர் மேலேயும் தெளியும். அந்நீரை இறுத்து 2 பங்காக்கி ஒரு மண் சட்டியை அடுப்பேற்றி காயவிட்டு காய்ந்ததும் இறுத்த நீரை சிறுகச் சிறுக விட்டு வர சட்டியில் உப்பு படியும். இவ் உப்பை சுரண்டி எடுத்து வேறு மண் சட்டியில் போட்டு மறுபடியும் அடுப்பில் வைத்து இரண்டாவது பாகம் இறுத்த நீரை அந்த உப்பின் மேல் சிறுகச் சிறுக ஊற்றி யாவும் சுண்ட எரிக்க உப்பு படியும். அதனைச் சுரண்டி எடுத்து அரைத்து, அரித்து புட்டியில் பத்திரப்படுத்தி மேற்கூறிய நோய்கட்கு 500 மி.கி-1 கிராம் அளவு தேன், நெய், மோர், வெண்ணெய் அனுபானத்தில் கொடுக்கலாம். வயிற்றுப் புண்ணுக்கும் இது சிறந்த மருந்தாகும்.

# முள்ளிவாய்க்கால்-த விடுதலைத் தாகத்தி

முள்ளிவாய்க்கால் படுகொலை தமிழர் தாயகமெங்கும் ஈழத்தமிழர்களின் இரத்தச்சகதியால் வரையப்பட்ட ஈழத்துக் காவியம் அது.

தமிழர் வரலாற்றிலே மறக்க முடியாத நாட்கள், நீண்ட பெரு வலியுடன் ஈழத் தமிழர்களின் இறுதி மூச்சுக்காற்று தாயக மண்ணிலே புதையுண்டு, எரியுண்டு, கதறக் கதற படுகொலை செய்யப்பட்ட இந்த முள்ளிவாய்க்கால் படுகொலை தினம் என்றும் எமது நெஞ்சில் அணையாது எரியும் பெரு நெருப்பு.

எத்தனை தடைகள் விதிக்கப்பட்டாலும் இந்த நெருப்பை எவராலும் அணைத்து விட முடியாது.

உடல் தெறிக்க, சிதை எரிய சிங்கள இனவாத அரசின் கொடூர செயல்கள் அரங்கேறிய அந்தநாட்களின் வலிகள் தமிழர்களின் வாழ்வில் என்றும் எச்சமாய் தொடர்கிறது.

2006 இல் மாவிலாற்றில் ஆரம்பித்த ஆற்றுப் பிரச்சினை 2009 இல் முள்ளிவாய்க்கால் படுகொலைகளுடன் ஈழக்கனவுகள் மண்ணில் புதையுண்டு போகும் என சிங்கள அரசு தப்புக்கணக்கு போட்டது.

பொதுமக்கள் செறிவாக வாழ்ந்த இடங்களை எறிகணைத் தாக்குதல்களாலும் ஷெல்வீச்சுக்களாலும் கோரத் தாண்டவமாடி கொலைக்களமாக்கியது சிங்களப்படை.

துண்டாடப்பட்ட நிலங்களில் திண்டாடிய மக்கள் பாதுகாப்புத் தேடி அலைய, பாதுகாப்பு வலயமென புதுமாத்தளன் முதல் அம்பலவன் பொக்கணை,வலைஞர்மடம்,கரையா முள்ளிவாய்க்கால், வெள்ளா முள்ளிவாய்க்கால் ஆகிய பகுதிகளை பாதுகாப்புவலயமாக சிங்கள அரசாங்கம் அறிவித்த இப்பகுதிகளில் மக்கள் கொத்துக் கொத்தாக படுகொலை செய்யப்பட்டார்கள்.

இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளின் ஆதரவுடனும் பயங்கரவாதத்தினைத் தோற்கடித்தல் என்ற பரப்புரையின் கீழ் வரலாறு காணாத தமிழின படுகொலையை நிகழ்த்தி விட்டு தெற்கில் சிங்கள அரசும்அதன்படைகளும்கோலாகலமாக வெற்றி விழாவாகக் கொண்டாடுகிறது.

தமிழர் தாயகப் பகுதிகளில் உயிரிழந்த எமது உறவுகளை நினைவு கூர அனுமதியில்லை. இதுகொடிய இன ஒடுக்கு முறையன்றி வேறு என்னவாக இருக்க முடியும்? முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழினத்தின் விடுதலையின் குறியீடு.

தமிழீழ மக்களின்விடுதலை வேட்கையின் சாட்சியம். விழ விழ எழுவோம் என்பதற்கு ஆதாரம்.பாலையும் நெய்தலும் கலந்த அந்த வறண்ட மண்ணில் மண்ணின் மைந்தர்கள் நிகழ்த்திய தனிச்சமர் தமிழர்களின் மன உறுதிக்குச் தக்க சான்று.

அந்த மண்ணில் ஊனுமின்றி உறக்கமுமின்றி ஈழமக்கள் பூவும் பிஞ்சும் காயும்கனியுமாகவல்லவா இறுதிவரை போராடினார்கள்.

முள்ளிவாய்க்கால் என்கின்ற போது ஒவ்வொரு ஈழத் தமிழனது நரம்புகளும் முறுக்கேறும்.இதயத்துடிப்பு அதிகரிக்கும்,நெஞ்சம் கனக்கும். தமிழீழம் என்ற இலட்சியக்கனவு உயிர் பெற்று எம்மை வழி நடத்தும்.உலக வரலாற்றில் மனிதகுலம் பல்லாயிரம் போர்க்களங்களைக் கண்டிருக்கிறது.

ஒவ்வொரு போர்க்களங்களும் ஒவ்வொரு வகையான செய்திகளைச் சொல்லிச் சென்றிருக்கிறது.போர்வெறி பிடித்த மொங்கொலியன் செங்கிஸ் கான் மத்திய ஆசிய நாடுகள் மீது மேற்கொண்ட போர்வெறி பல்லாயிரம் மக்களைக் கொன்று குவித்தது.

நவீன உலகின் இனவெறியன் நாசிச ஹிட்லர் யூதர்கள் மீது திணித்த போர் பல இலட்சம் யூதர்களைச் சாம்பலாக்கியது. ஆனால் இவையெல்லாவற்றையும் தாண்டி புதிய உலக ஒழுங்கிலும் ஆர்மேனிய, கொசோவா, அல்பேனியா, சூடான், எரித்திரியா, கிழக்குத் தீமோர் என போர் வெறியர்கள் நிகழ்த்திய மனிதப் படுகொலைகள் மானிட வரலாற்றின் அழியாச் சுவடுகளை பதித்திருந்தாலும் இந்த 21 ஆம் நூற்றாண்டில் மிகப்பெரும் மனித குலத்திற்கெதிரான இனப்படுகொலை முள்ளிவாய்க்கால் மண்ணிலேயே நிகழ்ந்தது.

உலகத்தமிழினமே முள்ளிவாய்க்காலில் போரின் பிடியில் சிக்குண்ட எமது உறவுகள் இட்ட அவலக்குரல் உன் காதுகளில் கேட்கிறதா? மானிடம் பேசும் மாண்புமிகு மானிட வாதிகளுக்கும் எம்முறவுகளின் அவலக்குரல் கேட்கவில்லையே!! உலகத் தலைநகரங்களின் வீதிகளில் புலம்பெயர் தமிழர்கள் இறங்கி நீதி கேட்ட போது இராஜதந்திரிகள் சிட்டாகப் பறந்தார்கள்.

பறந்தவர்கள் பஞ்சாகத் திரும்பி வந்தனர். கட்டுக்கட்டாய் அறிக்கைகள் வேறு விட்டனர். அப்போதும் முள்ளிவாய்க்காலில் மக்கள் மடிந்து கொண்டுதான் இருந்தார்கள்.உணவின்றி பட்டினியால் மடிந்தார்கள், குண்டுபட்டு மடிந்தார்கள், படுகாயமடைந்து மருத்துவச் சிகிச்சையின்றி மடிந்தார்கள்.

இரசாயனக் குண்டுக்கு இரையாகி மடிந்தார்கள். இவையெல்லாம் உலகின் கண்களுக்கு தெரியவில்லையே. இப்பெருங்கொடுமையை இந்த உலகம் ஏன் கேட்கவில்லை, பார்க்கவில்லை. அல்லது பார்த்தும் பாராமுகமாக நடந்து கொண்டது.

எம்மினத்திற்கு ஏன் இந்தக் கொடுமை நிகழ்ந்தது. எம்மினம் என்னதான் தவறிழைத்தது. கேட்கக் கூடாத எதையாவது எம்மினம் கேட்டு விட்டதா? மனிதப்பிறவியின் பிறப்புரிமையான சுதந்திரத்தைத் தானே கேட்டது. சுதந்திரத்தை கேட்டதற்கா இப்பெருந் தண்டனை.

முள்ளிவாய்க்காலில் எம்முறவுகள் எழுப்பிய மரண ஓலங்கள் ஆன்ம ஓலங்களாக தமிழ்த் தேசியத்தின் நெஞ்சில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.



முள்ளிவாய்க்கால் மண்ணில் சிங்களப்படை கொலை வெறியாட்டத்தை நிகழ்த்துவதற்குத் தடையாக ஆனந்தபுரத்தில் எம்மின வீரர்கள் நடத்திய தனிச்சமர் எம்மின விடுதலை இலட்சியத்தின் பற்றுறுதிக்கு தக்கசான்று.

# -தணியாத தமிழீழ
# தின் அறைகூவல்!




மக்கள் மடிந்து
ாவின்றி பட்டினி
மடிந்தார்கள்,
கிச்சையின்றி

யாகி மடிந்தார்
கண்களுக்குத்
கொடுமையை
லை, பார்க்க
ழகமாக நடந்து

ாடுமை நிகழ்ந்
வறிழைத்தது?
மினம் கேட்டு
ப்புரிமையான
சுதந்திரத்தை
ா.

யுகள் எழுப்பிய
ளாக தமிழ்த்
கொண்டிருக்



ிங்களப்படை
த்துவதற்குத்
ின வீரர்கள்
தலை இலட்
.

நாற்புறத்தும் பல்லாயிரம் எதிரிகள் சூழ்ந்து கொண்டு சர்வதேச நாடுகளின் ஆயுத தொழில்நுட்ப உதவியோடு நிகழ்த்திய கொடும் போரை எதிர்கொண்டு பல்லாயிரம் எதிரிகளை வீழ்த்திய சிலநூறு புலி வீரர்களின் வீர உடல்கள் அந்த மண்ணிலே வீழ்ந்ததைத்தான் எப்படி மறப்போம்.

தம் இறுதி மூச்சுவரை தமிழீழ இலட்சியத்திற்காக அவர்கள் சிந்திய குருதிதான் வீண் போகுமா? அந்த இறுக்கமான போரினுள்ளே சிங்களத்தின் சேனைகளைச் சிதைக்க எம் வீரர்கள் மனிதக் குண்டுகளாக எதிரிகளினுள்ளே வெடித்துச் சிதறிய அளப்பரிய தியாகங்களைத்தான் எண்ணிப் பார்க்க முடியுமா?



தமிழீழம் என்கின்ற தணியாத இலட்சியத்திற்காக எத்தனை கொடிய துன்பங்களையும் சுமக்கத் தயாராகிய வன்னியின் மூன்றரை இலட்சம் மக்களின் அவலம் தோய்ந்த முள்ளிவாய்க்கால் வாழ்வைத்தான் எப்படி மறப்போம்.

எல்லாவற்றிற்கும் மேலாக மே 16, 17,18 ஆம் திகதிகளில் நிகழ்ந்த கொடுமை உலகில் எங்கேனும் நடந்ததுண்டா? முள்ளிவாய்க்கால் ஐ.நா.வரலாற்றில் படுமோசமான இருள் சூழ்ந்த அத்தியாயமாக அமைகிறது.

ஒன்றா,இரண்டா,மூன்று நாட்களில் 46,000 இற்கு மேல் ஈழத் தமிழர்களையல்லவா முள்ளிவாய்க்கால் மண்ணில் புதைத்தது சிங்களப் பேரினவாதம்.

தாயின் மடியிலிருந்த குழந்தை குண்டுபட்டு இறந்தது தெரியாமல் இருந்தாள் ஒருதாய்.

மறுபுறத்தே தாயிறந்தது தெரியாத மகவு பால் குடித்ததே தாய் மடியில்.

குழந்தையின் இரண்டு கைகளும் இழந்ததையிட்டுத் துடித்தாள் ஒரு தாய்.

கருவுற்ற தாயின்வயிற்றில் குண்டுபட்டு வயிற்றின் படுகாயத்தினூடே சிசு வெளித் தொங்கியதை இவ்வையகம் எங்கும் பார்த்ததுண்டா.

உலக இராணுவ வரலாற்றில் எந்தவொரு இராணுவமும் செய்யாத மிகக் கீழ்த்தரமான மிருகத்தனமான ஈனச்செயல்களை அங்கே எம்மினத்தின் மீது கட்டவிழ்த்து விட்டிருந்ததல்லவா.

அங்கே களத்திலே வீழ்ந்த பெண்களின் துயிலுரிந்த சிங்கள படைவீரர்களையும், பிணத்துடன் புணர்ந்த காமுகர்களையும் இறந்த பெண்களின் மார்பினை அறுத்த சிங்களத்தின் கொடுமையை யாரும் அறிந்ததுண்டா.

மனித மொழிகளில் சொல்லக் கூடிய இன்னும் எத்தனை எத்தனை கொடுமைகள் உள்ளதோ அத்தனை கொடுமைகளும் அந்த முள்ளிவாய்க்கால் மண்ணிலே நடந்தேறியது.

- சிறிய மீனை பெரிய மீன் விழுங்கும் : சாணக்கியர்
- தகுதியுள்ளவை உயிர்வாழும் : டார்வின்
- தற்காப்பு என்பது ஓர் இயற்கையான உணர்வு என்பதுடன் நீடித்த வாழ்க்கைக்கு அது அவசியமுமாகும் : சிக்மன்ட் ப்ராய்ட். இதை புரியாததன் விளைவுதான் தாயகத்தில் கட்டமைக்கப்பட்டுள்ள இன அழிப்புக்குள் சிக்கி நாம் இரையாக வேண்டியுள்ளது.

எனவே அபிவிருத்தி, நல்லிணக்கம், ஐக்கிய இலங்கை என்ற நுண்மையான இன அழிப்பு மாய வலைகளை அறுத்தெறிந்துவிட்டு கட்டமைக்கப்பட்ட இன அழிப்புக்கு எதிராக தொடர்ந்து போராடுவோம்.

தமிழீழம் ஒன்றே இன அழிப்பில் இருந்து எம்மை முழுமையாக பாதுகாக்கும் என்பதை புரிந்து கொள்வோம்.

தமிழீழத்தில் கட்டமைக்கப்பட்ட இன அழிப்புக்கு எதிராக போராடுவதே தேசியம் "தற்காப்பு மக்கள் யுத்தம்" முள்ளிவாய்க்கால் தமிழீழ இலட்சியத்தின் முடிவல்ல. அது தமிழீழத்தின் கருத்தரிப்பு தமிழினம் போராடும் தேவை மட்டும் வீச்சுக் கொண்டு வளர்ந்து வருகிறது.

முள்ளிவாய்க்கால் மண்ணில் தமிழீழத்தின் இராணுவபலம் உடைக்கப்பட்டு தமிழீழ அரசு தற்காலிகமாக வீழ்த்தப்பட்டது.

முள்ளிவாய்க்கால் தமிழீழ இலட்சியத்தின் முடிவல்ல. அது தமிழீழத்தின் கருத்தரிப்பு. சிங்களம் முள்ளிவாய்க்காலில் முடிவுரை எழுதியதாக எக்காளமிடலாம் அது எம்மின எழுச்சியின் ஆரம்பம்.

சர்வதேசம் எங்கும் தமிழர்களால் பாரிய எழுச்சியாக நினைவு கூரப்படும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு நாள் தாயக மக்களின் விடுதலைக்கான பாதையை திறந்துவிடும் .

சர்வாதிகாரம் நீண்டநாள் நின்று பிடிப்பதில்லை என்பது உலக வரலாறு.

ஈழத் தமிழர்களுக்கு முள்ளிவாய்க்கால் தொடர்பான சில முக்கிய கடமைகள் இருக்கின்றன.

- முள்ளிவாய்க்கால் படுகொலை தொடர்பான முழு விபரங்களும் திரட்டப்பட்டு ஆவணப் படுத்தப்படவேண்டும். நீதி விசாரணைக்கான பிரசார முயற்சிகளை எடுக்க வேண்டும்.
- முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்டோர், காணாமற்போனோரின் பெயர், முகவரி விபரங்கள் சேகரிக்கப்பட வேண்டும். ஒரு ஈழத் தமிழனாவது பெயர்,முகவரி இல்லாமல் சாகக் கூடாது. என்ன காரணத்திற்காக போராடினோமோ அதில் ஒன்றுகூட இதுவரை தீர்க்கப் படவில்லை.

எனவே தமிழ் இனம் மீண்டும் போராடுவது தவிர்க்க முடியாதது. தமிழீழ தனி நாட்டுக் கோரிக்கையை முள்ளிவாய்க்கால் நிறுத்தப் போவதில்லை. சுய நிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில் தமிழீழத் தனி நாட்டின் தோற்றம் சாத்தியமே.

இதற்கான உழைப்பை உலகத் தமிழினம் சிரமம் பாராது மேற்கொள்ள வேண்டும். உலக வரலாற்றில் ஒடுக்கப்பட்ட இனம் ஒடுங்கிக் கிடந்ததான வரலாறு எங்குமில்லையே.

அப்படியிருக்க ஒடுக்கிய சிங்களம் ஓய்வெடுப்பதா? முள்ளிவாய்க்காலில் ஒடுங்கிய தமிழனத்தின் ஆன்ம ஓலம் ஒடுங்கித்தான் கிடக்குமா?

சுவடு தொலைக்காத முள்ளிவாய்க்கால் மண்ணே... மீண்டும் நீ கருக்கொள்ளும் காலம் வரும். உலகத்தமிழினமே விழித்திரு வெறித்திரு தெளிந்திரு.. ஈழவிடுதலையின் மீட்சிக்காக நாளைய போரை அவர்களுக்காக நாமே நடத்துவோம்.

-ஈழத்து நிலவன்-



# சிறுவர் அரங்கம்

1437

## குரங்கு வைத்தியம்

...பல் வலி தாங்க முடியவில்லை. என்ன செய்வது? என்று கேட்டபடி வேறொருவர் வந்தார்

"வலிக்கிற பல்லை எடுத்து விட்டால் சரியாகி விடும்" என்றார் பரமார்த்தர்.

சீடர்களோ, ஆளுக்குக் கொஞ்சமாக எல்லா பல்லையும் கத்தியால் தட்டி எடுத்துப் பொட்டலமாகக் கட்டிக்கொடுத்தனர்!

"இனிமேல் உனக்குப் பல்வலியே வராது!" என்றார் பரமார்த்தர்.

சற்று நேரம் கழிந்தது. யானைக்கால் வியாதிக்காரன் ஒருவன் வந்தான்.

"உலகிலேயே இதற்கு இரண்டு வகையான வைத்தியம்தான் இருக்கிறது. நன்றாக இருக்கிற காலை வெட்டிவிட்டு, அந்த இடத்தில் யானையின் காலை ஒட்டி விட வேண்டும். இல்லாவிட்டால் அந்தக் காலுக்குச் சமமாக இந்தக் காலில் உள்ள சதையைச் செதுக்கி எடுத்து விட வேண்டும்!" என்றார் பரமார்த்தர்.

யானைக்கால் வியாதிக்காரனோ, "காலை விட்டால் போதும்" என்று தப்பினான்.

"ஐயா! ஒரே இருமல். தொடர்ந்து இருமிக் கொண்டே இருக்கிறேன்" என்ற படி வேறு ஓர் ஆள் வந்தார். வாயைத் திறப்பதால் தானே இருமல் வருகிறது. வாயை மூடி விட்டால் என்ன? என்று நினைத்தார், பரமார்த்தர். இவர் வாயை அடைத்து விடுங்கள்! என்று கட்டளை இட்டார்.

குருவின் சொல்படி, கிழிந்த துணிகளை எல்லாம் சுருட்டி, இருமல்காரனின் வாயில் வைத்துத் திணித் தான் மட்டி.

"என் ஆடு சரியாகத் குழை தின்ன மாட்டேன் என்கிறது" என்றபடி ஒருவன் வந்தான். அந்த ஆட்டைக் கண்ட குரு, "தொண்டையில் ஏதாவது அடைத்துக் கொண்டு இருக்கும்" என்றார்.

"வாயைப் பெரிதாக ஆக்கிவிட்டால் போதும்" என் றான் மடையன்.

கத்தி ஒன்றைத் தூக் கிக் கொண்டு வந்தான், முட்டாள்.

அதைப் பிடுங்கி, ஆட்டை வெட்டப் போனான் மூடன்.

பயந்துபோன ஆட்டுக்காரன், ஆட்டை இழுத்துக் கொண்டு ஓட்டம் பிடித் தான்.



குருவும் சீடர்களும் வைத்தியம் என்ற பெயரில் கண்டபடி நடந்து கொள்வதைப் பற்றி எல்லோரும் பேசிக் கொணடனர்.

பஞ்சாயத்தார் ஒன்று கூடி, குருவும் சீடர்களும் "இனிமேல் இந்த ஊருக்குள்ளேயே நுழையக் கூடாது" என்ற தண்டனையை வழங்கினர். (முற்றும்)



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1565 - ஓட்டோமான் படைகள் மால்ட்டாவை அடைந்தன. மால்ட்டாவின் ஆக்கிரமிப்பு ஆரம்பமாகியது.
- 1652 - வட அமெரிக்காவிலேயே முதன் முதலில் அடிமைத் தொழிலை இல்லா தொழிகும் சட்டத்தை ரோட் தீவு கொணர்ந்தது.
- 1765 - கனடாவின் மொன்ட்றியால் நகரத்தின் பெரும்பகுதி தீயினால் அழிந்தது.
- 1803 - ஐக்கிய இராச்சியம் பிரான்ஸ் மீது போரை அறிவித்தது.
- 1896 - கோடின்கா துயரம்: ரஷ்ய மன்னன் இரண்டாம் நிக்கலாசின் முடிசூடும் நிகழ்வுக் கொண்டாட்டத்தின் போது "கோடின்கா" என்ற இடத்தில் இடம்பெற்ற நெரிசலில் சிக்கி 1,389 பேர் இறந்தனர்.
- 1897 - ஐரிய எழுத்தாளர் பிராம் ஸ்டோக்கர் எழுதிய டிராக்குலா புதினம் வெளியிடப்பட்டது.
- 1900 - தொங்கா ஐக்கிய இராச்சியத்தின் பகுதியாக்கப்பட்டது.
- 1910 - ஹேலியின் வால்வெள்ளியின் வாலினூடாக பூமி சென்றது.
- 1927 - மிச்சிகனில் பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு நிகழ்வில் பெரும்பாலும் குழந்தைகள் அடங்கிய 45 பேர் கொல்லப்பட்டனர்.
- 1956 - உலகின் 4வது பெரிய மலையான லகோத்ஸே மலையின் உச்சியை முதன் முதலில் சுவிட்சர்லாந்து மலையேறிகள் எட்டினர்.
- 1969 - அப்பல்லோ 10 விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1974 - சிரிக்கும் புத்தர் என்ற பெயரிடப்பட்ட திட்டத்தில் இந்தியா தனது முதலாவது அணுக்குண்டை வெற்றிகரமாக சோதித்தது.
- 1980 - வாஷிங்டனில் சென் ஹெலன்ஸ் மலை தீக்கக்கியதில் 57 பேர் கொல்லப்பட்டனர். 3 பில்லியன் அமெரிக்க டாலர் பெறுமதியான சேதம் ஏற்பட்டது.
- 1984 - அன்னலிங்கம் பகீரதன் சயனைட் அருந்தி உயிர் நீத்த முதலாவது விடுதலைப் புலிப் போராளி என்ற பெருமையைப் பெற்றார்.
- 1991 - ஹெலன் ஷார்மன் விண்வெளிக்குச் சென்ற முதலாவது பிரித்தானியர் என்ற பெருமையைப் பெற்றார்.
- 1991 - வடக்கு சோமாலியா சோமாலிலாந்து என்ற பெயரில் மீதமான சோமாலியாவில் இருந்து விடுதலையை அறிவித்தது. ஆனாலும அனைத்துலகம் இதனை அங்கீகரிக்கவில்லை.
- 2006 - நேபாளம் மதசார்பற்ற நாடாகவும் அதன் மன்னர் ஒரு சம்பிரதாய மன்னராகவே இருப்பாரெனவும் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேறியது.
- 2009 - ஈழப்போர் முடிவுக்கு வந்ததாக இலங்கை அரசு அதிகாரபூர்வமாக அறிவித்தது. இலங்கையும் அதன் நட்பு நாடுகளும் ஒருசேர 53,000 இற்கும் மேற்பட்ட பூர்வகுடி தமிழ் மக்களை கொன்ற நாள் என தமிழர்கள் குற்றம் சாட்டிய நாள்.
- 2010 - நாடு கடந்த தமிழீழ அரசு நிறுவப்பட்டது.

### பிறப்புக்கள்

- 1048 - ஓமர் கய்யாம், பார்சியக் கவிஞர், கணிதவியலாளர். (இ. 1131)
- 1868 - ரஷ்யாவின் இரண்டாம் நிக்கலாஸ். (இ. 1918)
- 1897 - பிராங்க் காப்ரா, இத்தாலிய-அமெரிக்க இயக்குனர். (இ. 1991)
- 1905 - ஹெட்லி வெரிட்டி, ஆங்கிலேயத் துடுப்பாளர். (இ. 1943)
- 1908 - இயான் பிளெமிங், ஆங்கில எழுத்தாளர். (இ. 1964)
- 1920 - திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர். (இ. 2005)
- 1913 - நீலம் சஞ்சீவ ரெட்டி, இந்தியாவின் 5வது குடியரசுத் தலைவர். (இ. 1996)
- 1929 - வெ. இராதாகிருட்டிணன், விண்வெளி அறிவியலாளர். (இ. 2011)
- 1933 - தேவ கௌடா, இந்தியாவின் 11வது பிரதமர.
- 1944 - ஏ. பி. மருதழகன், மலேசிய எழுத்தாளர்.
- 1955 - சொவ் யுன் ஃபட், ஹொங்கொங் நடிகர்.
- 1959 - கிரகாம் டில்லி, ஆங்கிலேயத் துடுபபாளர். (இ. 2011)

### இறப்புகள்

- 526 - முதலாம் யோவான் (திருத்தந்தை) (பி. 470)
- 1911 - குஸ்தாவ் மாலர், ஆத்திரிய இசையமைப்பாளர். (பி. 1860)
- 1956 - மாரீசு டேட், ஆங்கிலேயத் துடுப்பாளர். (பி. 1895)
- 1979 - வீ. தி. சம்பந்தன், மலேசிய அரசியல்வாதி (பி. 1919)
- 2009 - பாலசிங்கம் நடேசன், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் துறைப் பொறுப்பாளர்.
- 2010 - கே. ஏ. கிருஷ்ணசாமி, தமிழக அரசியல்வாதி. (பி. 1932)

### சிறப்பு நாள்

- அனைத்துலக அருங்காட்சியக நாள்.
- போர்க்குற்ற நாள் (இலங்கை)
- முள்ளிவாய்க்கால் நினைவு நாள் (இலங்கைத் தமிழர்)

### முள்ளிவாய்க்கால் நினைவு நாள் (இலங்கைத் தமிழர்)

முள்ளிவாய்க்கால் நினைவு நாள் என்பது ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் இறந்தவர்களை நினைவு கூரும் நாள் ஆகும். இது இலங்கைத் தமிழர், மற்றும் உலகத் தமிழரால் ஆண்டு தோறும் மே 18 ஆம் நாள் நினைவு கூரப்படுகின்றது. 2009 ஆம் ஆண்டில் இந்நாளிலேயே இலங்கையின் வட-கிழக்குக் கரையில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் எனும் கிராமத்தில் ஈழப்போர் முடிவுற்றது. இலங்கையின் வடகிழக்குப் பகுதியைத் தமிழீழம் என்ற பெயரில் தனிநாடு அமைக்கக் கோரி 1983 முதல் 2009 வரை தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட ஈழ இயக்கங்கள் ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டன. 2007 வரை ஈழப்போரில் குறைந்தது 70,000 பேர் உயிரிழந்தனர். 2008 இன் இறுதிப் பகுதியிலும், 2009 ஆரம்பத்திலும், ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கைப் படைத்துத்துறையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும் போர் நடைபெற்றது. இரு தரப்புக்குமிடையே ஏறத்தாழ 3 இலட்சம் பொதுமக்கள் அகப்பட்ட னர். 2009 மே 18 விடுதலைப் புலிகளின் தலைவரைத் தாம் கொன்று விட்டதாக இலங்கை அரசு அறிவித்ததை அடுத்து போர் முடிவுக்கு வந்தது. போரின் இறுதிக் கட்டத்தில் ஏறத்தாழ 40 ஆயிரம்பொது மக்கள் வரை இறந்தனர் என ஐக்கிய நாடுகளின் அறிக்கை தெரிவித்தது. இவர்களில் பெரும்பாலானோர் இலங்கை இராணுவத்தினரின் கட்டுபபாடற்ற ஏவுகணைத் தாக்குதல்களில் அகப்பட்டு இறந்தனர் என அவ்வறிக்கை தெரிவித்தது. இரு தரப்பினரும் போர்க்குற்றங்கள் இழைத்ததாக குற்றம் சாட்டப்பட்டது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையம் இலங்கை அரசு இழைத்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்களை தற்போது விசாரணைக்குட்படுத்தியுள்ளது. இலங்கை அரசு மே 18 ஆம் நாளை வெற்றி நாளாக அறிவித்து இராணுவ அணிவகுப்புகளுடன் ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது. போரில் இறந்த இலங்கைப் படைத்துறையினர் வெற்றி வீரர்களாக அறிவிக்கப்பட்டு இந்நாளில் இலங்கையின் ஏனைய பகுதிகளில் நினைவுகூரப்பட்டு வருகின்றனர். ஆனாலும், இலங்கை அரசு அமைத்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு போரில் இறந்த அனைவரும் பெப்ரவரி 4 இல் நினைவுகூரப்பட வேண்டும் எனப் பரிந்துரைத்தும், அரசு அக்கோரிக்கையை நிறைவேற்றவில்லை. பதிலாக, இலங்கைத் தமிழர் இறந்த தமது உறவுகளை நினைவு கூர இலங்கை அரசு இதுவரை காலமும் ஏதோ ஒரு வகையில் தடை விதித்தே வந்தது. பொதுமக்கள் தமது வீடுகளில் இறந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தலாம் என இராணுவம் கூறியிருந்தாலும், வீடுகளில் புகுந்து இராணுவத்தினர் இந்நிகழ்வுகளைத் தடுத்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. பாதுகாப்பு அச்சுறுத்தல்களின் மத்தியிலும் மே 18 ஆம் நாளிலும் அதற்கண்மைய நாட்களிலும் இலங்கைத் தமிழர் சிறிய அளவில் முள்ளிவாய்க்கால் நினைவு நாளைத் இறந்த உறவுகளை நினைத்து நினைவு கூர்ந்து வருகின்றனர். ஆனாலும், பொது இடங்களில் நடத்தப்படும் எழுச்சியான நிகழ்வுகள் பாதுகாப்புப் படையினரால் தடுத்து நிறுத்தப்படுவது வழமையாகும். இதன்போது தமிழ் அரசியல் தலைவர்கள் பலரும் கைது செய்யப்பட்டுள்ளனர். புலம்பெயர் ஈழத்தமிழர் தாம் வாழும் நாடுகளில் இந்நினைவு நாளை பாரிய அளவில் கூடி நினைவு கூருகின்றனர். 2015 இல் வட மாகாண முதல்வர் சி. வி. விக்னேஸ்வரன் தலைமையில் முள்ளிவாயக்காலில் பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

# பயங்கரவாதத்தை இல்லாதொழித்த தலைவரை பழிவாங்கும் அரசாங்கம்

## டலஸ் எம்.பி.குற்றச்சாட்டு



(கொழும்பு)

**பயங்கரவாதத்தை இல்லாதொழித்த தலைவரை அரசாங்கம் பழிவாங்கி வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும குற்றம் சாட்டியுள்ளார்.**

சிங்கள பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன ஆட்சிக் காலம் முதல் 1988 ஆம் ஆண்டு தொடக்கம் 28 ஆண்டுகள் மகிந்த ராஜபக்ஷவிற்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

எனினும் இன்று இராணுவப் பாதுகாப்பு முற்று முழுதாக நீக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஆட்சி செய்த நான்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகள் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க முடியாத படைச் சேனாதிபதிகளாகஓய்வுபெற்றுக்கொணடனர் அல்லது உயிரிழந்தனர்.

உயிருடன் இருக்கும்போதே பயங்கரவாதத்தை இல்லாதொழித்த இரண்டு உலகத் தலைவர்களில் ஒருவராக மகிந்த ராஜபக்ஷ திகழ்கின்றார்.

நாட்டையும். மக்களையும் இந்த உலகத்தையும் கொடூரமான பயங்கரவாதத்திலிருந்து மீட்ட தலைவரின் இராணுவ கொமாண்டோ பாதுகாப்பு முழுமையாக நீக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையானது பயங்கவாதத்தை திருப்திபடுத்தும் வகையிலானது. தமிழீழ விடுதலைப் புலிகள் நாடு கடந்த தமிழீழ இராச்சியத்தை பிரகடனம் செய்துள்ளனர்.

இவ்வாறான பின்னணியில் கொடூரமான பயங்கரவாத அமைப்பான புலிகளை இல்லாதொழித்த தலைவருக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

நாட்டுக்கு ஆற்றிய அளப்பரிய சேவையை மறந்து தற்போதைய அரசாங்கம் அரசியல் ரீதியான பழிவாங்கல்களில் ஈடுபட்டு வருவதாக டலஸ் அழகப்பெரும மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# வெள்ளம் காரணமாக தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாயம்

(கொழும்பு)

மழை வெள்ளம் காரணமாக தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாயம் காணப்படுவதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு பணிப்பாளர் நிபுணத்துவ மருத்துவர் பபா பலிஹவடன தெரிவித்தார்.

அதிக மழை வெள்ளம் காரணமாக வயிற்றோட்டம், காய்ச்சல், செங்கமாலை, வாந்திபேதி போன்ற நோய்கள் பரவக்கூடிய அபாயம் காணப்படுகின்றது.

வெள்ளம் ஏற்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு அதிகளவில் இந்த தொற்று நோய்கள் பரவக்கூடிய ஆபத்து காணப்படுகின்றது.

மழை வெள்ளம் ஏற்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள் குடிநீர் விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

கொதித்து ஆறிய நீரையே பருக வேண்டும்.

ஈக்கள் அதிகமாக மொய்க்கக்கூடிய இடங்களில் இருக்கக் கூடாது என மருத்துவர் பலிஹவடன மேலும் கோரியுள்ளார். (இ-5)

# மக்களின் துயரத்தில் நான் பங்கேற்கிறேன்



## மகிந்த தெரிவிப்பு

நாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலையினால் ஏற்பட்ட அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரத்தில் தாமும் பங்கேற்பதாக. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இயற்கையின் சீற்றம் விரைவில் அகன்று உங்கள் அனைவரினதும் இயல்பு வாழ்க்கை வழமைக்கு திரும்ப வேண்டுமென பிரார்த்தனை செய்கின்றேன்.

அனர்த்தங்களினால் ஏற்படக்கூடிய அழிவுகளை வரையறுத்துக் கொள்ள கவனம் செலுத்தப்பட வேண்டும்.

பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய அனைத்து தரப்பினரும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென அனைவரிடமும் கௌரவமாக வேண்டிக் கொள்கின்றேன்.

இதேவேளை, கூட்டு எதிர்கட்சி மற்றும் சிவில் அமைப்புக்கள் இணைந்து அனர்த்த நிவாரணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாரஹேன்பிட்டி அபாயராமயவில் அமைந்துள்ள சேகரிக்கும் நிலையம் ஒன்றின் ஊடாக உலர்ந்த உணவுப் பொருட்கள் உள்ளிட்ட பொருட்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. உலர் உணவுப் பொருட்கள். சுத்தமான குடிநீர் உள்ளிட்ட பொருட்களை வழங்க முடியும்.

அனர்த்தம் காரணமாக உயிரிழந்த அனைவரினதும் குடும்பங்களுக்கும் இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றேன் என மகிந்தவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# மரம் முறிந்து விழுந்ததில் கணவன் மரணம்; மனைவி படுகாயத்துடன் வைத்தியசாலையில்

(கொழும்பு)

மாதம்பே - ஏகொடவத்தை வீதிக்கருகில் உள்ள வீடொன்றின் மீது மரம் முறிந்து விழுந்ததில் கணவர் பலியாகியுள்ளதுடன். அவரது மனைவி காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று அதிகாலை 1.35 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

38 வயதான வர்ணகுலசூரிய ரக்சான் பிரணாந்து என்ற நபரே பலியாகியுள்ளதாகவும். இவரது மனைவியான 36 வயதையுடைய தம்மிக பியசீனி காயமடைந்து மாதம்பை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக சிலாபம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த வீட்டிற்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக மாதம்பை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## நோயாளியைப் பார்க்கும் போது

வந்திருப்பது பயங்கரமான வியாதி என் றும்–

பக்க விளைவுகள் பல ஏற்படக் கூடும் என்றும்–

காலம் பூராவும் பத்தியம் இருந்து மாத் திரை மாத்திரையாக சாப்பிட வேண்டும் என்றும்–

அமங்கலமான சொற்கள் பலவற்றைப் பயன்படுத்தியும் நாம் பிழைத்து நடமாடு வோம் என்ற நம்பிக்கை நோயாளிக்கு ஏற்படாத வகையிலும்–

அந்த வியாதி வந்து செத்துப் போன வர்கள் பற்றியும் எத்தனையோ பேர் உடல் நலம் அற்றவர்களிடம் பேசி வருவதை நாம் காண்கிறோம்.

குணமாவது என்பது பாதி மனத்தைப் பொறுத்த விடயம் என்றும், மீதியே மருந்து மாத்திரையுடன் சம்பந்தப்பட்ட விடயம் என்றும் மன நல மருத்துவர்கள் கூறுவதை மற்றத் துறை மருத்துவர்களும் ஒப்புக் கொள்கிறார்கள்.

அப்படி இருக்கையில் ஒரு நோயாளி யைப் பார்க்கும் போது நம்பிக்கை ஏற்படும் வகையில் பேசி அந் நோயைத் தீர்க்கும் மருத்துவருக்கு மறைமுகமாக உதவியாக இருக்க வேண்டுமே தவிர, அவர்களே எமன்களாக ஆகக் கூடாது.

வளவளவென்று ஊர்க் கதைகளை யும் உலக நடப்புக்களையும் பற்றிப் பேசிக் கொண்டு இராமல் குசல விசாரிப்புக்களை முடித்துக் கொண்டு புறப்பட்டுவிட வேண் டும். அவர்களது உடல் நலத்திற்கு உகந்த பழங்களை வாங்கிச் செல்வது நல்லது.

அவருக்கு அமைந்த டாக்டர் மிகுந்த திறமைசாலி எனவும் அவர் எப்படியும் குணப்படுத்தி விடுவார் எனவும் பேசித் தெம்பை உண்டாக்க வேண்டும். அப்போது நோய் வந்து, குணமானவர்களின் கதைகளையும் எடுத்துச் சொல்லலாம்.

டாக்டர் சொல்வதைத் தவறாமல் பின் பற்றும் படியும் அது மிக முக்கியம் எனவும் வற்புறுத்தலாம்.

அவர்கள் படுத்திருப்பதன் காரணமாக ஏதேனும் வேலைகள் தடைப்படுவதாக அவர்கள் கவலைப்பட்டால் ,அதெல்லாம் ஒன்றும் கவலைப்படாதீர்கள். எல்லாம் நாங்க பாத்துக்கிறோம். நாங்க என்னத்துக்கு இருக்கிறோம்? என்று மனப் பூர்வமாகக் கூறி அவர்களது கவலைகளைக் குறை க்க வேண்டும்.

அவர்களால் சாப்பிட முடியாதவற்றைப் பற்றியும் அவர்களால் செய்ய முடியாத வற்றைப் பற்றியும் ஆவலைக் கிளறும் வகையில் பேசாமல் அடக்கியே வாசிக்க வேண்டும்.

அவர்களுக்கு உடல் நலமில்லை என்பதைக் கேள்வியுற்றதும் உங்களுக்கு ஏற்பட்ட மனப் பாதிப்பைச் சொல்லி,அதன் மூலம் நீங்கள் அவர்கள் மீது கொண் டிருக்கும் அன்பையும் அக்கறையையும் புலப்படுத்தலாம்.

உங்களைப் போன்றவர்களின் அன்பிற்காகவாவது நீண்ட நாள் வாழ வேண்டும். விரைவில் எழுந்து நடமாட வேண்டும் என்ற ஆசை அவர்களுக்கு ஏற்பட வேண்டும்.

ஒரு மனிதனின் இன்பத்தில் பங்கு கொள்ள இலட்சோப இலட்சம் பேர் முன்வரலாம். ஆனால் துன்பத்தில் பங்கு கொள்ள ஒரு சிலரே முன் வருவார்கள் . அத்தகையவர்களே மற்றவர்களது மனத்தில் என்றென்றும நிலைத்து இடத்தைப் பெறுவார்கள்.

அத்தகைய ஒரு சிலராக நாம் இருக்க வேண்டியது அவசியம்.

**லேனா தமிழ்வாணன்**

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 14.05.2016~14.06.2016

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



பிறர் போற்றும் படியாக வாழ வேண்டுமென்று விரும்பும் மேஷ ராசிநேயர்களே!

துர்முகி வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது, மாதத் தொடக்கத்திலேயே குரு வக்ர நிவர்த்தியாகின்றார். அந்த குருவின் பரிபூரண பார்வை உங்கள் ராசியில் பதிகின்றது. இனி தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். பண வரவு திருப்திகரமாக இருக்கும்.

காலதாமதப்பட்ட காரியங்கள் இனி துரிதமாக நடைபெறும். கல்யாணக் கனவுகள் நனவாகும். கடமையைக் கண்ணும் கருத்துமாகச் செய்து முடிப்பீர்கள். உங்கள் ராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. எனவே தந்தை வழி உறவில இருந்த விரிசல் அகலும்.

பூர்வீகச் சொத்துக்களில் இன்னும் பாகப்பிரிவினை நடைபெறாமல் இருக்கிறதே, பஞ்சாயத்துக்கள் எப்பொழுது தான் நல்ல முடிவிற்கு வருமோ என்று நினைத்துக் காத்திருப்பவர்களுக்கு, இப்பொழுது நல்ல தகவல் வரப்போகிறது. சொத்துக்களாலும், சொந்தங்களாலும் நன்மை ஏற்படும். தனாதிபதி சுக்ரன், மாதத் தொடக்கத்திலேயே உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கின்றார். அவரோடு சகாய ஸ்தானாதிபதி புதனும் சஞ்சரிக்கின்றார்.

எனவே, இதுவரை இருந்த பற்றாக் குறை பட்ஜெட் இனி மாறும். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். திடீர் மாற்றங்களால் நன்மை வந்து சேரும். அக்கறை காட்டாமலேயே ஆதாயம் கிடைக்கப் போகின்றது. தங்கம், வெள்ளி வாங்குவதில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். குறிப்பாக குழந்தைகளின் கல்யாணத் தேவைகளை முன்னிட்டு சீர்வரிசைப் பொருட்களை வாங்க முற்படுவீர்கள்.

விரய ஸ்தானாதிபதியாகவும் வியாழன் விளங்குவதால், சுப விரயங்கள் அதிகரிக்கும். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். அஷ்டமத்துச் சனியும் வக்ர இயக்கத்தில் இருப்பதால், ஆரோக்கியத் தொல்லைகள் அகலும். மருத்துவச் செலவுகள் குறையும். வைகாசி விசாகத்தன்று அருகிலிருக்கும் சிவாலயம் சென்று வேலவனை வழிபட்டு வருவதன் மூலம் வெற்றிகளை வரவழைத்துக்கொள்ள முடியும்.

**ரிஷப சுக்ரனின் சஞ்சாரம்!**

மே 20 ஆம் திகதி ரிஷப ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். தனாதிபதி தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது வருமானம் இருமடங்காக உயரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்தபடியே அலுவலகக் கடன் கிடைக்கும். ஒரு சிலர் விருப்ப ஓய்வில் வெளி வந்து சுய தொழில் தொடங்கும் முயற்சியில ஆர்வம் காட்டுவீர்கள். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் முடிந்த பிறகு, தொழில் தொடங்கும் முயற்சியில் ஈடுபடுவதே நல்லது. குடும்பத்தினரின் கோரிக்கைகளை நிறைவேற்றும் நேரமிது.

**ரிஷப புதனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 3,6 இற்கு அதிபதியானவர் புதன். அவர் ஜூன் 3 ஆம் திகதி முதல் வாக்கு, தனம், குடும்பம் என்னும் 2 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். இதன் விளைவாக உடன்பிறப்பு களால்




உங்களுக்கு நன்மைகள் கிடைக்கும். உத்தியோக நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டு. முக்கியமான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். உயர்பதவிகள் கிடைப்பதற்கான அறிகுறிகளும் தென்படுகின்றன.

**மிதுன சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜூன் 13 ஆம் திகதி மிதுன ராசிக்கு சுக்ரன் செல்கின்றார். அதே நாளில் ரிஷபத்தில் புதன் வலிமை இழக்கிறார். இதன் விளைவாக மாற்றங்களும், ஏற்ற ங்களும் வந்து சேரலாம். உடன் பிறப்புகளின் இலலங்களில் நடை பெறும் சுபகாரிய நிகழ்வுகளை முன்னின்று நடத்துவீர்கள். வழக்குகள் சாதகமாக முடியும். உத்தியோக ஸ்தர்களுக்கு ஊர் மாற்றங்கள் ஏற்படலாம. இம் மாதம் சனிக்கிழமை தோறும சனி பகவானை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

உங்களின் வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும் மாதம் இது. குடும்ப ஒற்றுமை பலப்படும். சென்ற மாதம் நடைபெறாத சில காரியங்கள் இப் பொழுது நடைபெறும். குரு பார்வையால் மனக் குழப்பம் அகலும். பணப்புழகம் அதிகரிக் கும். இல்லத்தினரின் ஒத் துழைப்போடு நல்ல காரிய ங்களை செய்து முடிப்பீர்கள். கணவன்-மனைவி இடையே கனிவு கூடும். குழந்தைகளின் பாச மழை யில் நனைவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகளால் நன்மை உண்டு. ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். வைகாசி விசாகத்தில் முருகப் பெருமானை வழி படுவது நல்லது.

## பணவரவு திருப்தி தரும் நேரம்!



காரியங்களை தள்ளி வைக்காமல் உடனடியாகச் செய்து முடிக்கும் ரிஷப ராசி நேயர்களே!

துர்முகி வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது, மாதத் தொடக்கத்தில் ராசிநாதன் சுக்ரன் விரயஸ்தானத்தில் இருக்கின்றார். அவரோடு தனாதிபதி புதனும் இணைந்து செயற்படுவதால, தனவிரயம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. இருப்பினும் எதையும் சமாளிக்கும் வல்லமை உங்களுக்கு உண்டு. தைரியமும், தன்னம்பிக்கையும் மட்டுமல்லாமல் சாமர்த்தியமாகப் பேசிச் சமாளிக்கும் ஆற்றலும் கைவரப் பெற்றவர்கள் நீங்கள். எனவே எதற்கும் கவலைப்படத் தேவையில்லை.

வீண் விரயங்களில் இருந்து விடுபட சுபவிரயங்களை மேற்கொள்ளுங்கள். வெளிநாட்டில் இருந்து அனுகூலத் தகவல்கள் வந்து சேரும். குடும்பத்திற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வதற்கான வாய்ப்பு கிட்டும். அத்தியாவசியப் பொருட்களையும், ஆடம்பரப் பொருட்களையும் வாங்குவதன் மூலம் வீண் விரயங்களில் இருந்து விடுபட இயலும். பழைய பூர்வீகச் சொத்துக்களை விற்றுவிட்டுப் புதிய சொத்துக்கள் வாங்குவதில் ஒருசிலர் ஆர்வம் காட்டுவார்கள். கட்டிய வீட்டைப் பராமரிக்க முடியவில்லையே, பழுதுகளைச் சரிசெய்ய பணவசதி இல்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு, இப்பொழுது குருவக்ர நிவர்த்தியாகி எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கப்போகின்றது.

அதே நேரத்தில் குடும்பஸ்தானத்தில் ராகு சஞ்சரிக்கிறார். குடும்ப ஸ்தானாதிபதியாக விளங்கும் சூரியன், உங்கள் ராசியிலேயே உலா வருகின்றார். உங்கள் ராசியை செவ்வாயும், சனியும் பார்க்கின்றார்கள். எனவே குடும்பச்சுமை கூடுதலாகவே இருக்கும். பணம் வந்த மறுநிமிடமே செலவாகிவிடும். ஆரோக்கியத் தொல்லைகளும் அதிகரிக்கும். உடன்பிறப்புகளின் கோபத்திற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

அர்த்தாஷ்டம குருவின் ஆதிக்கம் வலுவடைவதால், வியாழன் தோறும் குருபகவான் வழிபாட்டை மேற்கொள்வதோடு வைகாசி விசாகத் திருநாளில் முருகப் பெருமானையும் வழிபாடு செய்வது நல்லது.

**ரிஷப சுக்ரனின் சஞ்சாரம்!**

ராசிநாதன் சுக்ரன் மே 20 ஆம் திகதி முதல், உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கப் போகின்றார். இதன் விளைவாக நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரப்போகின்றது. புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். மின்சாதனப் பொருட்களையும், ஆபரணங்களையும வாங்குவதில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள்.




தொழில் வளர்ச்சி சீராக இருக்கும். பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். கல்வி, கலை சம்பந்தமாக எடுக்கும் முயற்சிகளில் அனுகூலம் உண்டு.

**ரிஷப புதனின் சஞ்சாரம்!**

ஜூன் 3 ஆம் திகதி ரிஷப ராசிக்கு புதன் செல்கின்றார். தன பஞ்சமாதிபதியாக விளங்கும் புதன், ராசிநாதனோடு ராசியிலேயே சேரும் பொழுது எடுத்த காரியங்கள் எளிதில் வெற்றி பெறும். சுப நிகழ்வுகள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். சேமிப்பு அதிகரிக்கும். பூமி விற்பனையால் பொருளாதார நிலை உயரும். புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும்.

**மிதுன சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜூன் 13 ஆம் திகதி மிதுன ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். 6 இற்கு அதிபதியாக விளங்கும் சுக்ரன், 2 இல் சஞ்சரிக்கும் பொழுது உத்தியோக முன்னேற்றம் உண்டு. நேர்முகத் தேர்வில் நீண்ட நாட்களாக வெற்றி கிடைக்காதவர்களுக்கு இப்பொழுது வெற்றி கிடைக்கும். பிள்ளைகளின் அயல்நாட்டு முயற்சி அனுகூலம் தரும்.

இம்மாதம் நந்தியெம்பெருமான் வழிபாடு நன்மையைச் சேர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

புதிய பாதை புலப்படும் மாதம் இது. ஆபரணங்கள்ள வாங்கி மகிழ்வீர்கள். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. குழந்தைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வதன் மூலம் பிரச்சினைகளில் இருந்து விடுபட இயலும். குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கேட்ட இடத்தில் இடமாறுதல் கிடைக்கும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேருவர். எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் அகல, மாற்று மருத்துவத்தை மேற்கொள்ளுங்கள். துர்க்கை வழிபாடு துயரங்களைப் போக்கும்.

## குடும்பச்சுமை அதிகரிக்கும் நேரம்!

(தொடரும்)

## சம்பூரில் திரவ எரிவாயு மின்திட்டம்

# மைத்திரியின் கோரிக்கைக்கு மோடி சாதகமான பதிலளிப்பு

(திருகோணமலை)

**சம்பூரில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள அனல் மின் நிலையத்துக்குப் பதிலாக, திரவ இயற்கை எரிவாயு மின் திட்டத்தை அமைக்குமாறு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம், இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்துள்ளார்.**



இலங்கை ஜனாதிபதியின் இந்தக் கோரிக்கைக்கு இந்தியப் பிரதமர் சாதகமான பதிலை அளித்துள்ளார்.

இதுபற்றி இலங்கை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி, திட்டத்தை முன்னெடுக்குமாறு தமது அதிகாரிகளிடம் கேட்டுள்ளார்.

இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் எசல வீரக்கோன் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை டில்லியில் நடந்த சந்திப் பின்போதே, சம்பூர் விவகாரம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இந்த விவகாரத்தை இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எழுப்பிய போது, இந்தியப் பிரதமர் மோடி சாதகமாக அதனை அணுகினார்.

இந்தச் சந்திப்பில் இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் எசல வீரக்கோனும் அவரது பிரதி அதிகாரியான லேன கலவும், வெளி விவகார அமைச்சின் தெற்காசிய விவகாரப் பிரிவின் பணிப்பாளர் அசோக கிரிஹகமவும் பங்கேற்றிருந்தனர். இந்தியத் தரப்பில், இந்திய வெளி விவகாரச் செயலர் ஜெய்சங்கர், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா, இந்திய வெளிவிவகார அமைச்சின் இலங்கை - மாலைதீவு விவகாரங்களுக்கான இணைச் செயலர் ரேணு பால், ஆகியோர் பங்கேற்றனர். (இ-5)

## சீரற்ற காலநிலையினால் மரக்கறிகளுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயம்

(கொழும்பு)

சீரற்ற காலநிலையினால் நாட்டில் மரக்கறி வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிக மழை காரணமாக தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்திற்கு கொண்டு வரப்படும் மரக்கறி வகைகளின் தொகை சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளதாக பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தகர் சங்க முன்னாள் தலைவர் யூ.பி. ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இது குறித்து ஊடகமொன்றுக்கு தகவல் வெளியிட்ட அவர் மேலும் கூறுகையில்,

பொருளாதார மத்திய நிலையத்திற்கு கொண்டு வரப்படும் மரக்கறி வகைகளின் தொகை 90 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

மத்திய மலைநாட்டுப் பிரதேசங்களிலிருந்து வழமையாக காலையில் வரும் மரக்கறி லொறிகள் மாலை வரையில் வரவில்லை.

சீரற்ற காலநிலையினால் அறுவடை செய்ய முடியாமை உள்ளிட்ட பல்வேறு காரணிகளினால் மரக்கறி வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சீரற்ற காலநிலையினால் மரக்கறி வகைகளின் விலைகள் உயர்வடையக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மரக்கறி வகைகளுக்கு காணப்படும் தட்டுப்பாடு காரணமாக விலை உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 723

கீர்த்து




மாணன்




அச்சு

அந்த ஆளுக்கு
ஏன் கலெண்டர்
இல்லைன்னு திருப்பி
அனுப்பிட்டே...?
அவர் ரெண்டாயிரத்து
பதினாறு கலெண்டர்
கேட்டார் முதலாளி!...
நம்மிடம் ஆயிரம் தானே இருக்கு...!

சிந்து




ஜீவி

பேஸ்புக்கை கலக்கி வரும் ஒரு நகைச்சுவை!!
ஜெயலலிதா, கருணாநிதி, ஸ்டாலின் மூவரும் விமானத்தில் சென்றார்களாம்.
ஜெயலலிதா:-ஒரு நூறு ரூபாயை கீழே போட்டு விட்டு நான் ஒரு ஏழை இந்தியனுக்கு நன்மை செய்து இருக்கிறேன் பாருங்கள் என்றார்.
அடுத்து கருணாநிதி:-இரண்டு ஐம்பது ரூபாய் நோட்டுக்களை கீழே போட்டு விட்டு நான் இரண்டு ஏழை இந்தியர்களுக்கு நன்மை செய்து இருக்கிறேன் பாருங்கள் என்றார்.
அடுத்து ஸ்டாலின்:-நூறு ஒரு ரூபாய் காசுகளை கீழே போட்டு விட்டு நான் நூறு ஏழை இந்தியர்களுக்கு நன்மை செய்திருக்கிறேன் பாருங்கள் என்றார்.
அப்போது விமான ஓட்டி சொன்னார்:-இப்போ உங்க மூவரையும் விமானத்தை விட்டு கீழே போட்டு 8 கோடி தமிழர்களுக்கு நன்மை செய்யப் போகிறேன் பாருங்கள் என்றார்.




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழ் சினிமா வரலாறு

160

## எம்.ஜி.ஆர். சுடப்பட்டபின் நடித்த படங்கள்

டைரக்ஷன் பொறுப்பை ப.நீலகண்டன் ஏற்றிருந்தார்.

எம்.ஜி.ஆர். சில காட்சிகளில் நடிக்க வேண்டியிருந்தது. குணம் அடைந்த பிறகு எம்.ஜி.ஆர். அந்தக் காட்சிகளில் நடித்தார்.

அவரால் வழக்கம் போல் நடிக்க முடிந்தது. ஆனால் வழக்கம் போல் பேச முடியவில்லை. குரலில் குறை தெரிந்தது.

பொருத்தமான குரல் உடையவர்களை கொண்டு பின்னணி குரல் (டப்பிங்) கொடுக்கலாம் என்று சிலர் யோசனை தெரிவித்தார்கள்.

ஆனால் எம்.ஜி.ஆர். இதை ஏற்கவில்லை. நானே பேசுகிறேன் மக்கள் ஏற்றால் தொடர்ந்து நடிக்கிறேன். ஏற்காவிட்டால் நடிப்பதையே விட்டுவிடுகிறேன் என்று கூறினார்.

அதன்படியே எம்.ஜி.ஆர். சொந்தக்குரலில் பேசினார்.

07.09.1967 அன்று காவல்காரன் வெளியாயிற்று. சில கட்டங்களில் எம்.ஜி.ஆர். குரல் தெளிவாக இல்லாவிட்டாலும் ரசிகர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை.

காவல்காரன் சூப்பர்ஹிட் படமாக அமைந்தது. சென்னையில் மூன்று தியேட்டர்களில் நூறு நாள் ஓடியது.

மதுரை, திருச்சி, சேலம் ஆகிய ஊர்களிலும் நூறு நாள்.

யாழ்ப்பாணத்தில் ராஜா தியேட்டரில் 162 நாட்களும், மற்றோரு தியேட்டரில் 127 நாட்களும் ஓடி சாதனை படைத்தது.

தன் குரலை ரசிகர்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என்று எம்.ஜி.ஆர். திருப்தி அடைந்து விடவில்லை. முன் போல் கம்பீரமாகப் பேச வேண்டும் என்ற வைராக்கியத்துடன் தினமும் வீட்டிலேயே உரத்த குரலில் பேசிப் பயிற்சி பெற்றார். குரலில் காட்ட வேண்டி ஏற்றத்தாழ்வுகளை யும், உணர்ச்சிகளையும் மீண்டும் கொண்டு வருவதற்கு பெரும் முயற்சி மேற்கொண் டார். அவருடைய விடா முயற்சி வெற்றி பெற்றது. மீண்டும் முன் போல் பேசும் சக்தியை நாளடைவில் பெற்றார்.

### விவசாயி

தேவர் பிலிம்ஸ் தயாரிப்பான விவசாயி, 1967 நவம்பர் 1 ஆம் திகதி வெளிவந்தது. இதில் எம்.ஜி.ஆர். வசனம் பேசுவதில் மிகுந்த முன்னேற்றம் காணப்பட்டது.



இந்தப்படத்தில் எம்.ஜி. ஆரின் ஜோடி கே.ஆர். விஜயா. இதை இயக்கியவர் எம்.ஏ.திருமுகம்.

### 1968- இல் எட்டு படங்கள்

நன்றாக குணம் அடைந்து விட்ட எம்.ஜி.ஆர். மீண்டும் நிறைய படங்களில் நடிக்கலானார்.

1968 இல் ரகசிய பேலீஸ் 115, தேர்திருவிழா,குடியிருந்த கோயில், கண்ணன் என் காதலன், புதியபூமி, கணவன், ஒளி விளக்கு, காதல் வாகனம் ஆகிய 8 படங்களில் நடித்தார். இந்த எட்டுப் படங்களிலும் ஜெயலலிதா தான் கதாநாயகி.

எல்லாமே வெற்றிப்படங்கள் என்றாலும் குடியிருந்த கோயில் மெகாஹிட் படம்.

சரவணா ஸ்கிரீன்ஸ் தயாரிபான குடியிருந்த கோயிலில் எம்.ஜி.ஆர் இரட்டை வேடத்தில் நடித்தார். ஜெயலலிதா, ராஜஸ்ரீ இணைந்து நடித்தனர். இசை அமைப்பு: எம்.எஸ். விஸ்வநாதன். வசனம்: சொர்ணம்.

ஆடலுடன் பாடலைக் கேட்டு ரசிப்பதிலேதான் சுகம் சுகம், துள்ளுவதோ இளமை, நான் யார்... நான் யார், உன் விழியும் என் வாளும் சந்தித்தால் முதலான இனிய பாடல்களும் பொழுது போக்கு அம்சங்களும் நிறை ந்த இந்தப்படத்தில் குங்குமப் பொட்டின் மங்கலம் என்ற பாடல் மூலம் பெண் கவிஞர் ரோஷனாரா பேகம் அறிமுகம் ஆனார்.

ஆடலுடன் பாடலைக் கேட்டு ரசிப்பதிலேதான் சுகம் என்ற பாடலுக்கு எம்.ஜி. ஆரும், விஜயலட்சுமியும் ஆடிய பஞ்சாபி நடனம் ரசிகர்களிடம் கைதட்டல் பெற்றது. (தொடரும்)

# இலங்கை அரசை நிலைகுலைய வைத்த புலனாய்வு அறிக்கை



அண்மையில் இலங்கை அரசாங்கம் புலனாய்வுப் பிரிவிடமிருந்து அறிக்கை ஒன்றைப் பெற்றுக் கொண்டது. இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த சில மேஜர் ஜெனரல்களுடன் பசில் ராஜபக்ஷ பேச்சு நடத்தியதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த அறிக்கை இலங்கை அரசாங்கத்தை நிலைகுலையச் செய்தது.

பொதுவாக, இலங்கை இராணுவ அதிகாரிகள், எதிர்க்கட்சி அரசியல்வாதிகளை மட்டுமல்லாது, அரசாங்க அரசியல்வாதிகளைச் சந்தி ப்பதற்குக் கூட இராணுவத் தளபதியின் அனுமதியைப் பெறவேண்டும். ஆனால் இவ்வாறானதொரு அனுமதியுமின்றியே பசில் ராஜ பக்ஷவை இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல்கள் சந்தித்துள்ளனர்.

மேஜர் ஜெனரல் சாஜி கல்லகே யாழ்ப்பாணத்தில் செயற்பட்டபோது வெளி



விவகார அமைச்சர் மங்கள சமரவீரவுடன் சூடான விவாதம் ஒன்றில் ஈடுபட்டிருந்தார். மங்கள சமரவீரவுடனான முரண்பாட்டை அடுத்தே சாஜி கல்லகே கொழும்பிற்கு இடம் மாற்றப்பட்டதாகவும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. பசில் ராஜப்க்ஷவுடனான மேஜர் ஜெனரல்களின் சந்திப்புத் தொடர்பான புலனாய்வுத் துறையினரின் அறிக்கையை இலங்கை அரசாங்கம் பெற்றுக் கொண்ட கையோடு, மகிந்த மற்றும் கோத்தபாய ஆகியோருக்கு வழாங்கப்பட்டிருந்த இராணுவப் பாதுகாப்பு நீக்கப்பட்டது.

மகிந்தவின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்த இராணுவ வீரர்கள் மகிந்தவின் பாதுகாப்புக் கடமையிலிருந்து வெளியேறும் போது அவரது காலில் விழுந்து வணங்கும் காட்சிகளை உள்ளடக்கிய காணொலி ஒன்றை மகிந்த வின் ஊடகப் பிரிவு வெளி யிட்டது. பொதுவாக, இலங்கை இராணுவ வீரர்கள் அரசியல் வாதிகளுக்கு மரியாதை செலுத்தும் முகமாக முன்மரியாதை (Salute) செய் வது வழமையாகும். அத்துடன் அவர்களுக்கென வழங்கப்பட்ட கடமைகளை இராணுவ வீரர்கள் செய்வது வழக்கமாகும்.

ஆனால் மகிந்தவின் ஊடகப் பிரிவால் வெளியிடப்பட்ட காணொலியில் உள்ள கர்ட்சிகளைப் பார்க்கும் போது, இலங்கை அரசாங்கத்தால் மகிந்தவைப் பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்ட இராணுவ வீரர்கள் தமது கடமைகளுக்கும் மேலாக கீழிறங்கிச் செயற்படுவதைக் காணமுடியும். மகிந்தவின் பாதுகாப்பிற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட



கப்டன் திஸ்ஸ என்பவர் தாஜுதீனின் படுகொலை தொடர்பாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

### மகிந்தவிற்கு ஆதரவான புத்த பிக்குகள்:

மகிந்தவிற்கான இராணுவப் பாதுகாப்பை மீண்டும் வழங்க வேண்டும் என தற்போது பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் இடம்பெறுவதானது சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது. அண்மையில் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின் போது மகிந்தவிற்கான இராணுவப் பாதுகாப்பு மீண்டும் வழங்கப்பட வேண்டும் எனக் கோரி கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மீது தாக்குதலை மேற்கொண்டனர்.


தற்போது பௌத்த பீடாதிபதிகள் அனைவரும் ஒன்று சேர்ந்த மகிந்தவிற்கான இராணுவப் பாதுகாப்பு மீளவும் வழங்கப்பட வேண்டும் எனப் பரப்புரை செய்து வருகின்றனர்.

(தொடரும்)

# பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு பதிலாக புதிய சட்டம் கொண்டு வர அமெரிக்கா வலியுறுத்தல்

(கொழும்பு)

**இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டத்துக்குப் பதிலாக, புதிய தேசிய பாதுகாப்புச் சட்டக் கட்டமைப்பு ஒன்றைக் கொண்டு வர வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.**



தகவல் அறியும் சட்ட மூலம் தொடர்பான நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான செயலமர்வு நேற்று முன்தினம் கொழும்பில், நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றிய அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் இதனைத் தெரிவித்தார்.

தம்மை தெரிவு செய்த குடிமக்களுக்கு நம்பகமாக அரசாங்க அதிகாரிகள் இருக்க வேண்டும் என ஜனநாயகம் கோருகிறது. அந்த நம்பகத்தன்மைக்கு வெளிப்படைத்தன்மை அவசியம்.

கடந்த ஆண்டு இலங்கை வந்திருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலர் உறுதியளித்ததைப் போன்று மிக முக்கியமான நல்லாட்சி மறுசீரமைப்புக்கள் மற்றும் மனித உரிமைகள் வாக்குறுதிகளில் நீங்கள் தேர்ச்சி எட்டும் போது அமெரிக்கா உங்கள் பக்கம் இருக்கும்.

கடந்த 16 மாதங்களில் எமது அதிகரித்த ஒத்துழைப்பில் பிரதிபலித்தவாறு எமது இராஜதந்திர உறவுகள் ஒரு போதும் இல்லாதவாறு உயர்ந்த நிலையில் இருக்கின்றன.

இலங்கை முழுவதிலும் மோதலுக்குப் பின்னரான நிலையான அமைதியை உருவாக்குவதற்கும் எமது முயற்சிகள் உதவுகின்றன. சட்டம் ஒழுங்கினை வலுப்படுத்துவதற்கும் வலுவான சிவில் சமூகத்தை கட்டியெழுப்புவதற்கும் மற்றும் ஜனநாயகத்தையும் செழுமையையும் வலுப்படுத்துவதற்கும் அனைத்துலக அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனம் ஆதரவளிக்கிறது.

இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரில், பொது நிதி முகாமைத்துவம், தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் நாடாளுமன்றத்தை இலக்கு வைத்த உதவிகளின் ஊடாக மறுசீரமைப்புக்களுக்கு நாம் தற்போது உதவுகிறோம்.

உலகின் எந்தப் பகுதியிலும் நல்லாட்சியை வலுப்படுத்தும் கடமை இலகுவானது இல்லை. சட்டத்தில் குடிமக்களின் தகவலுக்கான உரிமையை உள்ளடக்குவது, சரியான வழியில் செல்வதற்கான ஒரு முக்கியமான படிநிலையாகும்.

தமது நாட்டை சிறந்த இடமாக்குவதற்கும், இரகசியம், நம்பகத்தன்மை குறைந்த யுகத்திற்கு திரும்புவதனை தடுப்பதற்கான கருவிகளை அவ்வாறான சட்டம் இலங்கையர்களுக்கு வழங்கும்.

சமாதானம் மற்றும் ஜனநாயகத்தின் புதிய சூழல், தேவையான மாற்றங்களை கொண்டு வருவதற்கான அரிய சந்தர்ப்பத்தை தருகிறது.

புதிய தேசிய பாதுகாப்பு சட்ட கட்டமைப்பு ஒன்றினால் பழைமையான பயங்கரவாத சட்டத்தை மாற்றுவது, எதிர்கால துஷ்பிரயோகங்களை தடுப்பதற்கு மாத்திரமன்றி, இலங்கைக்கும் அதன் ஜனநாயகத்திற்கும் குடிமக்கள் உரிமைகளுக்குமான நவீன அச்சுறுத்தல்களுக்கும் எதிரான வலுவான பாதுகாப்பையும் உறுதி செய்யும்.

முன்னோக்கிச் செல்வதற்கான சிறந்த வழியை தீர்மானிப்பதற்கு சாதாரண மக்கள் மற்றும் சிவில் சமூகத்துடன் இலங்கை அரசாங்கம் கலந்துரையாடல் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

காணாமற் போனவர்களுக்கான செயலகம் உருவாக்கம் மற்றும் வேறு பயனுள்ள படிநிலைகள் உள்ளடங்கலாக காயங்களை ஆற்றுவதற்கான உறுதியான தேர்ச்சியை நாம் எதிர்பார்த்திருக்கிறோம்.

மோதலுக்குப் பின்னரான நிலைமாற்றத்திற்கு புத்தாக்க தீர்வுகளுடன் தமது ஐ.நா.வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் ஜனநாயக மாதிரியாக, மோதலின் பின்னர் இலங்கை உண்மையில் மீண்டும் உலக தளத்திற்கு வந்துள்ளது.

உலக பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் மனித உரிமைகள், நம்பகத்தன்மை, நிலைமாற்று நீதி மறறும் ஜனநாயகத்தை முன்னிறுத்தும் மற்றும் அனைத்துலக சட்டத்தை மதிக்கும், அனைத்துலக சமூகத்தில் தலைவராக சரியான இடத்தை நிரூபிப்பதற்கான முயற்சிகளில் மேலதிக ஆதரவினை வழங்குவதற்கு, மேலதிக நிபுணத்துவத்தை பகிர்வதற்கான சந்தர்ப்பங்களையும் அமெரிக்கா எதிர்பார்த்திருக்கிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## செய்தித்துளிகள்

### ஹெரோயினை விழுங்கி கடத்த முற்பட்ட பாக். பிரஜை கைது

உடலில் விழுங்கி மறைத்த நிலையில் ஹெரோயின் கடத்த முற்பட்ட பாகிஸ்தான் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹெரோயினை விழுங்கிய நிலையில் கடத்த முற்பட்ட வேளை, பாகிஸ்தான் பிரஜை கைது செய்யப்பட்டதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

### பொலிஸார் இரத்ததானம்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள இரத்த தட்டுப்பாட்டைப் போக்க இரத்ததான முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான முகாம் நேற்றுக் காலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.பி.வெதகெதர தலைமையில் ஆரம்பமானது. மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கி பொறுப்பதிகாரி டாக்டர் யு.எச்.வாரியபொல மற்றும் தாதியர்கள், வைத்தியசாலை ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு இரத்ததானம் செய்தனர். (இ-5)

### ஜனாதிபதிக்கு பெண் சாரதி கடிதம்

தெற்கு அதிவேகப்பாதையின் மாத்தறை - மஹரகம அதி சொகுசு பேருந்தை செலுத்தும் பெண் சாரதியான லக்ஸி சுஸித்தா ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அவர் ஜனாதிபதிக்கு வழங்கிய கடிதத்தில், தனது மூத்த மகனது சொந்த பேருந்தை செலுத்தும் இந்தப் பெண் கடந்த வாரம் தனக்கென ஒரு பேருந்தை வாங்க முன்வந்த போது போக்குவரத்து திணைக்களத்தால் அனுமதிப பத்திரம் வழங்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே, தனக்கு போக்குவரத்து அனுமதிப்பத்திரம் விடயத்தில் தீர்வினைப்பெற்றுக் கொடுக்குமாறு கோரியே ஜனாதிபதிக்கு குறித்த பெண் கடிதம் அனுப்பியுள்ளார். (இ-5)

### வெள்ளவத்தையில் வெள்ளம்

தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழை காரணமாக வெள்ளவத்தை பகுதியில் உள்ள வடிகாலமைப்பு தடைப்பட்டு வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழை காரணமாக வெள்ளவத்தைப் பகுதியில் வடிகாலமைப்புகளில் தடை ஏற்பட்டுள்ளதால் வெள்ளநீர் வழிந்தோட முடியாது பல வீதிகள் வெள்ளத்தால் மூழ்கியிருப்பதாகவும் இந்த வீதியில் பயணிக்கும் அனைவரும் மிகுந்த சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர். (இ-5)


### கலிங்கம் வெளியீடு

கலிங்கம் பல்சுவை இதழ் (பரணி-10) வெளிவந்துள்ளது. அடிமை விலங்கொடித்த நாள், நெப்போலியன் தன்னம்பிக்கையின் அடையாளம் எனப்பல ஆக்கங்களுடன் கலிங்கம் வெளிவந்துள்ளது. (இ

# யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூபா எட்டு இலட்சத்துக்கு கல் வீடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பேரில்லாவெளிக் கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட 28 வீடுகள்பயனாளிகளிடம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கையளிக்கப்பட்டுள்ளன.



யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களுக்கு இந்த வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

'வீ எபெக்ற்' நிறுவனத்தின் உதவியுடன் ஒவ்வொரு வீடும் ஏழு இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் செலவில் வரவேற்பு அறை, சமையல் அறை, இரண்டு அறைகள் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அத்தியாவசியமாக வீடு தேவையாகக் காணப்பட்ட குடும்பங்களுக்கு 192 வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்துள்ளதாக சுவீடன் கூட்டுறவு நிலையம் என்று அறியப்பட்ட 'வீ எபெக்ற்' நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி சுபாஷி திஸாநாயக்க தெரிவித்தார். வவுணதீவு ,ஏறாவூர்ப்பற்று ,கிரான் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள ஏழு கிராமங்களில் இந்த வீடமைப்புத்திட்டத்தின் ஊடாக 192 வீடுகளை நிர்மாணித்து பயனாளிகளிடம் கையளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வசிப்பதற்கு வீட்டை நிர்மாணித்துக் கொடுப்பதில் சுவீடன் மக்கள் தாராளத் தன்மையுடன் உதவியுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

'வீ எபெக்ற்' நிறுவனத்தின் ஐந்தாவது வீடமைப்புத் திட்ட த்தில் இந்தப் கிராமம் தெரிவு செய்யப்பட்டது. மேலும் இந்த வகையான திட்டத்தின் கடைசி வருடம் இது ஆகும். கூட்டுறவு விழுமியங்கள் மற்றும் கொள்கைகளின் மூலம் மக்கள் எமது திட்டங்களின் ஊடாக தாங்களாக வலுப்பெற்று தங்களுக்கு இடையில் பரஸ்பரம் உள்ளிட்ட எல்லாச் செயற்பாடுகளிலும் உதவிக் கொண்டு ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் செயற்பட்டு நீதியுடனான உரிமைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அதன் ஊடாகவே மேம்படுத்தப்பட்ட வாழ்க்கைத் தரத்தை அடைந்து கொள்ள முடியும்.

இந்த மக்கள் அத்தகைய தொரு வெளி உதவிகளில் தங்கியிருக்காத நிலைமையை ஏற்படுத்துவதற்காக இவர்களுக்கு எதிர்காலத்திலும் தாம் உதவவுள்ளதாகவும் அவர் கூறினார். (இ

# பச்சைக்கொடிக்கு பதிலாக பச்சை இலையை காட்டிய ரயில் கடவை பாதுகாப்பாளர்

ரயில் ஒன்று சமிக்ஞைக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது ரயில் கடவையின் பாதுகாப்பாளர் பச்சைக்கொடிக்கு பதிலாக பச்சை இலையை காட்டிய சம்பவமொன்று காலியில் இடம்பெற்றுள்ளது. புகையிரத கடவையின் பாதுகாப்பாளர் ஒருவர் கழிப்பறைக்கு சென்றிருந்த போது ரயில் ஒன்று வந்துள்ளது. இதன்போது சமிக்ஞை கிடைக்காததால் குறித்த ரயிலின் சாரதி ரயிலை நீண்டநேரம் நிறுத்தி வைத்ததுடன் ஊதுகுழலையும் ஒலிக்கவிட்டுள்ளார்.

அவ் ஓசையை கேட்டு கழிப்பறையிலிருந்து அவசரமாக ஓடிவந்த ரயில் கடவை காப்பாளர் பதற்றத்தில், சிவப்பு மற்றும் பச்சை வர்ண கொடிகள் அருகே இருந்த போதிலும் அவசரத்தில் பச்சை கொடிக்கு பதிலாக பச்சை இலையொன்றை காட்டியுள்ளார். இச்சம்பவத்தினால் கோபமடைந்த ரயில் சாரதி குறித்த நபரை கடுமையாக எச்சரித்துள்ளார். (இ-5)

# யாழ்ப்பாண தமிழ்ச்சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள சைவபரிபாலன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட புதிய உறுப்பினர்கள் விபரம் வருமாறு,

பெருந்தலைவராக பேராசிரியர் அ.சண்முகதாஸ் தெரிவு செய்யப்பட்டதுடன் தலைவராகப் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் தெரிவு செய்யப்பட்டார். துணைத் தலைவர்களாக யாழ். பல்கலைக்கழக வணிக பீட முகாமைத்துக் கற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல் நம்பி, சிவபூமி அறக் கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், யாழ்ப்பாண ப்பல்கலைக் கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் ம.இரகுநாதன், யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்பணி ஜெறோம் செல்வ நாயகம் ஆகியோர் தெரிவு செய் யப்பட்டுள்ளனர்.

பொதுச் செயலாளராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் தெரிவு செய்யப்பட்டதுடன் துணைச் செயலாளர்களாக யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் கலாநிதி செல்வ ரஞ்சிதம் சிவசுப்பிரமணியம், திருநெல்வேலி பிரகாந் போட்டோக்கொப்பி நிறுவன உரிமையாளர் கோ.ரஜனிகாந் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நிதிச் செயலாளராக யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ தொழிநுட்பவியலாளர் லோ.துசிகரன் தெரிவு செய்யப்பட்டார்.

மேலும் ஊடகத் தொடர்பாளராக யாழ். பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா தெரிவு செய்யப்பட்டதுடன் 23 ஆட்சிக்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.(இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-17.05.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 144.06 | 147.84 |
| பிரிட்டன் | பவுண்ட் | 207.73 | 215.19 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 161.98 | 168.51 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 146.31 | 152.53 |
| கனடா | டொலர் | 111.17 | 115.84 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 104.87 | 109.85 |
| சிங்கப்பூர் | டொலர் | 104.91 | 109.02 |
| இந்தியா | ரூபா | 2.1821 | ------- |
| சீனா | யுவான் | 22.3579 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 386.6090 |
| குவைத் | டினார் | 483.5114 |
| ஓமான் | ரியால் | 378.5504 |
| கட்டார் | ரியால் | 40.0357 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.8583 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.6793 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 70 | 80 | 120 | 140 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 80 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 800 | 600 | 350 | 250 | 250 | 400 |
| தக்காளி | 200 | 250 | 180 | 120 | 250 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 50 | 60 | 60 | 60 |
| கோவா | 140 | 150 | 100 | 140 | 160 | 140 |
| கரட் | 120 | 150 | 80 | 120 | 160 | 120 |
| பூசணி | 60 | 50 | 20 | 40 | 60 | 40 |
| புடோல் | 120 | 80 | 50 | 60 | 120 | 120 |
| வாழைக்காய் | 60 | 30 | 80 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 140 | 150 | 100 | 140 | 160 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 75 | 90 | 100 | 90 |
| பாகற்காய் | 150 | 200 | 120 | 120 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 140 | 150 | 60 | 60 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 80 | 80 | 120 | 100 |
| பயற்றங்காய் | 200 | 200 | 110 | 120 | 120 | 200 |
| லீக்ஸ் | 150 | 150 | 100 | 160 | 240 | 140 |
| பீற்றூட் | 120 | 150 | 100 | 140 | 200 | — |
| கறிமிளகாய் | 150 | 200 | 120 | — | 160 | 140 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 120 | 140 | 240 | 150 |
| போஞ்சி | 250 | 200 | 180 | 160 | 300 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 60 | 50 | — | 120 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 30 | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 600 | 300 | 300 | 350 | 250 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 15-30 | 20 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 160 | 250 | 140 | 140 | 160 | 150 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | — | 60 | 60 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 30 | — | 20 | 40 | 30 | 20 |
| வல்லாரை | 10 | — | 10 | 20 | 20 | 10 |
| ஈரப்பலா | 80 | — | — | — | — | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## கிளிநொச்சி மீண்டும் விடுதலைப்புலிகள் வசமானது 183

கிளிநொச்சி நகரை மீண்டும் விடுதலைப்புலிகள் கைப்பற்றினார்கள்.

கொழும்பு நகரில் மத்திய வங்கிக் கட்டத்தை வெடிகுண்டு நிரப்பிய லொறியை மோதச் செய்து விடுதலைப் புலிகள் தகர்த்தனர். அதே போன்று மீண்டும் ஒரு பயங்கரத் தாக்குதலை விடுதலைப்புலிகள் நடத்தினார்கள்.

### கண்டி புத்தர் கோவில்

கொழும்பில் இருந்து சுமார் 65 மைல் தொலைவில் உள்ளது கண்டி நகரம்.

இலங்கையில் கோவில் நகரம் என்று அழைக்கப்படும் கண்டியில் உலகப்புகழ் பெற்ற முருகன் கோவில் உள்ளது. தலதா மாளிகை என்ற பெயருடைய பெரிய புத்தர் கோவிலும் உள்ளது. புத்தரின் பல் ஒன்று இங்கு வைக் கப்பட்டுள்ளது.

சுதந்திரப் பொன் விழாவின் முக்கிய கொண்டாட்டம் 04.02.1998 அன்று கண்டி நகரில் நடைபெறும் என்றும் இதில் இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் உட்பட பல வெளிநாட்டு பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து வந்தன. பலத்த பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது.

### வெடிகுண்டு லொறி

தீவிர காவலையும் மீறி 25.01.1998 அன்று காலை இங்கு விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

விடுதலைப்புலிகளின் தற்கொலைப்படையைச் சேர்ந்த 3 பேர் காலை 6 மணியளவில் சக்தி வாய்ந்த வெடிகுண்டுகளை ஒரு லொறியில் ஏற்றிக் கொண்டு கண்டி நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புப் பகுதிகள் வழியாகப் புத்தர் கோவிலை நோக்கி வந்தனர். வழியில் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டிருந்த பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்த முயன்றனர்.

### கோவில் மீது மோதினார்கள்

ஆனால் விடுதலைப்புலிகள் லொறியை நிறுத்தவில்லை.

பொலிஸ் தடுப்புக் கட்டைகளை இடித்துத் தள்ளியபடி வெடிகுண்டு லொறியை வேகமாக ஓட்டிச்சென்று புத்தர் கோவிலின் வாசலின் மீது மோதினார்கள். இதனால் லொறியில் இருந்த குண்டுகள் பயங்கரச் சத்தத்துடன் வெடித்தன. லொறி சின்னாபின்னமாகச் சிதறியது.

### 11 பேர் பலி

இந்தக் குண்டு வெடிப்பில் கோவில் அருகே நின்று கொண்டிருந்த பொதுமக்கள் 8 பேர் பலியானார்கள். லொறியில் வந்த 3 தற்கொலைப்படை வீரர்களும் உடல் சிதறிச் இறந்தனர். மேலும் 23 பேர் காயம் அடைந்தனர்.

### கோவில் சேதம்

குண்டு வெடித்ததில் புத்தர் கோவிலின் முன்பகுதி பலத்த சேதம் அடைந்தது. அருகில் இருந்த ஹோட்டல்கள் உட்பட பல கட்டடங்களும் சேதம் அடைந்தன. அவற்றின் கண்ணாடி, ஜன்னல்கள் நொறுங்கி சிதறின. குண்டு வெடித்த சத்தம் 3 கிலோ மீற்றர் துரத்துக்குக் கேட்டது. அந்தப் பகுதி முழுவதும் தீப்பிழம்பாகவும் புகைமண்டலமாவும் காட்சி அளித்தது.

இதுபற்றிய தகவல் கிடைத்ததும் பெலிஸார் அங்கு வரைந்து சென்றனர். காயம் அடைந்தவர்களை மீட்டு, வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். இறந்தவர்களின் பிணங்களையும் அப்புறப் படுத்தினார்கள். அந்த இடத்தை சுற்றிலும் பெலிஸார் பாதுகாப்பு வளையம் ஏற்படுத்தினார்கள்.

குண்டு வெடிப்பில் பலியான தற்கொலைப்படையினர் தங்களுடன் கொண்டு வந்திருந்த துப்பாக்கிகள் 2 வானொலிகள் மற்றும் அவர்கள் அணிந்திருந்த 2 விஷேட உடைகள் அந்த இடத்தில் சேதம் அடைந்து சிதறிக் கிடந்தன. அவற்றைப் பொலிஸார் கைப்பற்றினார்கள்.

### சிங்களவர்கள் கலவரம்


புத்தர் கோவிலில் குண்டு வெடித்த செய்தி கண்டி நகரில் காட்டுத்தீ போல் பரவியது. இதைத் தொடர்ந்து சிங்களவர்கள் கலவரத்தில் ஈடுபட்டனர்.

அங்குள்ள இந்து கலாசார மையக் கட்டத்துக்கு தீ வைத்தனர். கல் வீசியும் தாக்கினார்கள். இந்தத் தாக்குதல் நடந்தபோது கலாசார மற்றும் மத விவகார அமைச்சர் லட்சுமண் ஜெயக்கொடி அங்கு இருந்தார். கல் வீச்சில் அவரது காரும் சேதம் அடைந்தது.

### தமிழர்கள் மீது தாக்குதல்

தமிழர்களின் கடைகள் மற்றும் வீடுகளுக்கும் தீ வைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசியும் துப்பாக்கிச்சூடு நடத்தியும் கலவரத்தை அடக்கினார்கள். தமிழர்களின் பிள்ளையார் கோவில்களும் தாக்குதலுக்கு உள்ளானது.

குண்டு வெடித்த இடத்தில் இருந்து சுமார் ஒரு மைல் தொலைவில் இருந்த இந்தியத் துணைத்துதர் அலுவலகம் குண்டு வெடி த்த அதிர்ச்சியில் லேசான சேதம் அடைந்தது. ஜன்ன லின் கண்ணாடிகள் நொறு ங்கி விழுந்தன. குண்டு வெடித்த சத்தம் பயங்கர மாகக் கேட்டதாக இந்திய துணை துதர் ஒய்.பி. குமார் கூறினார்.



கண்டியில் புத்தரின் பல் வைக்கப்பட்டுள்ள தலதா மாளிகை

(தொடரும்)

திட நம்பிக்கை, கடவுள் நம்பிக்கை என்பனவே எம்மை முன்னேற வைக்கிறது.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## விம்மி அழும் ஒலி கேட்டு உறக்கம் கலைந்த உறவுகளே!

2009 மே 18 உலக பந்தில் வரலாறாய் பதியப் பட்ட நாள். தமிழர்கள் தலை தலையென அடித்து ஓ என்று உரைக்க அழுத நாள்.

உயிரைக் காப்பாற்றி விடலாம் என்ற நம்பிக் கையோடு ஏங்கி ஏங்கி நகர்ந்தவர்களை கொன் றொழித்த நாள்.

ஒட்டுமொத்த தமிழின அழிப்புக்குமான இறுதிப் போர் நாள்.

என்ன செய்வது? தமிழர்கள் என்பதால் எப்படி யும் கொன்றொழி என்ற பேரினவாதத்தின் கோர தாண்டவம் உச்சமடைந்த நாளும் இதுவே.

வன்னிப் பெருநிலப்பரப்பு உட்பட தமிழர் தாயகம் எங்கும் நடந்த இன அழிப்பில் உயிரிழந்த அத் தனை உறவுகளையும் தமிழினம் ஒன்றாகச் சந் திக்கின்ற நாளும் இது என்பதால் தமிழர் உள்ளம் விடிகாலைப் பொழுதோடே கனத்துக் கொள்கிறது.

ஓ! முள்ளிவாய்க்கால் எங்கள் உறவுகள் முடித் துக் கட்டப்பட்ட இடத்தின் பெயர்.

முகவரிக்கே முடக்குப்பட்டுக்கொண்டிருந்த முள்ளிவாய்க்கால் இன்று தமிழினம் அழிக்கப் பட்ட இடமாகி உலகம் முழுவதும் அறிமுகமாகிக் கொண்டது.

இன்று வன்னிப்போரில்-முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளுக்காக கண்ணீர் விடுகின் றோம்.

ஓ! எம்மோடு வாழ்ந்த உறவுகளே! உங்களைப் பறிகொடுத்து நாம் படும் துன்பம் கொஞ்சமல்ல.

உங்கள் இழப்புக்கள், இந்த உலகில் இனி நம க்கு எதுவும் வேண்டாம் என்று உணரும் அளவில் வேதனை எம்மை முட்டிக்கொண்டே இருக்கிறது.

ஆறுதல் சொல்ல முடியாத அளவில் உங்கள் இழப்பு எங்களைக் கொல்கிறது.

ஓ! உங்களை கொன்றால் எஞ்சியவர்கள் உங் களை நினைந்து நினைந்தே கொல்லப்படுவார் கள் என்பதே பேரினவாத ஆட்சிக்கு நன்கு தெரி யும் போல.

அதனால்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அரசும் சர்வதேசமும் அமைதி காக்கி ன்றன போலும்.

இழந்ததை நினைந்து உருகும் தமிழன் இனி எங்கே தலை நிமிரப்போகின்றான் என்ற நம்பிக் கையில்தான் நல்லாட்சியும் நல்லது இறந்தவர் களை நினையுங்கள் என்ற அனுமதி தந்திற்றோ. யார் அறிவார் பேரினவாதிகளின் செயலை?

ஓ! ஐ.நா சபையின் செயலாளர் நாயகமே! வன்னிப் போருக்குப் பின் உலங்கு வானூர்தியில் நீங்கள் வலம் வந்து முள்ளிவாய்க்காலை சுற்றிப் பார்த்ததாக ஞாபகம்.

உயிரிழந்த தமிழன் ஆயுதத்தோடு நிற்கிறானோ என்று வேவு பார்த்து தகவல் கொடுக்க வந்தீர் களோ தெரியவில்லை.

அந்தோ! தமிழினம் அழிப்புச் செய்யப்பட்ட நாள் இன்று. அன்புக்குரிய தமிழ் நெஞ்சங்களே! ஒட்டு மொத்தப்போரிலும் எங்களை மிஞ்சவைத்து தங் களை ஆகுதியாக்கி அத்தனை தமிழ் உறவுகளை யும் நெஞ்சத்தால்-இதயத்தால் நினைந்து தொழு வோம்.

விம்மி எழும் அழுகுரல்கள் கேட்டு கலங்கிய விழிகளோடு எங்களைப் பார்த்திருக்கும் உறவு களே! உங்களிடம் இன்னுமொரு கோரிக்கை. உங்கள் ஆத்மபலத்தால் மட்டும்தான் தமிழினத் துக்கு விடிவு கிடைக்க முடியும்.

ஆதலால் உங்கள் ஆத்ம பலத்தை இறை பலத் தோடு இணைத்து தமிழின வாழ்வுக்கு உதவுங்கள்.

ஆம், எங்களுக்காக உங்களை இழந்த உங்க ளிடம்தானே! இதைக் கேட்க முடியும்? செய்திடுக.

# காற்றுடன் கூடிய மழை காரணமாக 5 ஆயிரத்து 804 பேர் யாழில் பாதிப்பு

## பாதிக்கப்பட்டவர்களுக்கு உலருணவு வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் கடந்த 3 நாட்க ளாக பெய்த காற்றுடன் கூடிய மழை காரணமாக யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து 480 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 804 பேர் பாதிக்க ப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 3 நாட்களாக ஏற் பட்ட தொடர் மழை மற்றும் பலத்த காற்று என்பவற்றால் யாழ்.மாவட்டத்தில் உள்ள பல்வேறு பகுதிகளில் சேதங் கள் ஏற்பட்டுள்ளன.

அந்த வகையில் 17வீடு கள் முழுமையாக சேதமடை ந்துள்ளதுடன் 172 வீடுகள் பகுதியளவில் சேதமடைந் துள்ளன.

இதில் அதிகளவான வீடு கள் நேற்றுமுன்தினம் அல் வாய் வடக்கு மற்றும் கர வெட்டி அல்வாய் பகுதிகளில் ஏற்பட்ட மினிசூறாவளி கார ணமாக வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் 697 குடும் பங்களை சேர்ந்த 3ஆயிர த்து 106 பேர் பாதிக்கப்பட்டு ள்ளனர். ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளை விட யாழ்ப்பாண பிரதேச செய லர் பிரிவுக்குட்பட்ட பகுதியே அதிகளவில் பாதிக்கப்பட்டுள் ளது.

குறிப்பாக வண்ணார் பண்ணை, கொட்டடி, நாவா ந்துறை வடக்கு, நாவாந்துறை தெற்கு, பாசையூர் கிழக்கு போன்ற பகுதிகள் அதிகள வான வெள்ளத்தால் பாதிக்க ப்பட்டுள்ளன.

யாழ்.நகர்ப்பகுதிகளில் கூடுதலாக புதிய கட்டடங்கள் அமைக்கும் போது வடிகால மைப்பு சீரான முறையில் மேற்கொள்ளப்படாமையா லும், வாய்க்கால்கள் ஊடாக நீர் வழிந்தோடமுடியாமல் அடைபட்டு இருப்பதன் கார ணமாகவே அதிளவாக வெள் ளப் பெருக்கு ஏற்பட்டு மேற் படி பகுதிகள் பாதிக்கப்பட் டுள்ளன.

மேலும் கடற்கரையோர ங்களில் வீசிய கடும் காற் றின் காரணமாக கரையோர ங்களில் நிறுத்தி வைக்கப்பட் டிருந்த படகுகள் பலவும் சேத மடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட இடங்களு க்கு யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவின் ஊடாக உலர் உண வுப் பொருட்கள் வழங்குவத ற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் 3 நாட்களாக வீசிய கடும் காற்றின் காரண மாக தோட்டப் பயிரான வாழை செய்கையில் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

இவற்றின் சேத விபரங் கள் விவசாயத்திணைக்களத் தினூடாக திரட்டப்பட்டு வருகி ன்றன. (செ-9)

## மகோற்சவ விஞ்ஞாபனம்

கோப்பாய் இருபாலை தென்கோவை திருவருள் மிகு கற்பகப்பிள்ளையார் தேவஸ்தான வருடாந்த மகோ ற்சவ விஞ்ஞாபனம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்து டன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 நாட்கள் வரை நடைபெற வுள்ளது.

இதற்கமைய 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப் பறத் திருவிழாவும் முதலாம் திகதி புதன்கிழமை தேர்த்திரு விழாவும் 2ஆம் திகதி வியா ழக்கிழமை தீர்த்தத் திருவிழா வும் நடைபெறவுள்ளன. (இ-5)

## கப்பம் கோரி இளைஞனை கடத்தியவர்களுக்கு மறியல்

இரண்டு கோடி ரூபா கப் பம் கேட்டு வாரியபொல இளைஞரைக் கடத்திய குற் றச்சாட்டில் கைது செய்யப் பட்ட இரண்டு சந்தேகநபர்க ளையும், எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை வாரியபொல நீதவான் நீதி மன்றில் ஆஜர்படுத்தப் பட்ட போது, இருவரையும் விள க்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இரண்டு சந்தேக நபர்க ளும் அடையாள அணிவ குப்புக்கு உட்படுத்தப்படவுள் ளதுடன், கடத்தல் சம்பவத் துடன தொடர்புடைய ஏனைய நான்கு சந்தேகநபர்களை கைது செய்யும் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு ள்ளன. ஏனைய நான்கு சந் தேகநபர்களும் தலைமறை வாகியுள்ளதாகவும், அவர் களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத் தப்பட்டுள்ளதாகவும் பொலி ஸார் தெரிவித்தனர்.

கப்பம் பெறும் நோக்கில் வாரியபொல கோடீஸ்வர முஸ்லிம் வர்த்தகரின் மக னான் 20 வயதுடைய மொஹ மட் ஆசிக் என்பவர் கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு இனந்தெரியாத குழு வொன்றினால் கடத்தப்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக் கது. (இ-5)

### குருதேவரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் ஸ்ரீமத் பகவத்கீதை வினாவிடைப் போட்டி (பாடசாலை மாணவர்களுக்கானது)

**வினா இல.35**
**(அத்:5.ஸ்லோ:16,17)**
**தியானம் செய்யும் ஒருவருக்கு எவை அளவுடன் இருக்கவேண்டும்?**

விடை: உணவு, உடற்பயிற்சி, நித்திரை, வேலை செய்தல்

**வினா இல.36**
**(அத்.6:ஸ்லோ.19)**
**தியான யோகியின் மனநிலை எவ்வாறு இருக்கும்?**

விடை: காற்றில்லாத இடத்தில் வைக்கப்பட்ட தீபமானது எப்படி அசைவதில்லையோ அவ்வாறு தியான யோகியின் மனநிலை இருக்கும்.

ஸ்ரீமத் பகவத்கீதை வினாவிடைப் போட்டி
எழுத்துப்பரீட்சை
காலம்:22.05.206 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: காலை 10 மணி முதல் 11 மணி வரை
இடம்: யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை

அனைத்து வடமாகாண பாடசாலை மாணவர்களும் பங்குபற்றலாம்.

மாணவர்களுக்கு: பதிவுகளை 18.05.2016 இற்கு முன் மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளன.

தொடர்புகளுக்கு:
சின்மயாமிஷன்
இல.09, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3447, 076 645 6920

## 3 பாடசாலைகள் இயங்கவில்லை

சீரற்ற காலநிலை காரண மாக வடமராட்சி கல்வி வலய த்திற்குட்பட்ட மூன்று பாடசா லைகள் நேற்று செவ்வாய்க் கிழமை இயங்கவில்லை என வடமராட்சி வலயக்கல்வி பணிப்பாளர் சி.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீர ற்ற காலநிலை காரணமாக பெய்த கடும் மழையினால் கரையோரமாக உள்ள பருத் தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, அல்வாய் வடக்கு றோ.க.த.க பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளுக்கு உள்ளும் வெள்ளம் நின்ற மையால் அவை இயங்க வில்லை என தெரிவித்தார்.

ஏனைய பாடசாலைகள் இயங்கிய போதிலும் மாண வர்களின் வரவு குறைவாகக் காணப்பட்டதாகத் தெரிவிக் கப்படுகிறது. (செ-60)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமை ப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை வியாழக் கிழமை யாழ்.பிரதேசதநில சங்கத்தானை, டச்சு றோட் ஆகிய இடங்களிலும் வவு னியா பிரதேசத்தில் தீவீரகம (பெரியஉளுக்குளம்), குட் செட் வீதி பிரதேசம், கோவில குளம் சிவன் கோவிலடி பிரதேசம், பூ ஓயா கிராமம், பூ ஓயா இராணுவமுகாம் ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்படும். (இ-9)

## ஒப்பந்த அடிப்படையிலான தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்தல்

சிறைச்சாலைகள், புனர் வாழ்வு மற்றும் மீள்குடியேற் றம் மற்றும் இந்து மத அலு வல்கள் அமைச்சினால் வட க்கு கிழக்கில் உள்நாட்டில் இடம்பெயர்ந்து மீளக்குடிய மர்ந்த மற்றும் இந்தியாவி லிருந்து மீளத்திரும்பியவர் களுக்காக 2016 ஆம் ஆண் டில் நடைமுறைப்படுத்தப்ப டும் வீடமைப்புத் திட்டத்தின் மூலம் கிளிநொச்சி மாவட் டத்தில் அமைக்கப்படவுள்ள வீடுகளை தொழில்நுட்ப மேற் பார்வை செய்வதற்கு விண் ணப்பங்கள் கோரப்பட்டுள் ளன.

தேசிய பயிலுநர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபை யினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ் அல்லது கல்வி உயர்கல்வி அமைச் சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் சான்றி தழ் (சிவில்) தகைமையுடன் ஆகக்குறைந்தது இரண்டு வருட முன் அனுபவமுள்ள விண்ணப்பதாரர்கள் தங்க ளது சுயவிபரக்கோவையினை (தங்கள் தொலைபேசி இலக் கத்துடன்) 30.05.2016 ஆம் திகதிக்கு முன்னர் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செய லகம், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

நேர்முகப் பரீட்சைக்கான திகதி தபால் மூலம் அறியத் தரப்படும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அறிவித் துள்ளார். (இ-5)

### பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## வணக்கம் போடுங்க



✦ கடவுளுக்கும், அவரது திருநாமத் திற்கும் வித்தியாசமே கிடையாது.

✦ பிறருடைய குற்றத்தை மட்டுமே சிந்தித்தால் காலம் வீணாக கழிந்து விடும்.

✦ வாழ்வில் வெற்றி பெற வேண்டுமானால், திட சிந்தனை, நம்பிக்கை வேண்டும்.

✦ பக்திமானாக இருப்பது அவசியம். ஆனால், அதற்காக மூடத்தனத்துடன் இருக்கக் கூடாது.

✦ மற்றவர் தலை வணங்கும்போது, நாமும் வணக்கம் செலுத்த வேண்டியது கடமை.

✦ தாய் தந்தையரை திருப்திப்படுத்தாவிட்டால், கடவுள் நம் பக்தியை ஏற்பதில்லை.

# வடமாகாண வல்லவன் தொடர்

# பொற்பதி வி.கழகத்தை வீழ்த்தியது

# இமையாணன் மத்தி வி.கழகம்







பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண் வல்லவன்- உதைபந்தாட்ட தொடரின் முதற் சுற்று ஆட்டத்தில் கடந்த வெள்ளி கிழமை இடம்பெற்ற இரண்டாவது போட்டியில். இமையாணன் மத்தி விளையாட்டு கழகத்தினை பொற் பதி வி.க எதிர்த்தாடியது.

ஆட்டத்தின் ஆரம்பத்தில் 06 ஆவது , 07 ஆவது நிமிடங்களில் இமையாணன் வீரர் சாருஷன் தொடர்ந்து இரண்டு கோல்களை அடித்து அதிர வைத்தார். அதனை தொடர்ந்து கவனம் செலுத்திய பொற்பதி வி.க இனால் எதிரணி கோல் பெறுவதை முதற்பாதிவரை தடுத்தாலும் கோல் எதனையும் பெற முடியவில்லை. தொடர்ந்தும் இரண்டாவது பாதி ஆட்டத்தில் 34 ஆவது மற்றும் 52 ஆவது நிமிட ங்களில் இமையாணன் மத்தி சுலக்சன் மேலும் இரண்டு கோல் களை பெற்று அணிக்கு வலு சேர்த் தார்.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் பொற்பதி அணி சார்பாக சஜீவன் 47 ஆவது நிமிடத்தில் ஒரு கோலினை பெற்றார். ஆட்ட நேர முடிவில் இமையாணன் மத்தி வி.க 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக இமையாணன் மத்தி வி.க வீரர் சுலக்சன் தெரிவு செய் யப்பட்டதுடன் அவருக்கான பண பரிசு மற்றும் பதக்கத்தினை கழுகு கள் வி.க. முன்னாள் கோல் காப் பாளர் மு.ஸ்ரீஸ்கண்ணன் வழங்கி கௌரவித்தார். (க)

# நெற்கொழு கழுகுகள் வி.கழக உதைபந்தாட்ட சுற்றுத்தொடர்

## சென்.யூட்ஸ் வெற்றி







பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரின் முதற் சுற்று ஆட்டத்தில் கடந்த வெள்ளி கிழமை இடம்பெற்ற முதலாவது போட்டியில் முல்லைத்தீவு சென். யூட்ஸ் விளையாட்டு கழகத்தினை மாந்தை சென்.அன்ரனீஸ் வி.க எதிர்த்தாடியது. ஆரம்பம் முதல் தமது ஆட்ட வேகத்தினை வெளிப்ப டுத்திய சென்.யூட்ஸ் வி.க 15 ஆவது நிமிடத்தில் பியூஸ்லாஸ் இனால் பெறப்பட்ட கோல் மூலம் கோல் கணக்கினை ஆரம்பித்தது.

தொடர்ந்து 21 ஆவது நிமிடத் தில் மெலனியஸ் ஒரு கோலினை யும் மற்றும் 22 , 54 ஆவது நிமிட ங்களில் தீபன் 02 கோல்க ளினையும் கோல் கணக்கில் பதிவு செய்ததன் மூலம் 4:0 என்ற கோல் கணக்கில் சென்.யூட்ஸ் வி.க வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.யூட்ஸ் வி.க வீரர் பியூஸ் லாஸ் தெரிவு செய்யப்பட்டதுடன் அவருக் கான பணப்பரிசு மற்றும் பதக்கத் தினை. கழுகுகள் வி.க முன்னாள் கோல்காப்பாளர் மு.ஸ்ரீஸ்கண் ணன் வழங்கி கௌரவித்தார். (க)

# அடுத்த சுற்றுக்கு முன்னேறியது யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம்



இமையாணன் மத்தி விளை யாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதி யாக நடத்தும் உதைபந்தாட்ட தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் காளி அம்பாள் வருகை தராத காரணத்தால் யங்கம்பன்ஸ் விளை யாட்டுக்கழகத்துக்கு வெற்றி வழங் கப்பட்டது.

இவ் வெற்றியைஅடுத்து யங்கம் பன்ஸ் விளையாட்டுக்கழகம் அடு த்த சுற்றுக்கு முன்னேறியது. (க)

# இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் மனோகரா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வீனஸ் விளையாட்டுக்கழகமும் மாலை 4 மணிக்கு நடைபெறும் போட்டியில் கிளிநொச்சி ஜெயமீட்பர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நக்கீரன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளன. (க)

# அமெரிக்க முன்னாள் அதிகாரியுடன் சம்பந்தன் நேற்று சந்திப்பு!



(கொழும்பு)

பாராளுமன்றில் உள்ள எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் அமெரிக்காவின் முன்னாள் பிரதி இராஜாங்க செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ், எதிர்க்கட்சி தலைவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனை நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பின்போது இராணுவ கட்டுப்பாட்டில் இருக்கும் தனியார் காணிகளின் விடுவிப்பு, பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குதல், மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை போன்ற பல்வேறு விடயங்கள் தொட ர்பில் எதிர்க்கட்சி தலைவர் முன்னாள் பிரதி இராஜாங்க செயலாளருக்கு தெளிவுபடுத்தினார்.

தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளாக காணப்படும் இவ்விடயங்கள் தொடர்பில் அரசாங்கமானது இன்னும் ஆர்வமாகவும் வேகமாவும் செயற்பட வேண்டும் என வலியுறுத்திய எதிர்க்கட்சி தலைவர், இவ் விடயங்கள் தொடர்பில் உடனடி நிவாரண ங்கள் தீர்வுகளை வழங்குவதிலிருந்து அரசு விலகி நிற்கமுடியாது என்றும் எடுத்துரை த்தார்.

அரசியல் தீர்வு திட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், புதிய அரசியல் யாப்பில் தேசிய பிரச்சினைக்கு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நிரந்தர தீர்வு ஒன்றை எட்டுவது மிகவும் அவசியாமானது எனவும் கூறினார்.

இந்த சந்திப்பில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரனும் கலந்து கொண்டிருந்தார். (செ-11)

# வாக்கெடுப்பில் முறைகேடு சம்பந்தன் குழுவின் அறிக்கை சபாநாயகரிடம் கையளிப்பு!

அமைச்சுக்களுக்கான மேலதிக நிதி ஒதுக்கத்திற்கான, குறைநிரப்பு பிரேரணை மீதான வாக்கெடுப்பில் இடம்பெற்ற முறைகேடு குறித்து ஆராய எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தர் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை நேற்று சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

11 அமைச்சுக்களுக்கு 55 மில்லியன் ரூபா நிதி ஒதுக்குவது தொடர்பான குறைநிரப்பு பிரேரணை மீதான விவாதம் இடம்பெற்று, வாக்கெடுப்பும் நடத்தப்பட்டது. இந்த வாக்கெடுப்பின் போது, ஆளும்தரப்பு உறுப்பினர்கள் அதிகளவில் நாடாளுமன்றில் பிரசன்னமாகியிருக்காத நிலையில், பிரேரணைக்கு ஆதரவாக 33 வாக்குகளும், எதிராக 31 வாக்குகளும் அளிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. எனினும் இந்த முடிவு தவறானதென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவான கூட்டு எதிரணியினர் ஆட்சேபனை தெரிவிக்க, நாடாளுமன்றில் குழப்ப நிலைமை ஏற்பட்டதுடன், நாடாளுமன்ற அமர்வுகளும் அடுத்த நாளுக்கு ஒத்தி வைக்கப்பட்டன.

இதன்போது, வாக்கெடுப்பு நடந்த தினத்தன்று நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தை சூழந்து கொண்டு காணொளிகளை பார்வையிட வேண்டுமென மகிந்த அணியினர் கூச்சலிட்டனர். இரவு 9 மணிவரை வாக்கெடுப்பு தொடர்பான காணொளி காட்சிகளை பரிசீலித்த மகிந்த அணியினர் பிரேரணை மீது இரு தரப்பினராலும் 31 வாக்குகளே வழங்கப்பட்டுள்ளதாகவும் வாக்கெடுப்பு முடிவு சமநிலையானது என்றும் கூறினர்.

இதனையடுத்து மறுநாள், மகிந்த ஆதரவணியினர் இந்த விடயத்தை சபாநாயகரின் கவனத்திற்கு கொண்டு வந்து இவ்விடயம் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டுமென கோரிக்கை விடுத்தனர். இந்நிலையில் சம்பந்தர் தலைமையிலான நால்வர் அடங்கிய குழுவினர் கடந்த 10ஆம் திகதி கூடி இவ் விடயம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை தயாரித்துள்ளனர். இவ்வாறு தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கை நேற்று சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.(செ-11)

## தீக்காயமடைந்த...

சேர்ந்த மகேந்திரன் உசாந்தினி வயது (22) என்ற குடும்ப பெண்னே இவ்வாறு உயிரிழுந்தவராவார்.

இவர் ஆறுமாதங்களாக மகேந்திரன் என்பவரை காதலித்து கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் அவரை திருமணம் செய்திருந்தார்.

திருமணத்தின் பின் தாய் வீட்டில் வாழ்வதா? அல்லது கணவனின் வீட்டில் வாழ்வதா? என்ற குடும்ப பிரச்சினை கணவன் மனைவிக்கு இடையில் இருந்து வந்துள்ளது. இதனால் 17 நாட்களாக அவரவர் வீட்டிலேயே இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்துள்ளனர்

சம்பவம் இடம்பெற்ற தினம் கணவனின் வீட்டுக்கு சென்று தாய்வீட்டுக்கு திரும்பியவரை, கணவன் வீட்டிற்கு ஏன் சென்று விட்டு வந்தாய் என அவரது தாய் கடுமையாக திட்டியுள்ளார். மனதளவில் பாதிக்கப்பட்ட இவர் தனக்கு தானே தீ மூட்டியுள்ளார்.

உடனடியாக காப்பாற்றப்பட்ட பிரஸ்தாப குடும்பப் பெண் முதலில் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்றைய தினம் அதிகாலை 5 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மரண விசாரணைகளை மேற்கொண் டதுடன் சட்டவைத்திய அதிகாரியினால் உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-11)

# படையினர் சுவீகரித்த காணிகள் குறித்து உச்ச நீதிமன்றில் மனு விசாரணைக்கு

நாட்டில் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்த பின்னர் படைத்தரப்பினரால் யாழ் குடாநாட்டில் சுவீகரிக்கப்பட்ட மூன்று தனியார் காணிகளை விடுவிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உச்சநீதிமன்றம் தீர்மானித்துள்ளது. இந்த மூன்று காணிகள் தொடர்பிலும் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பாக எதிர்வரும் 26ஆம் திகதி நீதிமன்றத்தில் விளக்கமளிக்குமாறு படையினருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இந்த மூன்று தனியார் காணிகளும் ப்டையினரால் 2012ஆம் ஆண்டு பலவந்தமாக சுவீகரிக்கப்பட்டதாக மனுதாரர் சார்பில் நீதிமன்றத்தில் சமூகமளித்த வழக்கறிஞர் குற்றம் சுமத்தினார்.

அத்துடன், இந்தக் காணிகளை சுவீகரிக்கும் போது காணி தொடர்பான சட்டவிதிகளை கடைப்பிடிக்க படையினர் தவறிவிட்டதாக குற்றம் சாட்டிய வழக்கறிஞர், மனுதாரர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். எனவே படையினரால் சட்டவிரோதமாக கையகப்படுத்தப்பட்டுள்ள இந்தக் காணிகளை விடுவிக்கும் உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்கு மாறு மனுதாரர் சார்பில் நீதிமன்றத்தில் சமூகமளித்த வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார்.

அதேவேளை, இந்தக் காணிகளை யாழ் பிரதேச செயலாளர் சட்டரீதியாக கையகப்படுத்தியதாக அரசதரப்பின் வழக்கறிஞர் தெரிவித்தபோது, அரசதரப்பு வழக்கறிஞரின வாதத்தை நிராகரித்த மனுதாரர் சார்பில் நீதிமன்றத்தில் சமூகமளித்த வழக்கறிஞர், இந்தக் காணிகள் சட்டரீதியாக சுவீகரிக்கப்பட்டிருந்தால், மனுதாரர்களுக்கு நஷ்டஈடுகளை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் தவறியது ஏன் என்று கேள்வி எழுப்பினார்.

இந்த முறைப்பாடு குறித்து அரசதரப்பின் விளக்கங்களை கோருவது அவசியமென்று கூறி இவ்வழக்கின் விசாரணைகளை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு ஒத்திவைத்த தலைமை நீதிபதி சிறீபவன், அன்றைய தினம் சம்பந்தப்பட்ட காணிகள் சுவீகரிக்கப்பட்ட முறை தொடர்பில் விளக்கமளிக்குமாறு படையினருக்கு உத்தரவிட்டுள்ளார். (செ-11)

# கிளிநொச்சியின் வரலாற்றில் அதிகூடிய மழை வீழ்ச்சி

## பல குளங்கள் வான் பாய்கின்றன

(கிளிநொச்சி)

இதுவரை காலமும் கிளிநொச்சியின் மழை வீழ்ச்சி ஆண்டுக்கு சராசரியாக 1250 மி.மீற்றராக இருந்து வந்த நிலையில் கடந்த திங்கள் அன்று பெய்த ஒரு நாள் மழை வீழ்ச்சி மட்டும் 380 மில்லி மீற்றராக பதிவாகியிருக்கிறது. இதுவே கிளிநொச்சியின் வரலாற்றில் அதி கூடிய மழை வீழ்ச்சியாகும் என கிளிநொச்சி பிராந்திய நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒரே நாளில் அதிக கூடிய மழையும், வரலாற்றில் என்றும் வெள்ளம் ஏற்படாத பிரதேசங்களில் எல்லாம் அதிக வெள்ளப்பெருக்கும், நீண்ட காலத்திற்கு பின்னர் கோடை மழையில் கிளிநொச்சியின் அனைத்து பெரிய நீர்ப்பாசன குளங்களும் வான் பாயும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது எனவும் திணைக்களம் தெரிவிக்கிறது.

அந்த வகையில் நேற்று பிற்பகல் ஒரு மணி தகவலின்படி இரணைமடு குளம் 25 அடியாகவும், அக்கராயன்குளம் 26.8 அடியாகவும், கரியாலைநாகபடுவான் குளம் 10.5 அடியாகவும், கல்மடு 25.1 அடியாகவும், கனகாம்பிகைகுளம் 11 அடியாகவும், வன்னேரிக்குளம் 10.2 அடியாகவும், புதுமுறிப்பு 20.2 அடியாகவும், பிரமந்தனாறு 13.11 அடியாகவும், குடமுருட்டி 9.9 அடியாகவும் நீர் மட்டம் காணப்படுகிறது.

இதில் இரணைமடு குளத்தை தவிர ஏனைய அனைத்துக் குளங்களும் வான் பாய்கின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-312)

# மரண அறிவித்தல்

## குருநாதர் விஸ்வநாதர் (காசி ஐயா)

(ஓய்வுபெற்ற தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஊழியர்)



புத்தூர் வடக்கினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குருநாதர் விஸ்வநாதர் (காசிஐயா) நேற்று (17.05.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குருநாதர்-இராஜேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் சரவணபவன் (தேவன்) (ஜேர்மனி), கணேசமூர்த்தி (கணேஸ்) (தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை-மன்னார்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவபாக்கியம், கௌரியம்மா ஆகியோரின் அன்புக் கணவரும், தர்சினி (ஆசிரியர்-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), சாந்தினி, உமாசுதன் (லங்கா சித்த ஆயுள் வேத மருத்துவக் கல்லூரி), ஞானகுருபரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெகதீஸ்வரன் (மலேசியா), பரமேஸ்வரா (முகாமைத்துவ உதவியாளர் நகர சபை-பருத்தித்துறை) ஆகியோரின் மாமனாரும், மாதினி, கீதசாய், அஞ்சனா ஆகியோரின் பாசமிகு பேரனும், மூத்தவிநாயகர் கோவிலடி ஆனந்தம்-பூரணம் தம்பதியரின் மருமகனும் கனகசபை, குமாரசாமி, சண்முகநாதன், தனபாக்கியம் ஆகியோரின் மைத்துனரும், கஜேந்திரன் (பிள்ளையார் மெடி கிளினிக்-ஆவரங்கால்), வித்தியாதரன், அபிராமி, சஹானா (ஜேர்மனி) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2016) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் வடக்கு கிந்துசிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுன்னாகம் வீதி,
புத்தூர் வடக்கு.

தகவல்:-குடும்பத்தினர்
0773530368

# முள்ளிவாய்க்கால் அவலம்...

இறுதிக்கட்ட யுத்தத்தில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட உச்சகட்ட இனவழிப்பு நாளான முள்ளிவாய்க்கால் தினம் இன்றைய தினம் தமிழர் தாயகம் எங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இன்று கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டும் நினைவுச் சுடர்களை ஏற்றியும் துக்கதினமாக அனுஷ்டிக்குமாறும் பொது அமைப்புக்கள், கட்சிகள் என்பன கோரியுள்ளன.

வன்னியில் நடைபெற்ற யுத்தத்தில் பல இலட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டு இன்றுடன் ஏழு ஆண்டுகள் நிறைவுறுகின்றன.

இதில் கொல்லப்பட்ட ஒட்டுமொத்த தமிழ் மக்கள் நினைவாக பொது நினைவு தினமாக மே 18 ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டு அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இதனை தாயகத்திலுள்ள தமிழ் மக்களும் புலத்திலுள்ள தமிழ் மக்களும் தமது உறவுகள் நினைவாக அனுஷ்டித்து வருகின்றன.

இலங்கை இராணுவத்தால் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட காட்சிகளை ஒளிபரப்பியிருந்த சனல் 4 தொலைக்காட்சிகளின் காணொலிகளை ஆரம்பத்தில் பொய்யானது என மறுத்து வந்த இலங்கை அரசு தற்போது அதன் உண்மைத் தன்மையை உணர்ந்துவரும் நிலையிலும், யுத்த வெற்றி நினைவு கூரலை இம்முறை நிறுத்தியுள்ள தற்போதைய சூழலில், முள்ளிவாய்க்கால் படுகொலையின் ஏழாம ஆண்டு நினைவு கூரல்கள் இடம் பெறவுள்ளன.

தமிழினம் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் நீதியை நோக்கி சென்று கொண்டுள்ளது என்ற நம்பிக்கையில் இம்முறை உயிரிழந்தவர்கள் நினைவு கூரப்படவுள்ளனர்.

எனினும் இந்த நிலை தொடருமா என்ற சந்தேகமும் தமிழ் மக்களிடையே காணப்படுகின்றது.

மேலும் அனுமதியை தந்து விட்டு இராணுவ புலனாய்வாளர்களை கொண்டு நினைவு நிகழ்வுகளை கண்காணிக்கும் கபடத்தனங்களிற்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன் ஆகியோர் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

ஆகையால் இன்றைய தினம் நடைபெறவுள்ள முள்ளிவாய்க்கால் பெரு நினைவு நிகழ்வும் இராணுவ புலனாய்வாளர்களின் கண்காணிப்புக்குள் உட்படுத்தப்படுமா? என்பது தொடர்பில் சந்தேகமாகவே உள்ளது.

வடக்கு மாகாண சபையினால் இன்று காலை ஒன்பது மணியளவில் பல ஆயிரம் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் மண்ணில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நினைவு நிகழ்வே பெரும் நிகழ்வாக உள்ளது.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, யாழ்.பல்கலைக்கழகம், சிவில் சமூகங்கள் என்பனவும் நினைவு நிகழ்வுகளை நடத்த உள்ளன.

இன்று அனைத்து ஆலயங்களிலும் மணியோசை ஒலித்து உயிரிழந்தவர்கள் நினைவாக விசேடபூசை வழிபாடுகளை நடத்துமாறும் சைவ அமைப்புக்கள் கோரியுள்ளன.

பொது மக்கள் தமது வீடுகளில் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்த முடியும் அல்லது நினைவு நிகழ்வுகளில் கலந்து கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் தாயகம் எங்கும் இன்று நடைபெறவுள்ள நினைவு நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் இந்த வாரத்தின் ஆரம்பித்திலேயே மேற்கொள்ளப்பட்ட நிலையில், சமூக வலைத்தளங்களிலும் உயிரிழந்த உறவுகளுக்கான நினைவுகள் தொடர்ந்து பதிவேற்றப்பட்டு கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

# அடைமழை காரணமாக வடக்...

2 ஆயிரத்து 636 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 841 பேர் பாதிக்கப்பட்டதுடன் அவரகளில் 157குடும்பங்களைச் சேர்ந்த 520 பேர் 10 நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர்.

அதேவேளை 610 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 29 பேர் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர். 2 வீடுகள் முழுமையாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 110 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

யாழ் மாவட்டத்தில் ஆயிரத்து 480 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 804பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் 17 வீடுகள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் 172 வீடுகள் பகுதியளவில் பாதிப்படைந்துள்ளன.

வவுனியா மாவட்டத்தில் 734 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 781 பேர் பாதிக்கப்பட்டதுடன் அவர்களில் 3 பேர் ஒரு நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளனர். 21 வீடுகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 55 வீடுகள் பகுதியளவில் பாதிப்படைந்துள்ளன.

மன்னார் மாவட்டத்தில் ஆயிரத்து 466 குடும்பங்களைச்சேர்ந்த 5 ஆயிரத்து 85 பேர் பாதிக்கப்பட்டதுடன் அவர்களில் 233 குடும்பங்களைச்சேர்ந்த 792 பேர் 10 நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர். 19 வீடுகள் முழுமையாக பாதிகப்பட்டுள்ளதுடன் 11 வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் கடும் காற்றினால் பேசாலைப்பகுதி கடற்கரையில் 55 றோலர் படகுகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 25 படகுகள் முற்றுமுழுதாக கடலில் மூழ்கியுள்ளன.

அதில் 30 படகுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் மாந்தை மேற்குப்பகுதியில் 7 படகுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 292 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 12 பேர் பாதிக்கப்பட்ட துடன் அவர்களில் 2 குடும்பங்களைச்சேரந்த 24 பேர் ஒரு நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளனர். 11 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் சுழல காற்றினால் 38 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இதேவேளை நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு அந்தந்த மாவட்டங்களின் பிரதேச செயலகங்கள் ஊடாக 3 நேர சமைத்த உணவுகள் வழங்கப்படடு வருவதுடன் பாதிக்கப்பட்ட மககளுக்கு உலர் உணவு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்றையதினம் அனைத்து பிரதேசங்களிலும் மதியம் வரை ஓய்ந்திருந்த மழை மாலை நேரத்தில் இருந்து மீண்டும் இடைவிட்டு பெய்து வருகிறமை குறிப்பிடத்தக்கது.

மேலும் சீரற்ற காலநிலை தொடர்ச்சியாக நிலவுவதன் காரணமாக மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் ஏ 32 வீதி மூடப்பட்டுள்ளது. அத்துடன் மன்னார், சிலாபத் துறை ஊடாக புத்தளம் செல்லும் வீதியும் மூடப்பட்டுள்ளது.

மேலும் குஞ்சுக்குளம் மாதா கோவில் வீதியும் விடத்தல் தீவிலிருந்து பெரியமடுவுக்கு செல்லும் வீதியும் மூடப்பட்டுள்ளது. (செ-9)

# விலக்கக் கோருவதால்...

வடக்கு மாகாண ஆளுநர் பதவியிலிருந்து றெஜினோல்ட் கூரேயை மீளப்பெறவேண்டும் என்று கோரி றெலோவின் செயலாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான சிறிகாந்தா ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

இது தொடர்பில் ஆளுநர் றெஜினோல்ட் கூரே மேலும் தெரிவிக்கையில், என்னை விலக்குமாறு கோருவதானது இனவாதிகளுக்கு தீனிபோடுவதாக அமைந்துவிடும் என்பது குறித்து நான் கவலையடைகின்றேன்.

மேலும் நான் கூறியதாக ஊடகங்களில் வெளிவந்த செய்திகள் திரிபுபடுத்தப்பட்டுள்ளன. எனவே என்மீது விமர்சனங்களை முன்வைத்துள்ளவர்களை சந்தித்து விளக்கமளிப்பதற்கும் நான் எதிர்பார்க்கின்றேன்.

தேசிய நல்லிணக்கத்தின் பெறுமதியை உணர்ந்தமையினாலேயே ஜனாதிபதி என்போன்ற ஒருவரை வடக்கு ஆளுநராக நியமித்துள்ளார்.

கொழும்பில் நான் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் என்னிடம் பல கேள்விகள் கேட்கப்பட்டன. அவற்றுக்கு நான் பதிலளித்தேன். குறிப்பாக புலிகளை நினைவுகூர முடியாது என்றும் இறந்தவர்களை நினைவுகூர அனைவருக்கும் உரிமை உள்ளது என்றும் கூறினேன்.

அத்துடன் படுகொலை என்ற பெயரில் வடக்கு மாகாணசபையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது.

ஆனால் மாகாணசபையில் அவவாறு பிரேரணை நிறைவேற்றினாலும் அது சட்டமாகாது என்றும் பாராளுமன்றமே இறுதி தீர்மானம் எடுக்கும் இடம் என்றும் கூறினேன்.

ஆனால் ஊடகங்களில் தவறான புரிதலுடன் செய்திகள் வெளிவந்தன. நான் எந்தவொரு இடத்திலும் இனவாதம் பேசவில்லை. நான் இனவாதியல்ல. ஒருபுறம் தெற்கு அரசியல்வாதியான சரத் வீரசேகர என்னை பதவிவிலக்க வேண்டும் என்று கூறுகின்றார்.

மறுபுறம் முன்னாள் எம்.பி. சிறிகாந்தா என்னை பதவி விலக்க வேண்டும் என்று கூறுகின்றார். இது தொடர்பில் நான் ஆச்சரிய மடைகின்றேன் என ஆளுநர் கூரே தெரிவித்தார். (செ-11)

# சமத்துவத்...

வருகின்றனர். இந்தப் பின்னணியில் ஈழத் தமிழ் மக்களுக்கு சமத்துவம் கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அலரிமாளிகையில் நேற்று பிற்பகல் நடைபெற்ற மகா சத்சங்கம் மற்றும் தியான பயிற்சியிலும் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி கலந்து கொண்டிருந்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மறறும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள்உள்ளிட்ட பெருந்திரளானோர் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

இராமாயண இதிகாசத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் நுவரெலியா சீதையம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விலும் கலந்துகொள்வதற்காகவே ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி இலங்கை வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# கடும் காற்று...

நாட்டை விட்டு விலகி நாட்டின் வட பகுதியில் நிலை கொண்டுள்ளதாக வானிலை அவதான நிலையம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக நாட்டை சுற்றி கடற்பிரதேசங்களில் கடுமையான காற்று விட்டு விட்டு வீசக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் வேகம் மணித்தியாலத்திற்கு 70 தொடக்கம் 80 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடும். ஆகையால், கடற்பகுதி ஆபத்தானது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக , மீனவர்கள் மற்றும் கடற்படையினர் அவதானத்துடன்செயற்படுமாறு வானிலை அவதான நிலையம் கோரியுள்ளது. (செ-11)


## பணிப்பெண் தேவை

இருவர் உள்ள வீட்டில் தங்கி நின்று சகல வேலைகளையும் செய்யக் கூடிய 36 வயதிற்குட்பட்ட பணிப் பெண் உடன் தேவை.

**021 226 0277**

(4598)


# 10 கிலோ கேரள கஞ்சா...

காரி எஸ்.எம்.ஆர் சேனநாயக்க தெரிவித்தார்.

இக் கஞ்சாவினை வீட்டில் உடைமையாக வைத்திருந்ததாக 48 வயதுடைய விபுலானந்தா வீதியை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகலொன்றின் பிரகாரம் வீடொன்றினை சோதனையிட்ட போது குறித்த கஞ்சாவுடன் நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

குறித்த கேரள கஞ்சா மீட்கப்பட்ட வீட்டில் இருந்து பல இடங்களிற்கு கடத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந்ததாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர். 6 பார்சல்களாக பொதி செய்யப்பட்ட நிலையில் கேரள பத்திரிகை ஒன்றால் இக் கஞ்சா சுற்றப்பட்டிருந்தது.

இத்தேடுதல் நடவடிக்கையானது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மாசிங்க மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் மதவல ஆகியோரது ஆலோசனையில் இடம்பெற்றுள்ளது.

இச்சுற்றி வளைப் பில் உப பொலிஸ் பரிசோதகர் ஜயசுநதர, பொலிஸ் சார்ஜன்ட் விமலதர்ம, சில்வா, எதிரிமான்ன,

பொலிஸ் கன்ஸ்டபிள்களான திசாநாயக்க, ஜயதிலக, நசோக், அமலதாஸ், எதிரிசிங்க, ஜயசேகர மற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர ஒருவர் என பலர் பங்கெடுத்துள்ளனர்.

மீட்கப்பட்ட கேரள கஞ்சாவின் பெறுமதி ரூபாய் 20 இலட்சத்திற்கு அதிகமானது என கூறப்படுகிறது. (செ-4)


FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH

FLC

பிரெஞ்சு மொழி வகுப்பு



(C-4627)

Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French

FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.

விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)

DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1095 மாணவர்கள் French கற்றுள்ளனர்....

DELF A1,A2,B1 வகுப்புக்கள் ஆரம்பம் உடன் பதியுங்கள்...

No. 40, பலாலி வீதி, இலுப்பையடி. 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 28.05.16 சனி 10 am.

பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 30.05.16 Mon@ 4pm.

ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




(C-4628)

CNR World wide Express No.401 Clock tower road, Jaffna. (பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062


# கனமழை, நிலச்சரிவினால்...

உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இது வரை 3 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சுமார் 2 லட்சம் மக்கள் இந்த இயற்கை பேரிடரால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களில் பாதி பேர் கொழும்பு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்றும் பேரிடர்மேலாண்மை மையம் தெரிவித்துள்ளது.

தொடர் மழை காரணமாக ஆறுகள் மற்றும் அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து கொண்டே செல்வதால், மதகுகள் திறக்கப்பட்டுள்ளன. மேலும், அதன் அருகே வசிக்கும் மக்களுக்கு பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல முன்னெச்சரிக்கை அறிவிப்பும் விடுக்கப்பட்டுள்ளன.

இந்த இயற்கை பேரிடரில் நாடு முழுவதும் ஆயிரத்து 300 வீடுகள் சேதமடைந்துள்ளதாக பேரிடர் மேலாண்மை மையம் கூறியுள்ளது.

மேலும், சுமார் 50 ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த 2 இலட்சத்து 10 ஆயிரம் பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த பேரிடரால் ஒரு இலட்சத்து 34ஆயிரத்து 406 பேர் இடம் பெயர்ந்துள்ளனர் என்கிறார் பேரிடர் மேலாண்மை மையத்தின் அதிகாரி ஒருவர்.

வீதிகளில் வெள்ள நீர் பாய்ந்து ஓடுவதாலும், மண் சரிவு ஏற்பட்டுள்ளதாலும் சில பகுதிகளில் போக்குவரத்து தடைகளும் காணப்படுகின்றது.

இச்சூழலில், குறைந்த காற்றெழுத்த தாழ்வு நிலையானது நாட்டை விட்டு விலகிச் செல்வதாகவும், இதனால் மழையின் அளவு சற்று குறையும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. ஆனால், காற்றின் வேகம் அதிகமாகவே இருக்கும் என இலங்கை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. (செ-11)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தரம்-5 மாணவர்களுக்கான
# புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-11

பகுதி-I **தமிழ்க் கல்விக் கழகம்** நேரம்:- 45 நிமிடங்கள்


◆ 01 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

வினா1-2 வரையிலான வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான உரு எது?

01. இரவு வேளையில் நடமாடும்
நீரில் முட்டையிட்டு இனம் பெருக்கும்




1)  2)  3) 

02. நீரில் செல்லும், வேகமாகச் செல்லும்
எரிபொருள தேவையில்லை




1)  2)  3) 

◆ வித்தியாசமான உருவின் கீழ்க் கோடிடுக.

03.


1)  2)  3) 

04.

1)  2)  3) 

பின்வரும் எழுத்துக்களை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது தோன்றும் விதங்களைத் தெரிவு செய்க.

05.  1)  2)  3) 

06.  1)  2)  3) 

◆ வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

07. இறுதிப் போட்டியின் தோல்வியினால்............................அடைந்த வீரர்கள்.......................

1) மகிழ்ச்சி-ஆரவாரம் செய்தனர். 2) கவலை -கண்ணீர்விட்டனர். 3) இன்பம்-கண்ணீர்விட்டனர்.

08. திருகோணமலை மாவட்டத்தின் கண்ணியாவில்................ஊற்றுக்கள் உள்ளன.

1) வென்னீர் 2) வெந்நீர் 3) வென்நீர்

09. SONS எனும் சொல்லைக் குறியீடுகளால் எழுதினால் அமையும் முறை எது?

1) △□○△ 2) △△○□ 3) ○△○□

◆ பழமொழிக்குப் பொருத்தமான கருத்தைத் தரும் விடையைத் தெரிவு செய்க.

10.அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பதன் பொருள் யாது?

1)சிறு துளிகள் சேர்ந்து பெரு வெள்ளமாகின்றது

2)சிறுகச் சிறுகச் சேமித்தால் அது பெரும் செல்வமாகின்றது

3)ஒற்றுமையே பலம்

11.ஆறின கஞ்சி பழங்கஞ்சி என்பதன் பொருள் யாது?

1) ஒரு செயலை நீண்ட நாளைக்குப் பிறகு செய்தல்

2)ஒரு பயனைப் பெற முயலுதல்

3)எதையும் உரிய வேளையில் செய்யாவிட்டால் அதனால் ஏற்படும் பயன் குறையும்

12.இடது பக்கமும் வலது பக்கமும் சமநிலையாக உள்ள வரிசை எது?

1)57@4&2 574@&2

2)ABCDEF ABDCEF

3)R$810J R$810J

13.டெங்குக் காய்ச்சல் இத்தினங்களில் மிக வேகமாகப் பரவுகின்றது. இந்த நோய் பரவுவதை தடுப்பதற்கு செய்யக்கூடியது பின்வருவனவற்றுள் எது?

1)டெங்கு நோயாளர்களை வேறாக்கி வைத்தல்

2)டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களை அழித்தல்

3)வைத்தியசாலைகளில் வசதிகளை அதிகரித்தல்

14. நாம் இயன்றளவு பொலித்தீன் பாவனையைக் குறைக்கவேண்டும். அதற்குரிய காரணமாக அமைவது எது?

1)பொலித்தீன் சுகாதாரத்திற்கு தீங்கை ஏற்படுத்தும் என்பதனாலாகும்

2)பொலித்தீன் மிகக்கூடிய விலையை உடையது என்பதனாலாகும்

3)பொலித்தீன் உக்கிப் போகாது என்பதனாலாகும்

◆ **இலக்கம் 15,16 ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள உருக்களை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.**


15. A  B  C  D  E  F 

**இக் கூட்டங்களைச் சரியாக காட்டும் விடையத் தெரிவு செய்க.**

1) AF CE BD

2) AB CD EF

3) BC DE AF

16. A  B  C  D  E  F 


**இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.**

1) AF : CE : BD

2) AB : CD : EF

3) BC : DF : AE

17. 10cm



**இந்தச் சதுரவடிவ கம்பியைச் சுற்றி எறும்பொன்று ஒருமுறை பயணித்து வந்தால் பயணித்த மொத்த தூரம் யாது?**

1) 40cm 2) 20 cm 3) 30 cm

◆ **18,19 ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் மூன்று கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன.அவற்றுள் ஒன்று தவறானது அதனைத் தெரிவு செய்து கோடிடுக.**

18. 1)கரப்பான் பூச்சியின் முட்டையின் நிறம் மஞ்சள்
2)பல்லி முட்டையின் நிறம் வெள்ளையாகும்
3)யானை முட்டையின் நிறம் கறுப்பு ஆகும்


19. 1)நாய்க்குப் பயந்தது பூனை 2)மனிதனுக்குப் பயந்தது சிங்கம் 3) பூனைக்குப் பயந்தது எலி

20.மாணவனிடம் எப்போதும் இருக்க வேண்டியது
1)பென்சிலும் கொப்பியும் 2)காசியும் சப்பாத்தும் 3)சைக்கிளும் புத்தகமும்

21.கிணற்றில் எப்போதும இருக்க வேண்டியது
1)வாளி 2)மீன் 3)நீர்


◆ **எண்கோலங்களை விளங்கி வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்து கோடிடுக.**

22.





1) 19 2) 15 3) 14

23.




1) 6 2) 5 3) 2




**இத்தாயக்கட்டையின் எல்லா எதிர் எதிராக உள்ள இரு முகங்களினதும் இலக்கங்களின் கூட்டுத்தொகை ஏழு அகும். அதற்கேற்ப கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

24.அதன்படி இலக்கம் 1இற்கு எதிராக உள்ள இலக்கம் எது?
1) 3 2) 5 3) 6


25.இலக்கம் 4இற்கு எதிராக உள்ள இலக்கம் எது?
1) 3 2) 5 3)6


◆ **கோழிகள் கூவின.குருவிகள் கீச் கீச் என்று சத்தமிட்டன. கிழக்கு மாகாணம் வெளுத்தது.பின் மெல்ல மெல்லச் சிவந்தது.செங்கதிர்ச் செல்வன் வெண்கதிர் பரப்பித் தோன்றினான்.**

26.பந்தியில் குறிப்பிடப்படும் காட்சி எது?
1)மாலைக்காட்சி 2)சூரியோதயக்காட்சி 3)நிலாக்காட்சி

27.உயர்திணை, ஆண்பால், பெயர்ச்சொல் எது?
1)கோழிகள் 2)வானம் 3)செல்வன்

28.தம்பிக்கு எட்டு வயது ஆகும்.அதனைவிட மூன்று மடங்கு அம்மாவின் வயது ஆகும்.அக்காவின் வயது அம்மாவின் வயதின் அரை வாசியாகும்.தற்போது அக்காவின் வயது யாது?
1)12 2)24 3)8




29.மேலுள்ள தகவலின்படி ஒரு பென்சிலின் விலை யாது?

1)20.00 2)15.00 3)10.00

30)பேனா ஒன்றினதும் பென்சில் ஒன்றினதும் விலை யாது?

1)20.00 2)25.00 3)35.00

◆ பின்வரும் அட்டவணையை வைத்து வினாக்களுக்கு விடை தருக

| | | | |
|---|---|---|---|
| ○ | ○ | ○ | 9 |
| △ | □ | □ | 10 |
| ○ | △ | □ | 9 |
| 8 | A | 11 | |

31.A என்ற இடத்தின் பெறுமதி யாது?

1)9 2)8 3)10

32. □ எனும் குறியீடு குறிக்கும் பெறுமானம்?

1)4 2)3 3)2

◆ கீழேயுள்ள சொற்கூட்டங்களில் ஒவ்வொரு சொல்லிலும் ஒவ்வொரு எழுத்தை தெரிந்து சேர்ப்பதன் மூலம் கருத்துள்ள ஒரு சொல் உருவாகும். அதனை தெரிவு செய்க.

33.நாளை/குணம்/வயது/பாவம்

1)நாணம் 2)நாணயம் 3)குயவர்

34.சிலந்தி/வறுமை/கபடம்/தையல்

1)சிதையல் 2)சிறுபடம் 3)சிறுகதை

35.ஆவணி/பந்தல்/கழித்தல்/துணி

1)பழித்தல் 2)ஆபத்து 3)வந்து

36. சதுர வடிவில் அமைக்கப்பட்டுள்ள காணி ஒன்றில் அதனைச் சுற்றி கம்பங்கள் நடப்பட்டுள்ளன.ஒருபக்கம் 10 கம்பங்கள் உள்ளன எனில் அங்குள்ள உண்மையான கம்பங்கள எத்தனை?

1)40 2)38 3)36

37.அண்ணனிடம் அக்காவை விட ரூபா 10.00 அதிகமாக இருந்தது.அக்காவிடம் என்னைவிட ரூபா 6.00அதிகமாக இருந்தது. அண்ணனிடம் உள்ளது ரூபா 22.00ஆயின் என்னிடம் உள்ள பணத்தொகை எவ்வளவு?

1)ரூபா 6.00 2)ரூபா 12.00 3)ரூபா 10.00

38.இரு இலக்கங்களின் கூட்டுத்தொகை 70ஆகும்.இவ்விரு இலக்கங்களுக்கும் இடையிலான வித்தியாசம் 10ஆகும்.ஆகவே அவ்விரு இலக்கங்களும் எவை?

1)50,20 2)40,30 3)60,10

39.சேரனின் மனைவி கமலா. கமலாவின் தம்பி இராமன். கமலாவுக்கு பிறந்த பிள்ளை ரதி ஆகும். குமாரி இராமனின் மனைவி ஆவார். குமாரிக்கு ரவி என்ற ஆண் பிள்ளை ஒன்று உள்ளது.ரவிக்கு சேரன் என்ன உறவு முறை?

1)சிற்றப்பா 2)பாட்டன் 3)மாமா

40.ஒரு மரத்தின் உயரம் 10m ஆகும்.குமார் 4m ஏறினால் 2m சறுக்குவான். அவன் அம்மரத்தை சென்றடைய எத்தனை தடவைகளில் ஏறி முடிப்பான்.

1)6 2)5 3)4

இவ் வினாக்களுக்குரிய விடைகள் நாளை வியாழக்கிழமை (18.05.2016) வலம்புரி பத்திரிகையில் பிரசுரமாகும்.

◆◆◆

**தமிழ்க் கல்விக் கழகத்தின் ஆசிரியர் குழாம்**

★யோகராசா -துஷ்யந்தன் (இயக்குநர்)

★அ.நிமலகாந்தன் (யா/இணுவில் மத்திய கல்லூரி)

★றோ.சிவபுத்திரன் (யா/கோப்பாய் மகாவித்தியாலயம்)

★G.மோகன்ராஜ் (ISA வலயக்கல்விப் பணிமனை, நுவரெலியா)

★K.L.M.நபீல் (ஹ/ஸாஹிரா தேசிய பாடசாலை, ஹம்பாந்தோட்டை)

★M.S.குகன் (யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம்)